Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 24 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :284 ஆவணி 24 ஆம் நாள் புதன்கிழமை 09 செப்ரெம்பர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## அரச பணியாளர் மீது வாள்வெட்டுத் தாக்குதல்

யாழ்ப்பாணம், செப்.9
கோப்பாய் - கைதடி வீதியில் பயணித்த அரச ஊழியர் மீது இனந் தெரியாதவர்கள் வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தியுள்ளனர். அதில் கையில் காயமடைந்த அரச ஊழி 22

## எம்.பியானார் பிரேமலால்

கொழும்பு, செப். 9
தூக்குத் தண்டனைக் குற்றவாளியான பிரேமலால் நேற்று நடந்த நாடாளு 22

## குற்றவாளிக்கு எம்.பி.பதவியா?

*எதிர்க்கட்சி வெளிநடப்பு*

கொழும்பு, செப். 9
தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள கொலைக்குற்றவாளியான பிரேமலால், 22

## இளைஞர்களின் ஒற்றுமை வரவேற்கின்றார் சித்தர்!

யாழ்ப்பாணம், செப். 9
தமிழ்த் தேசியக் கட்சிகளின் இளைஞரணிகள் ஒற்றுமையாகச் செயற்படுவதை 22

## சிகிச்சைக்கு சேர்க்கப்பட்ட குடும்பஸ்தர் உயிரிழப்பு

*சந்தேகத்தில் உறவினர்கள் குழப்பம்*

வவுனியா, செப்.9
வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட 22

## பட்டப் பகலில் வீடுடைத்து 23 பவுண் நகைகள் திருட்டு

*ஆவரங்காலில் சம்பவம்*

யாழ்ப்பாணம், செப்.9
யாழ்ப்பாணம், ஆவரங்கால் பகுதியில் ஆள்கள் இல்லாதபோது 22

# பேய் ஆள்கின்ற நாட்டில் பிணம் தின்னும் சாத்திரம்

## தூக்குத் தண்டனைக் கைதி எம்.பி! சந்திரிகா, மங்கள கடும் ஆட்சேபம்



கொழும்பு, செப்ரெம்பர் 9
குற்றவாளிகளும், கொலையாளிகளும் ஆட்சிப்பீடத்தில் இருக்கும்போது தூக்குத் தண்டனைக் கைதி ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்பதும் சகஜம்தான். இந்தக் கொலைகார ஆட்சிக்கு ஆணை வழங்கிய நாட்டு மக்கள் தலைகுனிந்து வெட்கப்பட வேண்டும். 22

### முச்சந்தி முரளி



"ஆட்டைக் கடிச்சு இப்ப மாட்டிறைச்சியையும் கடிக்க வெளிக் கிட்டாச்சு..அப்போ இனி அடுத்ததா எங்களை எப்போ கடிக்கப் போறாங்களோ"

## மாட்டிறைச்சிக்கு வருகிறது தடை?

கொழும்பு, செப்.9
கால்நடைகளைக் கொலை செய்வதற்குத் தடை விதிப்பது தொடர்பாக பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்த யோசனைக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் ஆதரவு 22

## வீடு தேடி 'பிசி' படிவம் வராவிடில் முறையிடலாம்

### உதவித் தேர்தல்கள் ஆணையாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 9
வாக்காளர் பதிவு விண்ணப்பப் படிவங்கள் (பிசி படிவம்) வீடு வீடாக கிராம அலுவலர்கள் ால் வழங்கப் 21

## ஒரு வருடத்தில் புதிய அரசமைப்பு

*ஆறு மாதத்துக்குள் வரைவு நகல் நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு*

கொழும்பு, செப்.9
புதிய அரசமைப்பு ஓராண்டு காலப்பகுதிக்குள் இயற்றப்படும். நிபுணர் குழுவுக்கு தனது அறிக்கையை முன்வைப்பதற்கு ஆறு மாதகால 22

## பொன்னாலை வரதராஜ பெருமாள் தேர்

யாழ்ப்பாணம், செப்.9
பொன்னாலை ஸ்ரீவரதராஜப்பெருமாள் ஆலய இரதோற் 21

## மூன்று வயது சிறுமி குளவி கொட்டி சாவு

வவுனியா, செப்.9
வவுனியா, ஓமந்தை நொச்சிமோட்டைப் பகுதியில் குளவியின் தாக்குதலுக்குள்ளாகி மூன்று வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார். அருள்ராசன் சமிஸ்கா என்றமூன்று வயது சிறு 21

## மீள்குடியமர அனுமதிக்கப்படாத மக்களுக்கு அவசர அறிவித்தல்!

யாழ்ப்பாணம், செப். 9
வலி.வடக்கில் மீளக்குடியமர அனுமதிக்கப்படாத 21 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் தமது பெயர்கள் வாக்காளர் பெயர்ப் பட்டியலில் உள்ளடக்கப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

மீளக்குடியமர அனுமதிக்கப்படாத கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களில், யாழ்ப்பாண மாவட்ட நிர்வாக எல்லைக்குள் வசிப்ப 22

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.66,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
• அதிகபட்ச இரகசியத் தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
011 200 88 88
செலான் வங்கி

பெற்றுக் கொள்ள விருப்பமான
DATA LOAN
326 MB RS. 29
896 MB RS. 49
1793 MB RS. 99
எதிர்பாராமல் டேட்டா முடிந்து விட்டால் டக்கென்று மொபிடெல் இடமிருந்து பிரச்சினைகள் எதுவுமில்லாமல் டேட்டா லோன் ஒன்றைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
செயற்படுத்த அழையுங்கள்
#170#
4G
Sri Lanka Telecom Mobitel

# இந்த மாதம் 28 முதல் டெங்கு ஒழிப்பு வாரம்

**யாழ்ப்பாணம், செப்.9**

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இந்த மாதம் 28ஆம் திகதியில் இருந்து டெங்கு ஒழிப்பு வாரம் கடைப்பிடிக்கப்படவுள்ளது என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.**

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று டெங்கு ஒழிப்பு சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்த போதே மாவட்டச் செயலர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

மழை காலம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில்அனைவரும்இணைந்து செயற்பட வேண்டும். கழிவகற்றல் இங்கு பெரும் பிரச்சினையாக இருக்கின்றது. வீதிகளிலும், வெறும் காணிகளிலும் பொதுமக்கள் கழிவுகளைக் கொண்டுவதைக் காண முடிகின்றது. இவ்வாறான நடவடிக்கைகள் தடுக்கப்பட வேண்டும்.

பராமரிக்காத காணிகளை உள்ளூராட்சி சபைச் சட்டத்தின்படி சுவீகரிக்க முடியும். பாவனையில் இல்லாத காணிகளுக்கு விளம்பரப் பதாகைகளை இடுங்கள். அப்போது உரிமையாளர்கள் தாங்களாக முன்வந்து காணிகளைப் பராமரிப்பார்கள். உள்ளூராட்சி சபையினர் வெற்றுக் காணிகள் தொடர்பாக அதிக கவனம் எடுக்க வேண்டும்.

பொது சுகாதாரப் பரிசோதகர்கள், உள்ளூராட்சிச் சபையினர் டெங்கு ஒழிப்புத் தொடர்பில் அதிக கவனம் எடுக்க வேண்டும். இதுவரை நாம் டெங்கு ஒழிப்பில் திறமையாகச் செயற்பட்டிருந்தோம். எதிர்காலத்திலும் அவ்வாறு செயற்படுவதன் ஊடாகவே டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்த முடியும்.

மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதத்தில் இந்த மாதம் 28ஆம் திகதியில் இருந்து ஒருவாரம் டெங்கு ஒழிப்பு வாரமாக அறிவிக்கப்படவுள்ளது. டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டங்கள் மேற்கொள்ள வேண்டிய இடங்களை இனங்கண்டு, கழிவுகளை அகற்றி டெங்கு ஒழிப்புச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படும். - என்றார்.

இந்தக் கூட்டத்தில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர்.கேதீஸ்வரன், வடக்கு மாகாண சமுதாய வைத்திய நிபுணர் மருத்துவர் சிவகணேஷ், பிராந்திய தொற்று நோயிலாளர் வைத்தியர் மோகன், உள்ளூராட்சி சபைத் தவிசாளர்கள், செயலாளர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பொ லிஸ் அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ111)

## கிராம அலுவலர் தெரிவுக்கான நேர்முகத் தேர்வு 24, 25ஆம் திகதிகளில்

யாழ்ப்பாணம், செப். 9

கிராம அலுவலர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முகத் தேர்வுகள் எதிர்வரும் 24ஆம் மற்றும் 25ஆம் திகதிகளில் மாவட்டச் செயலகங்களில் நடத்தப்படவுள்ளது.

நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதுடன், மாவட்டச் செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 77 பேர் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

தேவை

வடிவமைப்பாளர்

Graphic designers

Indesign
Adobe photoshop
Corel draw
என்பவற்றில்
வடிவமைப்பு அனுபவம்
கொண்டவர்களுக்கு
உடனடி வாய்ப்பு

IT Administrator

Manage electronic equipment
Install network and computer system
Maintain, repair and upgrade the operating system including hardware and software
Monitor the performance of existing computer systems and IT infrastructures
முன்னனுபவம் விரும்பத்தக்கது

நீங்கள் பொருத்தமானவரா?
சுயவிவரக் கோவையை
உடனே அனுப்புங்கள்.



சுயவிவரக் கோவைகளை அனுப்ப வேண்டிய முகவரி
மனிதவள முகாமையாளர்,
361, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
info@uthayan.com

## இணையவழி மோசடி நாட்டில் அதிகரிப்பு!

### இதுவரை 71 முறைப்பாடுகள்

கொழும்பு, செப்.9

நாட்டில் இணையத்தளம் அல்லது சமூக வலைத்தளங்கள் ஊடாக நடக்கும் மோசடிகள் அதிகரித்துள்ளன என்றும், இந்த ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் இணையத்தள மோசடிகள் தொடர்பாக 71 விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

வேலைவாய்ப்பு பெற்றுத்தரப்படும் என்று கூறி நடந்த மோசடி தொடர்பில் 14 முறைப்பாடுகளும் , மோட்டார் சைக்கிள் அல்லது லொத்தர் சீட்டிழுப்பு மூலம் பரிசுப் கிடைத்துள்ளது என்று தெரிவித்து மக்களை ஏமாற்றியமை தொடர்பில் 28 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

இவற்றில் மோட்டார் சைக்கிள் அல்லது வேறு ஏதேனும் பரிசு பொருள் கிடைத்துள்ளது என்று கூறி நடந்த 4 மோசடிகள் மற்றும் லொத்தர் பரிசு கிடைத்துள்ளது என்று கூறி இடம்பெற்ற 20 மோசடிகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. -என்றார். (எ-இ)

# அதிகாரம் கிடைத்தால் அனைவரும் “உள்ளே”

## அநுரகுமார கூறுகின்றார்



**கொழும்பு, செப்.9**
**மோசடி செய்பவர்களையும் குற்றவாளிகளையும் தண்டிக்கும் அதிகாரம் எனக்கு இருந்தால், இன்று ஆளும் கட்சியில் பலர் இருக்க மாட்டார்கள் என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திசாநாயக்க.**

நேற்று நடந்த நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாங்கள் ஆட்சிக்கு வந்தால், மோசடி செய்பவர்கள் யாரும் நாடாளுமன்றத்திற்கு வரமாட்டார்கள். அணிந்திருக்கும் ஆடை வெள்ளையாக இருந்தாலும் அவர்களது உள்ளங்கள் கருமையாகதான் உள்ளன.

இப்போது எனது கருத்துக்கு எதிர்ப்பை வெளியிட்டு எழும்பியவர்களில் பெரும்பாலானோர் நில மோசடி, வரிமோசடி மற்றும் அரச ஊழியர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தியவர்களே. 1989ஆம் ஆண்டு சம்பவங்கள் நடைபெற்றிருந்தால் தண்டணை வழங்குவதற்கு 31வருடங்கள் இருந்தன. தண்டிக்கப்பட நாங்களும் விரும்புகின்றோம்.

தற்போது வாதிட்ட புதிய முகங்கள் தொடர்பாக எனக்குப் பெரிதாக தெரியாது, ஆகவே பழைய முகங்கள் எழும்பினால் அவர்கள் தொடர்பாக என்னால் பல விடயங்களைத் தெரியப்படுத்த முடியும்.

தற்போது ஆட்சிப்பீடம் ஏறியுள்ளது புதிய அரசு அல்ல. சிறிய மாற்றங்கள் மாத்திரமே இந்த அரசில் செய்யப்பட்டுள்ளன என்றார்.

(எஇ)

# இரவு தூங்கச் சென்றவர் காலை சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், செப்.9
இரவு உணவு அருந்திவிட்டு தூங்கச் சென்ற இளைஞர் அதிகாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சுன்னாகம், காளி கோயிலடியைச் சேர்ந்த யோகந்திரன் கேமராஜ் (வயது31) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சுன்னாகத்தில் உள்ள பலசரக்கு கடை ஒன்றில் பணியாற்றும் இவர் நேற்றுமுன்தினம் இரவு வழமை போன்று உறங்கச் சென்றுள்ளார். நேற்று அதிகாலை அவர் அசைவற்றுக் காணப்பட்டதால் வீட்டிலிருந்தவர்கள் அவரை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். எனினும் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தினர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(எ-25)

# கந்தகாடு மையத்தில் 9 பேருக்குத் தொற்று!

கொழும்பு, செப்.9
நாட்டில் நேற்று கொரோனா தொற்றுக்குள்ளான 17 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். அவர்களில் 9 பேர் கந்தகாடு போதைப் பொருள் மறுவாழ்வு மையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகள் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் இதுவரை கண்டறியப்பட்ட கொரொனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 140 ஆக உயர்ந்துள்ளது.

நேற்று இனங்காணப்பட்டவர்களில் 6 பேர் கட்டாரில் இருந்தும், இருவர் குவைத்தில் இருந்தும் நாடு திரும்பிய நிலையில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டவர்களாவர். குவைத்தில் இருந்து திரும்பிய இருவரும் வவுனியா, பெரியகாடு தனிமைப்படுத்தல் மையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

(எ-இ)

# 20'க்குச் சமாதி கட்டி '19 பிளஸ்'க்கு உயிர்!

## ஐக்கிய மக்கள் சக்தி சபதம்

கொழும்பு, செப்.9
ஜனநாயகத்துக்கு அஞ்சலி செலுத்துவதற்காக முன்வைக்கப்படவுள்ள மரணப்பொறியான '20' ஆவது திருத்தச் சட்ட மூலத்தை தோற்கடிப்பதற்கான 'ஜனநாயகப் போராட்டம்' உள்நாட்டு சக்திகளின் பங்களிப்புடன் நாட்டுக்குள்ளேயே முன்னெடுக்கப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

'20' ஆவது திருத்தச்சட்டமூலத்துக்கு எதிராக ராஜித சேனாரத்ன தலைமையில் கொழும்பில் நேற்று நடைபெற்ற சத்தியாக்கிரக போராட்டத்தில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மக்களுக்கான ஆட்சியை முன்னெடுக்கவேண்டிய யுகத்தில் தனிநபரின்கீழ் அதிகாரங்களைக் குவிப்பதற்கான ஜனநாயக விரோத நடவடிக்கையாகவே 20ஆவது திருத்தச் சட்டமூலம் முன்வைக்கப்பட்டுள்ளது.

ஜனநாயகத்துக்கு முடிவுகட்டி ஏதேச்சாதிகாரத்தை நோக்கிப் பயணிப்பதே அதன் நோக்கம். நாட்டிலுள்ள அனைத்து முற்போக்கு சக்திகளையும் ஒன்றுதிரட்டி '20' ஐ தோற்கடிப்பதற்கான ஜனநாயக போராட்டத்துக்கு தலைமைத்துவம் வழங்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவே இருக்கின்றது. மக்கள் சக்தி ஊடாகவே இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

20 ஆவது திருத்தச்சட்டமூலத்தை தோற்கடிப்பது மட்டும்அல்ல எமது நோக்கம், அதற்கு சமாந்தரமாக '19 பிளஸ்' திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்படும். நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்துவதற்கான திட்டமே 19 பிளஸ் என்பது. 19 இல் உள்ள குறைபாடுகளை நிவர்த்திசெய்து அதனை இதன்மூலம் பலப்படுத்தமுடியும். 19 மூலம் சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு போதுமாளனவு அதிகாரங்கள் கிடைக்கவில்லை. 19 பிளஸ் ஊடாக அவற்றை வலுப்படுத்துவதற்கான திட்டங்கள் முன்வைக்கப்படும். தேசிய பாதுகாப்புக்கும் இதில் முன்னுரிமை வழங்கப்படும்.

அதேவேளை, '20' ஐ தோற்கடிப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கையில் நாம் இறங்கியுள்ள நிலையில் அது தொடர்பில் மாறுபட்ட கோணத்தில் விமர்சனங்களை முன்வைக்கலாம், திசை திருப்பும் நோக்கில் அறிவிப்புகளை விடுக்கலாம். எனவே, உள்நாட்டை மையப்படுத்தியே எமது நடவடிக்கைள் அமையும். கருத்தரங்குகள், விழிப்புணர்வுக் கூட்டங்கள் எல்லாம் நகர, கிராம மட்டங்களில் முன்னெடுக்கப்படும். அனைவரையும் எம்முடன் இணையுமாறு அழைப்பு விடுக்கின்றேன். என்றார்.

(எ44)

# நுண்கடன் பொறிக்கு மஹிந்தவே காரணம்!

## சபையில் கஜேந்திரகுமார் சுட்டிக்காட்டு

கொழும்பு, செப்.9
போருக்குப் பின்னர் தமிழ் மக்கள் நுண்கடன் பொறியில் சிக்கி தற்கொலை செய்துகொள்ளும் நிலை உருவாக அப்போதைய ஜனாதிபதியாக இருந்தவரும் தற்போதைய பிரதமருமான மஹிந்த ராஜபக்சவே காரணம்.

இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சபையில் குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை, நிதி அமைச்சின் செயலாற்றுகை அறிக்கை மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

மஹிந்த ராஜபக்சவின் ஆட்சியிலேயே நுண்கடன் நிறுவனங்கள் காளான்கள் போன்று முளைத்தன. எனவே, அவர் ஆரம்பித்துவிட்டதை அவரே முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்.

நுண்கடன் (வழங்கும்) முறைசார், முறைசாரா நிறுவனங்கள் மூலமாக எமது மக்கள் தற்கொலை செய்துகொள்ளும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். மூன்று தசாப்தங்களாகப் போருக்கு முகங்கொடுத்த எமது மக்கள் பொருளாதார ரீதியில் மிகவும் இறுக்கமான கட்டுப்பாட்டுக்குள் இருந்தனர்.

பொருளாதாரப் பின்னடைவைச் சந்தித்திருந்த எமது தமிழ் மக்கள் போருக்குப் பின்னர் ஏனைய பகுதி மக்களைப் போன்று சமமான நிலைமைக்கு வர வேண்டும் என நினைத்தனர். இதனைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட நுண்கடன் நிறுவனங்கள் வடக்கு, கிழக்கில் காளான்கள் போன்று முளைக்க ஆரம்பித்தன.

மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த காலத்திலேயே இந்தக் கடன் நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. அதைச் சற்றும் கண்டுகொள்ளாது மஹிந்த ராஜபக்ச வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்.

உண்மையைக் கூறுவதென்றால் போருக்குப் பின்னரே வடக்கில் தற்கொலை இறப்புகள் அதிகரித்தன. இதற்கு அத்திவாரம் போட்டவரே இப்போதைய பிரதமரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜக்சதான். நீங்களே ஆரம்பித்துவிட்ட விடயத்தை நீங்களாகவே நிறுத்த வேண்டும். நுண்கடன் நிறுவனங்களிடம் இருந்து எமது மக்களைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த நுண்கடன் திட்டங்கள் கடன் பொறி அல்ல, இவையெல்லாம் எமது மக்களுக்கான மரணப்பொறியாகும். தமிழர்களின் பொருளாதாரத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

அதேபோல் காணி உரித்துகள் வழங்கப்படுவது குறித்தும் அரசு கூறியிருந்தது. ஆனால், எமது பகுதிகளில் தொடர்ந்தும் காணி அபகரிப்பு இடம்பெற்று வருகின்றது. வடக்கில் பல இடங்களில் காணிகள் அபகரிக்கப்படுகின்றன. தமிழர்களின் நிலங்களை இராணுவம் கைப்பற்றி விவசாயம் செய்து வருகின்றது. சிங்களவர்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழர்கள் மீண்டும் பூஜ்ஜியத்தில் இருந்து வாழ்கையை ஆரம்பிக்க வேண்டியுள்ளது. இதற்கும் அரசு தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். அரசு கண்டிப்பாக களத்தில் இருந்து மக்களின் பக்கம் சிந்திக்க வேண்டும் என்றார்.

(எ22)

# இருவர் கைது



கொடிகாமம், செப்.9

நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட இருவர் கொடிகாமம் பொலிஸா ரால் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை கைது செய்யப்பட் டுள்ளனர்.

கொரோனாத் தொற்றுக் காலத்தில் ஊரடங்குச் சட்டத்தை மீறிய ஒருவர் நீதிமன்ற வழக்குக்கு செல்லாத நிலையில் அவருக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

அதேவேளை, களவு சம் பந்தமான வழக்கொன் றில் சந்தேக நபர் நீதி மன்ற வழக்குக்குச் சமூக மளிக்காத நிலையில் அவருக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இவர்கள் இருவரும் நேற் றுமுன்தினம் பொலிஸா ரால் கைது செய்யப்பட்ட னர். நேற்று அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப் பட்டனர். ஊரடங்கு சட் டத்தை மீறியவருக்கு ஆயிரம் ரூபா தண்டம் விதித்த நீதிமன்று, களவு தொடர்பான வழக்கில் தொடர்புபட்டவரை 50 ஆயிரம் ரூபா பெறுமதி யான ஆள் பிணையில் செல்ல அனுமதித்தது. (எ-159)

# பிரேமலால் சத்தியப்பிரமாணம் அப்பட்டமான அரசமைப்பு மீறல்

## சரத் பொன்சேகா கொதிப்பு



கொழும்பு, செப்.9

**தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவர் நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்ள முடியாது என அரசமைப்பிலேயே கூறப்பட்டுள்ளது. இந்த நிலையில் தூக்குத் தண்டனை விதிக் கப்பட்ட குற்றவாளி ஒருவர் சபாநாயகர் முன்பாக சத்தியப்பிர மாணம் செய்துள்ளமையை ஏற்றுக்கொள்ள முடியாது. இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரி வித்துள்ளார்.**

தூக்குத் தண்டனை விதிக் கப்பட்ட பிரேமலால் ஜய சேகர, நாடாளுமன்ற உறுப் பினராக நேற்று நாடாளு மன்றில் சத்தியப்பிரமா ணம் செய்து கொண்டார். அதற்கு சஜித் பிரேமதாஸ தரப்பினர் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

இது தொடர்பாகக் கருத் துத் தெரிவித்தபோதே நாடாளுமன்ற உறுப்பி னர் சரத் பொன்சேகா மேற்கண்டவாறு தெரிவித் தார். அவர் தெரிவித்துள் ளதாவது;

தூக்குத் தண்டனை விதிக் கப்பட்ட ஒருவர் நாடாளு மன்ற அமர்வுகளில் கலந்துகொள்ள முடியாது என அரசமைப்பிலேயே கூறப்பட்டுள்ளது. இந்த நிலையில், தூக்குத் தண் டனை விதிக்கப்பட்ட ஒரு குற்றவாளி, சபாநாயகர் முன்னிலையில் நாடாளு மன்ற உறுப்பினராக சத் தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

2010 ஆம் ஆண்டு என்னை சிறைக்குள் தள் ளினார்கள். அன்று ஆட் சியில் இருந்த ஜனாதிபதி யின் உத்தரவுக்கு அமை வாகவே நான் கைது செய் யப்பட்டேன். 30 மாதங் கள்வரைநான்தண்டனை பெற்றிருந்தேன். அதன் பின்னர்தான், நான் நாடா ளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய் துகொண்டேன்.

ஆனால், இன்று குற்றவா ளியொருவர் நாடா ளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய் து கொண்டுள்ளார். அன்று எனக்கு நாடாளு மன்றுக்கு வர சபாநாயகர் அனுமதி வழங்கவில்லை. அப்படியிருக்கும்போது, இப்போது இவருக்கு மட் டும் எவ்வாறு அனுமதி வழங்கப்பட்டது என கேள்வி எழுப்ப விரும்பு கிறேன்? என்றார். (எ-இ)

# கானியா பெனிஸ்டர் வழக்கை விரைவாக முடிக்கப் பணிப்பு!

கொழும்பு, செப்.9

கடத்தித் தடுத்து வைக்கப்பட்டு பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டார் என்று பொய்யான தகவல்களை வழங்கி, நாட்டை அசௌகரியத்தை உள்ளாக்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக் கப்பட்ட சுவிஸ் தூதரக நுழைவிசைவுப் பிரிவின் அதிகாரி கானியா பெனிஸ்டர் பிரான்சிஸ் தொடர் பான விரிவான அறிக்கையை எதிர்வரும் நவம்பர் மாதம் 5ஆம் திகதி மன்றுக்கு வழங்க வேண்டும் என்று கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணைகள் நேற்று கொழும்பு பிரதான நீதிவான்லங்கா ஜயரத்ன முன்னிலையில் விசாரணைக்கு வந்தபோதே குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நேற்று சுவிஸ்லாந்து தூதரகத்தின் விசா பிரிவின் சிரேஷ்ட குடிவரவு குடியகல்வு அதிகாரி கானியா பெனிஸ்டர் பிரான்சிஸ் மன்றில் முன்னிலையான துடன், அவர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி உபுல் குமரப்பெரும முன்னிலையானார். விசார ணையாளர்கள் சார்பில் குற்றப் புலனாய்வுப் பிரி வின் பொலிஸ் பரிசோதகர் இக்பால் முன்னிலை யானார்.

மேலதிக விசாரணை அறிக்கையை மன்றுக்குச் சமர்ப்பித்த பொலிஸ் பரிசோதகர் இக்பால், இந்த விவகாரத்தில் இதுவரை முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகளின் பிரகாரம், 607 மணித்தியாலம் வரை நீண்ட பாதுகாப்புக் கமரா பதிவுகள் கைப்பற் றப்பட்டன என்றும், அவை பகுப்பாய்வுக்காக அரச இரசாயன பகுப்பாய்வாளருக்கு அனுப்பப்பட்டுள் ளன என்றும் தெரிவித்தார்.

மன்றில் முன்னிலையான கானியா பெனிஸ்டரின் சட்டத்தரணி உபுல் குமரப்பெரும, கடத்தல் இடம் பெற்ற தினத்திலிருந்து ஒரு வாரம் முன்னோக்கிய பாதுகாப்புக் கமரா பதிவுகளை அரச இரசாயன பகுப்பாய்வாளருக்கு அனுப்பி பகுப்பாய்வு அறிக்கை பெறவேண்டும் எனவும், அந்த திகதியில் குறித்த நேரத்துக்கு உரிய காட்சிகளை மட்டும் பகுப்பாய்வு செய்வது தனது சேவையாளருக்கு பாதகமாக அமையலாம் எனவும் தெரிவித்தார்.

இந்தக் கோரிக்கை முன் வைப்பதற்கான காரணம் உள்ளிட்ட விவரங்களை உரிய தரவுகளுடன் அடுத்த வழக்குத் தவணையில் எழுத்து மூலம் முன்வைக்க வேண்டும் என்று நீதிவான், சந்தேக நபரின் சட்டத்தரணிக்கு அறிவித்தார். வழக்கு எதிர் வரும் நவம்பர் 5 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட் டது. (எ-இ)

# பிரேமலாலுக்கு சலுகை வழங்கக் காரணம் என்ன?

## ஹரின் பெர்னான்டோ கேள்வி

கொழும்பு, செப்.9

பிரேமலால் ஜயசேகர வுக்கு மாத்திரம் ஏன் சலுகை வழங்கப்பட்டுள் ளது? என்று கேள்வி எழுப்பியுள்ள நாடாளு மன்ற உறுப்பினர் ஹரின் பெர்னான்டோ, இந்த விவகாரம் தொடர்பாக எமக்கு விளக்கமளிக்க வேண்டும் என்றும் வலி யுறுத்தியுள்ளார்.

நேற்று நடைபெற்ற நாடா ளுமன்ற அமர்வில் கலந் துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது,

பிரேமலால் ஜயசேகரவு டன், எமக்கு தனிப்பட்ட விரோதம் எதுவும் கிடை யாது. இந்த விவகாரம் தொடர்பாக எமக்கு விளக் கமளிக்க வேண்டும் என்று தான் கேட்கிறோம். அரசமைப்பில்குற்றவாளி யொருவர் நாடாளுமன் றம் செல்ல அனுமதியில் லாதநிலையில், இவருக்கு மட்டும் எவ்வாறு இந்த சலுகை வழங்கப்பட்டது? அப்படியென்றால், தூக் குத்தண்டனைபெற்றுள்ள குற்றவாளிகள் வாரம் தோறும் அவர்களின் வீடு களுக்குச் செல்லவும் அனுமதி வழங்க வேண் டும். என்றார். (எ-இ)

# பிரேமலால் விவகாரத்தில் அரசமைப்பை மீறவில்லை

## நாமல் ராஜபக்ச கூறுகிறார்

நாடாளுமன்ற உறுப்பி னர் பிரேமலால் ஜயசே கர சத்தியப் பிரமாணம் செய்து நாடாளுமன்றத் தில் கலந்து கொள்ள அனுமதித்த விவகா ரத்தில் சபாநாயகர் அரச மைப்பை மீறவில்லை என விளையாட்டு மற் றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜ பக்ச தெரிவித்துள்ளார்.

அவர் தனது டுவிட்டர் பக் கத்தில் பதிவிட்டுள்ள பதி விலேயே இவ்வாறு தெரி வித்துள்ளார்.

மேன்முறையீட்டு நீதிமன் றம் அளித்த தீர்ப்பைக் கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ள தால், அது அரசமைப்பு மீறல் அல்ல என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கஹவத்த பகுதியில் ஒரு வரை துப்பாக்கியால் சுட் டுக் கொலை செய்தமை மற்றும் பலர் காயம டைந்த சம்பவம் தொடர் பான குற்றச்சாட்டில் கடந்த ஜூலை மாதம் பிரே மலால் ஜயசேகர உள் ளிட்ட மூவருக்கு இரத்தின புரிமேல் நீதிமன்றம் தூக் குத்தண்டனை விதித்தது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற பிரேமலால் ஜயசேகர நேற்று நாடாளுமன்றில் சத்தியப்பிரமாணம் செய் தார். அதற்கு எதிர்க்கட்சி யினர் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். ஐக் கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் கறுப்பு பட்டிகளை அணிந்து நாடாளுமன்ற கூட்டத் தொடரில் வெளிநடப்பு செய்திருந்தனர். (எ-இ)

# கடத்தப்படவிருந்த 10 கிலோ தங்கம் புத்தளத்தில் மீட்பு

கொழும்பு, செப். 9

வெளிநாட்டுக்கு கடத்தப்படவிருந்த 10 கிலோகிராம் தங்கம் புத்தளம் சிறப்பு பொலிஸ் அதிரடிப்படையால் மீட்கப்பட்டது.

நேற்றுக் காலை பாலவிய கற்பிட்டி வீதியின் பாலன்துடுவ சந்தியில், தலவில பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே இத் தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளது. இதன்போது புத்தளத்தைச் சேர்ந்த 35 வயதுடைய சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-இ)

# ஹெரோய்னுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், சோனகத் தெருவில் ஹெரோய்ன் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார் என்று யாழ்ப்பாணம் மதுவரித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவரிடம் இருந்து 320 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள் ளது. கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் முற்படுத்து வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று யாழ்ப்பாணம் மதுவரித் திணைக்கள அதிகாரி கள் தெரிவித்தனர். (எ-111)

# விசேட சுற்றிவளைப்பு: யாழில் சிக்கினர் 62 பேர்!

யாழ்ப்பாணம்,செப்.9

**யாழ்ப்பாணம் பிராந்திய பொலிஸ் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்புத் தேடுதலில் 62 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.**



வடக்கு மாகாண பிரதி பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக, யாழ்ப்பானம் பிராந்திய பொலிஸ் அத்தியட்சகரின் ஆலோசனையில் சுற்றிவளைப்பு நேற்று மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் 9 பேரும், சந்தேகத்தின் அடிப்படையில் 13 பேரும், போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 9 பேரும் கைதுசெய்யப்பட்டனர்.

போதைப்பொருள் குற்றச்சாட்டில் இரண்டாயிரத்து 40 மில்லி லீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவரும், 300 மில்லி லீற்றர் தடை செய்யப்பட்ட சாராயம் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவரும், ஆயிரத்து 574 கிராம் கஞ்சா போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண் ஒருவரும், மூவாயிரத்து 320 மில்லி கிராம் ஹெரோய்ன் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றத்தில் ஆறு பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 13 பேரும், திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 3 பேரும் கைதுசெய்யப்பட்டனர். மது போதையில் சாரத்தியம் செய்த 15 சாரதிகளும் கைது செய்யப்பட்டனர். மேலும் வீதி விதிமுறைகளை மீறிய குற்றச் சாட்டில் 39 பேருக்குத் தண்டம் விதிக்கப்பட்டது. இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் 180 க்கும் மேற்பட்ட பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-111)

## எப்படி எதிர்பார்ப்பது நீதியை?

நாடாளுமன்றில் நேற்றுப் பெரும் சலசலப்பு. மரணதண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளியான பிரேமலால் ஜயசேகர, நாடாளுமன்ற உறுப்பினராக நேற்றுப் பதவிப் பிரமாணம் செய்ததே இதற்குக் காரணம். சிறையில் இருந்தபடியே தேர்தலில் போட்டியிட்டு இம்முறை இருவர் வெற்றி பெற்றிருந்தனர். ஒருவர் பிள்ளையான். மற்றையவர் பிரேமலால் ஜயசேகர. பிள்ளையான் மீதான விசாரணைகள் இன்னும் நடைபெறுவதாலும், அவர் குற்றவாளியென நீதிமன்றால் தண்டிக்கப்படாமையாலும் நாடாளுமன்ற அமர்வுகளில் அவர் பங்கேற்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஆனால் பிரேமலால் ஜயசேகரவின் கதையோ வேறு. அவர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டு, நீதிமன்றால் மரணதண்டனையும் விதிக்கப்பட்டுவிட்டது. இப்படியான நிலையில் அவர் நாடாளுமன்ற அமர்வுகளில் ஒருபோதும் பங்கேற்க முடியாதென்றே நம்பப்பட்டது. பிரேமலால் நாடாளுமன்றுக்கு வராமுடியாவிட்டால்,அவருக்கு அடுத்த நிலையில் இருக்கும் இருவரும் சம அளவிலான விருப்பு வாக்குகளைப் பெற்றிருப்பதால் அவர்களில் ஒருவரை நாணயச் சுழற்சியின் மூலம் தெரிவு செய்யவும் ஏற்பாடுகள் நடந்தன.

ஆனால் ராஜபக்சக்கள் ஆளும் நாட்டில் எதுவும் நடக்கலாம் என்பதற்கான பிந்திய உதாரணமாக, மரண தண்டனை விதிக்கப்பட்ட பிரேமலால் ஜயசேகர நாடாளுமன்ற அமர்வில் பங்கேற்க அனுமதி வழங்கப்பட்டு, நேற்று அவர் பதவிப்பிரமாணமும் செய்துவிட்டார். இப்படி ஒரு மரணதண்டனைக் கைதியை நாடாளுமன்றுக்கு அனுமதித்தன் மூலம் சபையின் புனிதத்தை அரசு கெடுத்துவிட்டதாகத் தெரிவித்து, எதிரணியினர் நேற்று சபையை விட்டே வெளிநடப்பும் செய்திருந்தனர். உண்மையும் அதுதான். நாடாளுமன்றம் என்பது இந்த நாட்டை ஆளும் அதியுயர் சபை. அந்தச் சபையில் இருப்பவர்கள் தான் நாட்டினதும், மக்களினதும் தலைவிதியைத் தீர்மானிக்கும் சக்திகள். நாடாளுமன்றில் அங்கம் வகிப்போர் மக்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ வேண்டியவர்கள். ஆனால் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களையும், கொலைக்குற்றம் சாட்டப்பட்டு விசாரணைக் கைதிகளாக இருப்பவர்களையும், போதைப்பொருள் விற்பவர்களையும், வேட்பாளர்களாக்கி, வெல்லவைத்து, நாடாளுமன்றக் கதிரைகளை நிரப்பி, “ஜனநாயகம் கிலோ என்ன விலை?” என்று கேட்க வைத்திருக்கிறது ஆளும்தரப்பு.

இதற்கு முன்னைய காலங்களிலும் குற்றச் செயல்களோடு தொடர்புடைய பலர் நாடாளுமன்றுக்குத் தெரிவாகியிருந்தனர்தான். இருப்பினும் அவர்கள் என்னதான் அதுவரை ஆடாத ஆட்டமெல்லாம் ஆடியிருந்தாலும், நீதிமன்றத்தால் இப்படி மரணதண்டனை போன்ற அதியுச்சத் தண்டனை பெற்றவர்களல்லர். அத்தோடு தங்கள் கயமைகளையெல்லாம் அதன் பின்னர் மூடை கட்டிவைத்துவிட்டு, வெள்ளை வேட்டி மனிதர்களாக, தங்கள் அடிதடிக் குணங்களை மறந்து மாறியிருந்தனர். இருப்பினும் சில சந்தர்ப்பங்களில் அவர்களுக்குள் உறங்கிக் கொண்டிருக்கும் மிருகம் விழித்துக் கொள்வதால் கசப்பான பல சம்பவங்களும் நிகழ்ந்திருக்கின்றன. மேர்வின் சில்வா தொடக்கம் துமிந்த சில்வா வரை இதற்கான உதாரணங்கள் மிக அதிகம். காடையர்களை நாடாளுமன்ற உறுப்பினர்களாக்கினால் என்ன நடக்குமென்று பல சம்பவங்கள் உறைக்கும்படி சொல்லியிருந்த போதும், மீண்டும் அவர்களையே தங்கள் பிரதிநிதிகளாக மக்கள் தெரிவு செய்வதன் மர்மம் இன்னும் துலங்கவில்லை.

இப்படியான தவறான முன்னுதாரணங்களை இல்லாமலாக்க நாடாளுமன்றுக்கு தெரிவு செய்யப்படுவோர் அதன் புனிதத்தையும், மக்கள் நலனையும் காப்போராகவும் இருக்க வேண்டும். அதற்காக குற்றச் செயல்களில் ஈடுபட்டு நீதிமன்றால் தண்டிக்கப்பட்ட எவரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட முடியாது என்ற சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். அப்படி நடந்தால் நாடாளுமன்றுக்கு போக நினைக்கும் எவரும் குற்றச் செயல்களில் துணிந்து இறங்கமாட்டார்கள். அப்படி குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் வேட்புமனுத் தாக்கல் செய்யமுடியாதென்பதால், ஓரளவுக்கேனும் மக்கள் நலனை முன்னிறுத்தும் சுத்தமான கரங்களைக் கொண்டவர்களைப் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யமுடியும். ஆனால் ராஜபக்சக்களின் அரசு அதனைச் செய்யப்போவதில்லை. ஏனெனில் பிரேமலால் ஜயசேகரவை விடவும் , பல்லாயிரம் அப்பாவிகளின் உயிர்களைக் குடித்த, அதி பயங்கரமான போர்க்குற்றவாளியையே நாட்டின் இராணுவத் தளபதியாக்கி, கொரோனாத் தடுப்பு செயலணித் தலைவராக்கி கொண்டாடுபவர்களல்லவா ராஜபக்சக்கள். பிணந்தின்னிகளிடம் நீதியையும், தூய ஆட்சியையும் எதிர்பார்ப்பதை விடவும் முட்டாள்தனம் வேறில்லைத் தானே.

## பட்டதாரி பயிலுநர்களுக்கு தலைமைத்துவ பயிற்சிகள்

சாவகச்சேரி,செப்.9

பட்டதாரி பயிலுநர்களாக நியமிக்கப்பட்டவர்களில், பிரதேச செயலக ரீதியில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிகள் எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை அம்பகாமத்தில் இடம் பெறும்.

இதற்கென ஒவ்வொரு பிரதேச செயலகத்தில் இருந்தும் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு, கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. நியமிக்கப்பட்ட பட்டதாரி பயிலுநர்கள் கட்டம் கட்டமாக தெரிவு செய்யப்பட்டு, தலைமைத்துவப் பயிற்சிக்கு அனுப்பப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

## முதியோர் இல்லத்தில் பி.சி.ஆர். பரிசோதனை

சாவகச்சேரி,செப்.9

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தின் ஏற்பாட்டில், கைதடி முதியோர் இல்ல அலுவலர்களுக்கு பி.சி. ஆர். பரிசோதனைகள் நேற்று மேற்கொள்ளப்பட்டன. பரிசோதனையில் இல்ல அலுவலர்கள் 25 பேருக்கு மாதிரிகள் பெறப்பட்டு, ஆய்வுக்காக யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட்டன.

பணியகத்தின் அடுத்த எழுந்தமான பி.சி.ஆர் பரிசோதனை விரைவில் மட்டுவிலில் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை நாவற்குழி, சாவகச்சேரி ,கொடிகாமம், கைதடி ஆகிய இடங்களிலும், தென்மராட்சி பிரதேச செயலகத்திலும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. பெறப்பட்ட மாதிரிகள் ஆய்வுக்காக அனுப்பப்பட்டு, எவருக்கும் தொற்று ஏற்படவில்லை என அறிக்கைகள் பெறப்பட்டன. (க-9)

## 19ஆவது திருத்தம் தவறு

### மாற்றம் தேவை என்கிறார் மஸ்தான் எம்.பி.

வவுனியா,செப்.9

19ஆவது அரசமைப்புச் சீர்திருத்தம் தவறு, அதில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தவே மக்கள் ஆணையைத் தந்திருக்கிறார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சில அதிகாரங்கள் ஜனாதிபதிக்கு இல்லாவிட்டால் மூன்று சமூகத்தவரும் வாழ்வதில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. ஆகவே நாம் அதனைச் சீர் செய்வோம்.

வடக்கு, கிழக்கு மக்களும் அதற்கு ஆணை தந்திருக்கின்றார்கள். எனினும் பிழையான விடயங்களைக் கட்சித் தலைவரிடம் சொல்லி அதனைச் சீராக்குவோம். இரட்டைப் பிரஜாவுரிமை இருப்பவர்கள் இங்கு ஒரு சேவையைச் செய்வதற்கு 19 இடமளித்திருக்கவில்லை. 20 இல் அதனை வழங்கியிருக்கின்றோம். எனவே எமது பகுதிக்கும் அது பொருந்தும். இங்கு சேவை செய்ய விரும்புவோர் தேர்தலில் நிற்க இயலாது என்பதில் என்ன நியாயம் இருக்கின்றது. இவ்வாறான திருத்தங்களே 20 இல் இருக்கிறது.

கடந்த காலத்தைவிட தற்பொழுது இனவாதக் கருத்துக்கள் அதிகமாக நம் சமூகத்தில் இருக்கின்றன - என்றார். (ப-110)

# காணி மத்தியஸ்த சபை சனி முதல் இடமாற்றம்

யாழ்ப்பாணம், செப்.9

யாழ். மாவட்ட காணி விசேட மத்தியஸ்த சபை எதிர்வரும் சனிக்கிழமை முதல் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இயங்கும் என தவிசாளர் தெரிவித்துள்ளார்.

நீண்டகாலமாக யாழ். கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் இயங்கிய காணி விசேட மத்தியஸ்த சபையே யாழ். மத்திய கல்லூரிக்கு இடமாற்றப்பட்டுள்ளது. காணிப் பிணக்குடன் தொடர்புடையவர்கள் சகல ஆவணங்களுடன் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ப 50)

# சஹ்ரானின் கொள்கைக்கு மு.காவும் இணைங்கியது

## அதன் உறுப்பினர் ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியம்

கொழும்பு, செப்.9

2015ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முன்னர் ஐந்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளிடம் தேசிய தௌஹீத் ஜமாத்தின் தலைவர் சஹ்ரான் ஹாஷிம் சமர்ப்பித்த கொள்கை அறிக்கைக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸூம் இணக்கம் வெளியிட்டது என்று முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் மாகாண உறுப்பினர் ஷிப்லி ஃபாரூக் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் சாட்சியமளித்தார்.

2015ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முன்னர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட ஐந்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் சஹ்ரான் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டார் என்று ஏற்கனவே அல் ஹாஜ் அப்துல் ஜவாத் ஆலிம் வாலியுல்லா அறக்கட்டளையின் செயலாளர் முகமது செய்லான் ஆணைக்குழுவிடம் தெரிவித்திருந்த நிலையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் மாகாண உறுப்பினர் ஷிப்லி ஃபாரூக் இதனைத் தெரிவித்தார்.

2015ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முன்னர் சஹ்ரான் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பெரும்பாலான கொள்கைகளுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இணக்கம் வெளியிட்டது என்றும் அவர் தனது சாட்சியத்தைப் பதிவு செய்தார். (ப-இ)

# 5 வருடங்களாக திறக்காதுள்ள வவுனியா தாய்-சேய் நிலையம்

## விரைவில் திறந்துவைக்குமாறு கோரிக்கை

வவுனியா, செப். 9

**வவுனியாவில் கட்டிமுடிக்கப்பட்டு, கடந்த ஐந்து ஆண்டுகளாகத் திறந்து வைக்கப்படாதுள்ள தாய் – சேய் பராமரிப்பு நிலையக் கட்டடத்தை விரைவில் திறக்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.**



வவுனியா பட்டாணிச்சூர், பட்டக்காடு பகுதிகளில் வசிக்கும் 1600 குடும்பங்களை உள்ளடக்கிய தாய் சேய் பராமரிப்பு நிலையக் கட்டடம் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் ஆட்சிக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு கட்டி முடிக்கப்பட்டது. எனினும் ஐந்து வருடங்களாகியும் இன்று வரை அது திறந்து பொது மக்கள் பாவனைக்கு கையளிக்கப்படவில்லை.

இதனால் தற்போது பொது நோக்கு மண்டபத்திலேயே கிராம அலுவலர் அலுவலகம், தாய் சேய் பராமரிப்பு நிலையம், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், விசேட தேவைகளுக்குட்பட்டவர்கள், சிவில் பாதுகாப்புக்கூட்டங்கள் என்பன இடம் பெற்று வருகின்றன. தாய்-சேய் நிலையப் பராமரிப்புக்காக வரும் தாய்மார் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலை ஏற்படுகின்றது.

எனவே குறித்த நிலையத்தைத் திறந்து வைப்பதற்குரிய நடவடிக்கையை அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் துரிதமாக மேற்கொள்ளவேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப)

# குண்டுத் தாக்குதலுக்கு "19" காரணமாகாது

## முஜிபுர் ரஹுமான் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, செப்.9

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு 19 ஆவது அரசமைப்புத் திருத்தம் காரணமாகாது. பாதுகாப்புத் துறை முறையாகச் செயற்படாவிட்டால் இவ்வாறான பாதிப்புக்கள் ஏற்படுகின்றமையைத் தடுக்க முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹுமான் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

19 ஆவது அரசமைப்புத் திருத்தம் காரணமாக ஐக்கிய தேசியக் கட்சி பிளவுபடவில்லை. அது அரசியல் ரீதியான காரணங்களினாலாகும். அதேபோன்று உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இடம்பெற்றமைக்கும் 19 காரணமாகாது. பாதுகாப்பு அமைச்சராக இருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினுடைய கவனயீனமே உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களுக்குக் காரணமாகும். 19 ஆவது திருத்தம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னரும் நாட்டில் குண்டு வெடிப்புக்கள் இடம்பெற்றுள்ளன - என்றார். (ப-இ)

# ஜே.வி.பிக்குள் முரண்பாடில்லை

## செயலர் ரில்வின் சில்வா தெரிவிப்பு



கொழும்பு, செப்.9

ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை கடந்த பொதுத்தேர்தலில் மூன்றாகக் குறைந்தமை சம்பந்தமாக கட்சிக்குள் எவ்வித கருத்து முரண்பாடுகளும் இல்லை என மக்கள் விடுதலை முன்னணியின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலில் கிடைத்த முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு கட்சியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்கவையோ கட்சியின் பிரதான செயலாளரான என்னையோ பதவி விலகுமாறு எந்தத் தரப்பிலும் இருந்து அழுத்தங்கள் கொடுக்கப்படவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் கொடுக்கல் வாங்கல் செய்யும் கட்சியின் தலைவர் மற்றும் பிமல் ரத்நாயக்க ஆகியோரால் மக்கள் விடுதலை முன்னணிக்கு எதிர்காலம் இல்லை என கே.டி. லால்காந்த முகநூல் பக்கத்தில் குறிப்பிட்டிருந்தார் என வெளியாகி இருந்த பதிவு தொடர்பாகவே சில்வா இதனைக் கூறியுள்ளார். (ப-இ)

# வர்த்தகக் கொள்கையை ஏற்றாலே ஒப்பந்தப் பேச்சு

## இந்திய உயர்ஸ்தானிகரிடம் அமைச்சர் பந்துல தெரிவிப்பு



கொழும்பு,செப்.9

தேசிய வர்த்தகக் கொள்கையை ஏற்றுக்கொண்ட பின்னரே இந்தியாவுடனான பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தங்கள் குறித்து புதிய அரசாங்கம் தனது நிலைப்பாட்டை எடுக்கும் என்று இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லேவிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்; தேசிய கொள்கைக்கு உட்பட்டு இருதரப்புச் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை அரசாங்கம் மேற்கொள்ளும். கடந்த அரசாங்கம் இந்தியாவுடன் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தங்கள் குறித்து பேச்சுக்களை ஆரம்பித்தது. கொழும்பு மற்றும் புதுடில்லியில் 11 சுற்று இருதரப்புப் பேச்சுக்கள் இடம்பெற்றன. எனினும், அந்த நேரத்தில் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு மக்களின் எதிர்ப்பு இருந்தது. ஏற்கனவே செயல்பாட்டில் உள்ள இந்தியாவுடனான பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தங்களில் இருந்து எழும் பிரச்சினைகளைத் தீர்க்கும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்றுள்ளன - என்றார். (ப-இ)

# முஸ்லிம் மக்களுக்கென தனியான நிர்வாக மாவட்டம்

## யோசனை முன்வைத்தார் என மு.கா. தலைவர் ஹக்கீம் சாட்சியம்



கொழும்பு,செப். 9

முஸ்லிம் மக்களுக்கு தனியான நிர்வாக மாவட்டம் அவசியம் என 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடம் யோசனை ஒன்றை முன்வைத்தார் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்றுமுன்தினம் சாட்சியமளிக்கும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் கரையோரப் பிரதேசத்தில் தமிழ் பேசும் முஸ்லிம் மக்களுக்கு தனியான நிர்வாக மாவட்டத்தை வழங்க வேண்டும் என்பதே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு. ஒரு மாகாணத்தில் மக்கள் அரசியல் ரீதியாக இவ்வாறான கோரிக்கை முன்வைப்பது நியாயமானது. அது தேசிய நல்லிணக்கத்திற்கு தடையாக இருக்காது என்று அவர் மேலும் தனது சாட்சியத்தில் தெரிவித்தார். (ப)

# சர்வாதிகாரத்தைக் கொண்ட 20ஐ கூட்டமைப்பு எதிர்க்கும்

## அடித்துக் கூறுகிறார் சித்தார்த்தன் எம்.பி.

யாழ்ப்பாணம், செப்.9

**20 ஆவது திருத்தம் ஜனாதிபதியை சர்வாதிகார நிலைமைக்கு இட்டுச் செல்லும். எனவே அந்த திருத்தத்தை கூட்டமைப்பு எதிர்ப்பதுடன் அதனைத் தோற்கடிப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் முன்னெடுக்கும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான த. சித்தார்த்தன் தெரிவித்தார்.**



யாழ்ப்பாணம் சுதுமலை சாவல்காட்டு வேம்படி வைரவர் ஆலயத்தின் அடிக்கல் நடும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

20 ஆவது திருத்தம் மிகவும் சர்வாதிகாரப் போக்கில், ஜனாதிபதியைக் கொண்டு போகக்கூடிய நிலைமையை உருவாக்க இருக்கின்றது. 19ஆவது திருத்தத்தில் உள்ள நல்ல அம்சங்கள் அதாவது ஜனநாயக அம்சங்கள் எல்லாம் மறுதலிக்கப்பட்டு 20 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட இருக்கின்றது. முக்கியமாக 19 ஆவதிலே இருந்த ஆணைக்குழுக்கள் எல்லாம் இல்லாமல் செய்யப்பட்டு ஜனாதிபதியின் கீழ் அதிகாரங்கள் கொண்டு வரப்படுகின்றன. இது தனிமனிதரை மீண்டும் சர்வாதிகார நிலைமைக்குக் கொண்டு செல்லும்.

ஆகவே நாங்கள் அதனை முற்று முழுதாக எதிர்க்க வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரையில் நாங்கள் அதனை முற்று முழுதாக எதிர்ப்போம். அதற்கு எதிராகவே கூட்டமைப்பினது செயற்பாடுகள் அமையும். கூட்டமைப்பைப் பதிய வேண்டும் என்பது இன்று நேற்று வந்த கோரிக்கை அல்ல. கூட்டமைப்பில் பங்காளிகளாக இருக்கின்ற கட்சிகள் அனைத்துமே மிக நீண்ட காலமாகவே அந்தக் கோரிக்கையை முன்வைத்து வந்திருக்கின்றன. அதனைச் செய்யாமல் இருப்பதற்கும் அதனைச் செய்வதற்கும் தமிழ் அரசுக் கட்சியினர் பல காரணங்களைக் கூறி அதற்கு ஒரு தடையை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள். கூட்டமைப்பு பதிவு செய்யப்பட்டிருந்தால், அல்லது கூட்டமைப்பு ஒரே அமைப்பாக இருந்திருக்குமேயானால் இப்போது இருக்கின்ற குழப்பங்கள், குளறுபடிகள் எதுவும் இல்லாமல் இருந்திருக்கும். ஆகவே கூட்டமைப்பு ஒரே அமைப்பாக உருவாக்கப்பட வேண்டும் - என்றார். (ப-20)

## 20ஆவது திருத்தச் சட்டத்தால் ஜனநாயகத்துக்குப் பேரழிவு

*சட்டத்தரணி லால் விஜேநாயக்க சுட்டிக்காட்டு*

கொழும்பு,செப்.9



**அரசின் 20ஆவது திருத்தம் ஜனநாயகத்துக்குப் பேரழிவை ஏற்படுத்தும் ஒன்றாகவே இருக்கும் என கடந்த நல்லாட்சி அரசின் அரசமைப்பு மறுசீரமைப்புக்கான மக்கள் கருத்துக் குழுவின் தலைவரான சட்டத்தரணி லால் விஜேநாயக்க தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜே.ஆர்.ஜயவர்தனவால் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை அறிமுகப்படுத்தப்பட்ட நாள் முதல் அதற்குப் பல்வேறு தரப்பினரும் எதிர்ப்புகளை முன்வைத்து வந்தனர்.

அதன்பின்னர் வந்த ஒவ்வொரு ஆட்சியாளர்களும் நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்க வேண்டும் என்று கூறிய நிலையில், கடந்த 2015இல் ஆட்சிக்கு வந்த மைத்திரிபால சிறிசேன மூலம் 19ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால், அந்தத் திருத்தத்தை இல்லாமல் செய்து 20ஆவது திருத்தச் சட்டமூலத்தைக் கொண்டுவர தற்போதைய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இது ஜே. ஆர். ஜயவர்தன கொண்டு வந்த அரசமைப்பை விடவும் சர்வாதிகாரப் போக்குடைய ஜனாதிபதியை உருவாக்கும் வகையிலேயே அமையும். இது ஜனநாயகத்தைப் பேரழிவுக்கு கொண்டு செல்லும் வகையிலேயே அமையும் - என்றார். (ப-இ)

## திருப்பிவிடப்பட்ட வெள்ளத்தால் வயல்களுக்குப் பாதிப்பு

கொடிகாமம், செப்.9

சரசாலை தெய்வங்கேணி வீதியில் மழை காலங்களில் வீதியோரத்தில் வெள்ளம் தேங்கி நின்ற பகுதி, வெள்ளம் வழிந்தோடக் கூடியவாறு அமைக்கப்பட்டாலும், அது வயல்களுக்குள் புகும் நிலை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தெய்வங்கேணி வீதியில் மழை காலங்களில் வீதியோரத்தில் வெள்ளம் தேங்கி நின்ற பகுதி, இடர் முகாமைத்துவ அமைச்சினால் வெள்ளம் வழிந்தோடக் கூடியவாறு அமைக்கப்பட்டது. எனினும் இந்த வெள்ளநீர் வயல் வழியாகச் செல்லுமாறு திருத்த வேலை செய்யப்பட்டுள்ளது. இதனால் விவசாய நடவடிக்கைகள் பாதிப்படையும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். இது தொடர்பாக வயல் உரிமையாளர்கள் கையொப்பமிட்ட கடிதம் ஒன்றும் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் சி. கஜன் ஊடாக தவிசாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ப-159)



அரச உத்தியோகத்தர்கள், சமூகத் தலைவர்களுக்கிடையிலான கலந்துரையாடல் ஒன்று யாழ்ப்பாணம் கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் அண்மையில் இடம்பெற்றது. சமூக மேம்பாட்டுக்கான கலந்துரையாடலாக இது அமைந்திருந்தது. இயக்குநர் அருட்பணி இயூஜின் பிரான்சிஸ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் ஜே /86, 87,63,133, 89 ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சமூகக் குழுக்களின் தலைவர்கள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி, பொருளாதார, சிறுவர் பாதுகாப்பு, மகளிர் விவகாரம், கலாசாரம், சுயதொழில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருந்தனர். பல்வேறு விடயங்கள் இதன் போது ஆராயப்பட்டன. (ப)

## தோட்ட மக்களை முகவரியற்ற சமூகமாக மாற்ற சூழ்ச்சி!

வேலுகுமார் எம்.பி. கவலை

நுவரெலியா, செப்.9

மலையகத்தில் 'புதிய கிராமங்கள்' என்ற எண்ணக்கருவை இல்லாதொழித்து எமது பெருந்தோட்ட மக்களைத் தொடர்ந்தும் முகவரியற்ற சமூகமாக முடக்கி வைப்பதற்கான சூழ்ச்சித் திட்டம் மீண்டும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கண்டி மாவட்டத்தில் நடைபெற்ற 'சாவி கையளிப்பு நிகழ்வு' இதனை உறுதிப்படுத்தி நிற்கின்றது என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

லயன் என்ற இருட்டறைக்குள் முடங்கி முகவரி அற்றவர்களாகக் காணப்பட்ட எமது பெருந்தோட்ட சமூகத்தினருக்கு தனி வீடுகளை அமைத்து, புதிய கிராமங்களை உருவாக்கி லயன் யுகத்திலிருந்து அவர்களை மீட்டெடுத்து வந்தோம். 'தோட்டம்' என்பதற்குப் பதிலாக 'கிராமம்' என்ற தூரநோக்குச் சிந்தனையுடன் வீட்டுத்திட்டங்கள் திறக்கப்பட்டு பெயர்களும் சூட்டப்பட்டு கிராமத்துக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டது. வீடுகளுக்கு முகவரியும் வழங்கப்பட்டது. நிர்வாகப் பணிகளும் பிரதேச செயலகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன.

இதன் அடிப்படையிலேயே லெவலன்ட் தோட்டம் நியூ போரெஸ்ட் பிரிவிலும் வீட்டுத்திட்டம் எம்மால் முன்னெடுக்கப்பட்டது. உட்கட்டமைப்பு வசதிகள் மட்டுமே ஏற்படுத்திக்கொடுக்கப்படவிருந்தது. தேர்தல் அறிவிப்பால் அதனைச் செய்யமுடியாமல்போனது. தற்போது ஆட்சிக்கு வந்துள்ளவர்கள் பெயர் போட்டுக் கொள்வதற்காக அவசர அவசரமாக 'சாவி கையளிப்பு விழா' நடத்தியுள்ளனர். தோட்டம் என்ற நிலையில் இருந்தும் கிராமம் என்ற கட்டத்துக்குச்சென்று சமூகமாற்றத்தை நோக்கிப் பயணிப்பதற்கு நாம் அடித்தளமிட்டிருந்த நிலையில் அதனைத் தலைகீழாக மாற்றியுள்ளனர். இது கண்டிக்கத்தக்க செயலாகும் - என்றார். (ப)

## ஆபத்துக்களை அறிந்தா வாக்களித்தனர் மக்கள்?

*மனுஷ நாணயக்கார எம்.பி கேள்வி*

கொழும்பு, செப்.9

அரசாங்கத்துக்கு வாக்களித்த, சுயநினைவுள்ள அனைத்து மக்களுக்கும், 20ஆவது திருத்தச் சட்டமூலத்தில் உள்ள ஆபத்து நன்றாகத் தெரிந்திருக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

"69 இலட்சம் பேர் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கு வாக்களித்தார்கள். இவர்கள், ஜனநாயகத்தை இவ்வாறு இல்லாது செய்யவா வாக்களித்தார்கள் என்று அரசாங்கத்திடம் கேட்க விரும்புகிறேன்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப)

## நாடு திரும்பிய 20 பேர் தனிமைப்படுத்தலுக்கு

கொழும்பு,செப்.9

டோஹா கட்டாரிலிருந்து 20 இலங்கையர்கள் நேற்றுக் காலை நாடு திரும்பினர். அவர்கள் தனிமைப்படுத்தலுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

அதேவேளை இதுவரை முப்படையினரதும் தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களிலிருந்து 8 ஆயிரத்து 393 பேர் தனிமைப்படுத்தலை நிறைவு செய்து வெளியேறியுள்ளனர்.

தற்போது 63 தனிமைப்படுத்தல் நிலையங்களில் 6 ஆயிரத்து 624 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

2 இலட்சத்து 41 ஆயிரத்து 631 பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாரஹன்பிட்டி இராணுவ மருத்துவமனையில் ஸ்த்தாபிக்கப்பட்டுள்ள புதிய பி.சி.ஆர் பரிசோதனைக்கூடம் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வாவினால் திறக்கப்பட்டது. ஒரு சில தனியார் நிறுவனங்களின் நிதி உதவியில் நிர்மாணிக்கப்பட்ட பரிசோதனைக் கூடத்தில் ஒரு தடவையில் 600 பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-ப)

# 20ஆவது அரசமைப்பு நாட்டை படுபாதாளத்துக்குள் தள்ளும்!!

## சுரேஸ் பிறேமச்சந்திரன் இடித்துரைப்பு



**யாழ்ப்பாணம், செப். 9**

**இருபதாவது அரசமைப்புத் திருத்தம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு விரைவில் நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு வரவுள்ள நிலையில், இது குறித்து நாட்டின் மீதும் நாடாளுமன்ற ஜனநாயக விழுமியங்களின் மீதும் அக்கறை உள்ள அனைவரும் கட்சி, இன, மத, மொழி வேறுபாடுகளைக் கடந்து ஒன்றுதிரண்டு இதனை எதிர்க்க வேண்டும். அவ்வாறில்லாவிட்டால் நாடு படுபாதாளத்திற்குத் தள்ளப்பட்டுவிடும் என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் இணைப்பேச்சாளரும், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவருமான சுரேஸ் பிறேமச்சந்திரன் கேட்டுள்ளார்.**

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

இலங்கையில் ஏற்படவிருக்கின்ற எதேச்சதிகார ஆட்சியினுடைய முதற்படியாக அரசியல் சாசனத்துக்கான 20ஆவது திருத்தத்தை கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு கொண்டுவரவிருக்கின்றது. ஏற்கனவே 20ஆவது திருத்தமானது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது. இந்த 20ஆவது திருத்தம் தொடர்பாக பல்வேறுபட்ட வாதப்பிரதிவாதங்களும் ஆரம்பமாகி இருக்கின்றன.

முன்னர் அரசால் கொண்டுவரப்பட்ட 19ஆவது திருத்தச்சட்டம் ரணில் விக்கிரமசிங்க, மைத்திரிபால சிறிசேன மற்றும் மஹிந்த ராஜபக்ஷ போன்றோரின் ஆசீர்வாதத்துடனேயே கொண்டுவரப்பட்டது. இதன் காரணமாக ஜனாதிபதிக்கு உரித்தான சில அதிகாரங்கள் நாடாளுமன்றத்துக்கு மாற்றப்பட்டு அதனூடாக சுதந்திரமான ஆணைக்குழுக்களை நியமிக்கவும் ஜனநாயகத்தை நிலைநிறுத்தவும் தனிநபர் ஒருவரிடம் குவிந்திருந்த அதிகாரங்களை குறைத்து அதனை நாடாளுமன்றத்துக்கு கையளித்து அதனூடாக ஒரு வெளிப்படையான நல்லாட்சி ஒன்றை உருவாக்குவதற்குமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

அவ்வாறான திருத்தமானது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதிக்கும் சட்டவாக்க சபையின் தலைவரான பிரதமருக்கும் இடையில் முரண்பாடுகளை உருவாக்கியது. அந்த முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான சரியான வழி முறைகளை ஆராய்வதை விடுத்து 19 ஆவது திருத்தத்தை இல்லாது செய்து மீண்டும் பழைய நிலைக்குப் போவதென்பது சர்வாதிகார எதேச்சதிகார ஆட்சியொன்றை நிறுவுவதற்கே வழி வகுக்கும்.

கொண்டுவரப்படவுள்ள 20 ஆவது திருத்தம் என்பது ஜனாதிபதிக்கு மீண்டும் அதிகாரங்களை வழங்கி பிரதமருடைய ஒப்புதல் இல்லாமலேயே அமைச்சர்களை நியமிக்கவும், மாற்றவுமான அதிகாரங்களைக் கொண்டிருப்பதுடன் முக்கியமான ஆணைக்குழுக்கள், திணைக்களங்கள் மற்றும் உயர் பதவிகள் போன்றவற்றுக்கான நியமனங்களை ஜனாதிபதியே வழங்கக்கூடிய வகையில் இந்த 20 ஆவது திருத்தம் வழிவகுப்பதானது ஊழல், மோசடி மற்றும் சர்வாதிகார ஆட்சியை உருவாக்குவதற்கே துணை நிற்கும்.

19ஆவது திருத்தம் இருந்தபொழுது திணைக்களங்கள், ஆணைக்குழுக்கள் மற்றும் உயர்பதவிகள் போன்றவற்றுக்கான நியமனங்களைச் செய்வதற்கு ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய அரசியல் சாசன சபை இருந்தது. ஆனால் 20ஆவது திருத்தத்தின் ஊடாக இவை அகற்றப்பட்டு ஜனாதிபதிக்கு அதிகாரங்களை வழங்குவது மாத்திரமல்லாமல் நாடாளுமன்றக் குழு ஒன்றினுடைய ஒப்புதல் பெற்றுக்கொண்டால் மட்டும் போதுமானது என்ற நிலையைத் தோற்றுவிப்பதன் மூலம் நாட்டின் ஜனநாயகமே கேள்விக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றது.

இது மாத்திரமல்லாமல் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களாக ஒட்டுமொத்த குடும்பத்தைச் சார்ந்த பல பேர் இருக்கையில் அதில் அமெரிக்க இலங்கை இரட்டைக் குடியுரிமையைக் கொண்டவர்களும் இணைக்கப்படவேண்டும் என்பதற்காக இரட்டைக் குடியுரிமை கொண்டவர்களும் நாடாளுமன்ற உறுப்பினராகலாம், அமைச்சராகலாம் என்ற 20ஆவது திருத்தமானது ஒரு குடும்ப தேவைக்காக கொண்டுவரப்பட்டதே தவிர இலங்கையில் இருக்கக்கூடிய சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுக்காக கொண்டுவரப்பட்ட திருத்த சட்டமூலம் அல்ல- என்றுள்ளது. (ம-இ)



# கிழக்கு எல்லைப் பாலத்தையும் வீதியையும் சீரமைத்து தாருங்கள்

## தென்னமரவடி மக்கள் கோரிக்கை

**முல்லைத்தீவு, செப்.9**

**வடமாகாணத்தின் முல்லைத்தீவு மாவட்டத்தினுடைய தமிழர்களின் பூர்வீகப் பகுதியான மணலாற்றையும், கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்தினுடைய தமிழர்களின் பூர்வீக பகுதியான தென்னமரவடியையும் வடக்கு கிழக்கு எல்லையை ஊடறுத்து பாய்கின்ற பறையன் ஆற்றின் ஊடான பலத்தைச் சீரமைப்பதோடு அதனோடு இணைந்த வீதியையும் சீரமைத்துத் தருமாறு தென்னமரவடிமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இது தொடர்பில் மக்கள் மேலும் தெரிவித்ததாவது;

இந்த ஆற்றுக்கு மறுகரையில் உள்ள அக்கரை வெளிப்பகுதியில் தென்னமரவடி பகுதியைச் சேர்ந்த எமக்கும், முல்லைத்தீவு மாவட்டதின் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் உள்ளிட்ட பகுதியைச் சேர்ந்த மக்களுக்குமாக 500ஏக்கருக்கும் மேற்பட்ட வயல் நிலங்கள் உள்ளன. அந்த வயல் நிலங்களுக்கு நாம் சென்று விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, கடந்த 1980ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் பறையன் ஆற்றின் ஊடாக ஓர் பாலத்தை அமைத்துத் தந்திருந்தார்.



அப் பாலத்தினூடாக ஆற்றின் மறுகரைக்குச் சென்று, விவசாய நடவடிக்கைகளை நாம் சிறப்பாக முன்னெடுத்திருந்தோம். கடந்த 1984 ஆம் ஆண்டு நாம் எமது பகுதிகளைவிட்டு இடம்பெயர்ந்த நிலையில், இந்த பறையன் ஆற்றுப் பாலம் அழிக்கப்பட்டுள்ளதுடன், பாதைகளும் அழிவடைந்துள்ளன. இதனால் நாம் எமது வயல் நிலங்களுக்குச்சென்று விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியாத நிலையிலுள்ளோம். அழிவடைந்துள்ள குறித்த பாதையையும், பாலத்தையும் உரியவர்கள் சீரமைத்து தந்தாலேயே எமது வயல் நிலங்களுக்கு நாம் செல்லமுடியும். எமது வாழ்வாதாரத்தைக் கருத்தில்கொண்டு விரைவில் சீரமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றனர். (ப-246)

# புலஸ்தினி உயிரிழப்பா?

## மீண்டும் மரபணுச் சோதனை

கொழும்பு, செப்.9

சாய்ந்தமருது தற்கொலைத் தாக்குதலில் உயிரிழந்தார் எனக் கூறப்படும் சாரா எனப்படும் புலஸ்தினி மகேந்திரனின் மரபணுப் பரிசோதனை அறிக்கையை மீண்டும் ஆராய்ந்து மன்றுக்குச் சமர்ப்பிக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு விடயம் தொடர்பாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நேற்றுமுன்தினம் கல்முனை நீதிமன்ற நீதிவானின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தனர். இதன் போது, நீதிமன்றத்திற்கு சாரா எனப்படும் புலஸ்தினி மகேந்திரனின் தாயார் வருகைதந்த நிலையில், கொழும்பில் உள்ள அரச பகுப்பாய்வுப் பிரிவுக்கு அவரை அழைத்துச் சென்று மரபணுப் பரிசோதனை மேற்கொள்ளுமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்தகால விசாரணைகளில் சாய்ந்தமருது தற்கொலைத் தாக்குதலில் சம்பந்தப்பட்ட சாரா என்ற புலஸ்தினியின் மரபணுப் பரிசோதனை ஒத்துப்போகவில்லை என மன்றில் அம்பாறை விசேட குற்றவியல் பிரிவின் அதிகாரி தெரிவித்திருந்தார். (ப)

# தோல் கிளினிக் மீளஆரம்பம்

சாவகச்சேரி,செப்.9

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் தோல் கிளினிக் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதி தொடக்கம் பிரதி மூன்றாவது புதன்கிழமைகளில் மருத்துவமனை வளாகக் கட்டடத்தில் கிளினிக் நடைபெறும்.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் கடமையாற்றும் தோல் சிகிச்சை நிபுணர் சம்பந்தப்பட்ட நோயாளர்களைப் பார்வையிடவுள்ளார்.

சாவகச்சேரி மருத்துவமனையில் முன்னர் நடைபெற்ற தோல் கிளினிக்கில் கலந்து கொண்டவர்களும், தோல் சம்பந்தமான சிகிச்சை பெற விரும்புவோரும் இதில் பயனடையலாம் என்று மருத்துவமனை மருத்துவ அத்தியட்சகர் திருமதி ட.மகேந்திரன் அறிவித்துள்ளார். (க-9)

# மாணிக்கல் அகழ்வு; எட்டு பேர் சிக்கினர்

நுவரெலியா, செப். 9

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நீர்த் தேக்கம், மற்றும் ஆற்றில் சட்டவிரோதமாக மாணிக்ககல் அகழ்வில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் 8 பேர் ஹற்றன் குற்றத்தடுப்பு பொலிஸாரால் கைது செய்யபட்டுள்ளனர்.

நீண்ட காலமாக இடம்பெற்று வந்த இந்த சட்டவிரோத மாணிக்ககல் அகழ்வு தொடர்பில் ஹற்றன் குற்ற தடுப்புப் பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் மாணிக்ககல் அகழ்வுக்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன. (ப)

# ஜனாதிபதிக்கு மரண அச்சுறுத்தல்

## நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

காலி, செப்.9

பொடி லெசி மற்றும் கொஸ்கொடதாரக்க ஆகிய பாதாள உலகக் குழுவினர் ஜனாதிபதி மற்றும் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோருக்கு மரண அச்சுறுத்தல் விடுத்தனர் எனத் தெரிவித்து அவர்களுக்கு எதிரான வழக்கொன்று காலி பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

காலி பிரதம நீதிவான் ஹர்சன கெக்குணவல்ல முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் தீலீப்ப பீரிஸ் நீதிமன்றத்திற்கு விளக்கமளித்தார். விடயங்களைக் கருத்திற்கொண்ட நீதிவான் வழக்கை எதிர்வரும் 20 ஆம் திகதி மீண்டும் விசாரணக்கு எடுத்துக்கொள்ளுமாறு உத்தரவிட்டார். சந்தேக நபர்களிடம் வாக்குமூலம் பெற குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது. இவர்களை எதிர்வரும் 25ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ப-இ)



# கரைச்சியில் 1,417 கி.மீ. வீதிகளுக்கு காப்பெற்

கிளிநொச்சி, கரைச்சி பிரதேச சபைக்குச் சொந்தமான ஆயிரத்து 417 கிலோமீற்றர் நீளமான வீதிகளின் சீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்கு கீழுள்ள ஆயிரத்து 417 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் கடந்த 10 ஆண்டுகளாக நிரந்தர சீரமைப்பு எதுவுமின்றிக் காணப்பட்டன. இதனை அடுத்து கரைச்சி பிரதேச சபை உள்ளூராட்சித் திணைக்களத்துக்கும் நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கும் வழங்கிய வீதிகளின் முன்னுரிமையை ஏற்று ஆசிய அபிவிருத்தி வங்கி 50 கிலோ மீற்றர் வீதிகளை காப்பெற் வீதிகளாகச் சீரமைக்க முன்வந்துள்ளது. அதன்படி 22 வீதிகள் இவ்வாறு காப்பெற் வீதிகளாகச் சீரமைக்கப் படவுள்ளன என்று தவிசாளர் தெரிவித்துள்ளார்.

அந்த வீதிகளுக்கு மேலதிகமாக முறிகண்டியிலிருந்து அறிவியல்நகர் பாரதிபுரம் உதயநகரை ஊடறுத்து வரும் பிரதான வீதியும், உருத்திரபுரம் பிரதான வீதியும் ஆசியஅபிவிருத்தி வங்கியின் நிதிப்பங்களிப்புடன் சீரமைக்கப்பட்டு வருகிறன என்று தெரிவிக்கப்பட்டது. (ப-222)

# நைஜீரிய பெண் கைது



கொழும்பு, செப்.9

விசா காலாவதியான நிலையில் சட்டவிரோதமான முறையில் நாட்டில் தங்கியிருந்த குற்றச்சாட்டில், நைஜீரிய நாட்டுப் பெண் ஒருவர்(வயது-35) கல்கிஸ்ஸை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ள இப்பெண்ணிடம் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ப-இ)

### வேலைவாய்ப்பு பணியக ஊழியர்களுக்கு

# அரை மாதச் சம்பளத்துடன் மூன்று மாதங்கள் விடுப்பு

கொழும்பு,செப்.9

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் ஊழியர்களுக்கு அரை மாதச் சம்பளத்துடன் மூன்று மாதங்கள் விடுமுறை வழங்குவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பணியகத்தின் வருமானம் குறைந்துள்ளதால் இந்த நடவடிக்கை தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

பொருளாதாரச் சிரமங்கள் காரணமாக வேலை வாய்ப்புப் பணியகத்தின் சில கிளையை மூட நேரிட்டுள்ளது என பணியகத்தின் பொது முகாமையாளர், தலைமை அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார். இதனடிப்படையில், ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதியில் இருந்து டிசெம்பர் மாதம் இறுதி வரை அரை மாதச் சம்பளத்துடன், விடுமுறை வழங்குவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது, எனவும் வழங்கப்படும் சம்பளத் தொகைக்கு அமையவே ஊழியர் சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை நிதி ஆகியவற்றுக்குச் செலுத்தும் தொகையும் கணக்கிடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

நல்லாட்சி அரசின் வீட்டுத்திட்டம்

# அரை குறை வீடுகளோடு அந்தரிக்கும் பயனாளிகள்

## வட்டிக்கு கடன் பெற்றதால் திரிசங்குநிலையில்!!

யாழ்ப்பாணம்,செப்.9

**நல்லாட்சி அரசின் ஆட்சிக் காலத்தில் வீடமைப்பு அதிகார சபை ஊடாக நடைமுறைப் படுத்தப்பட்ட ஏழரை இலட்சம் பெறுமதி கொண்ட வீடமைப்புத் திட்டம் தற்போது இடை நிறுத்தப்பட்டுள்ள நிலையில், யாழ்.குடாநாட்டு மக்கள் மட்டுமன்றி வடக்கு வாழ் மக்கள் திரிசங்குசொர்க்க நிலையில் காணப்படுகின்றனர்.**

இந்த வீட்டுத் திட்டத்தின் பயனாளிகள் தங்களின் வீட்டுக்கு அத்திபாரமிட்டு, சுவர்கள் எழுப்பி அவை அரைகுறை யாகக் காணப்படும் நிலையில் அதனை முழுவதுமாக பூர்த்திசெய்ய முடியாது திணறிக்கொண்டிருக்கின்றனர்.

வீடமைப்பு அதிகார சபையால், பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்கப்பட்ட சிறு தொகை (சுமார் 2 இலட்சம் வரை யான)நிதியின் மூலம் குறிப்பிட்ட சிலர் வீட்டுத் திட்டத்தை ஆரம்பித்திருந்தனர். தங்களுக்கான வீட்டை விரைவாக கட் டியெழுப்பிவிட வேண்டும் என்ற ஆர் வத்தில் அவர்கள் நகைகளை எல்லாம் அடைவு வைத்தும் உறவினர் நண்பர் களிடம் வட்டிக்கு கடன் பெற்றும் பணி களை முன்னெடுத்திருந்தனர்.

ஆனால் தற்போது அதனைப் பூர்த்தி செய்ய வழி தெரியாது அல்லாடிக் கொண்டிருக்கின்றனர்.

நல்லாட்சி அரசில் வீடமைப்பு அமைச் சராக இருந்த சஜித் பிரேமதாஸவால் ஏழை மக்களின் நலன் கருதி ஆரம்பிக் கப்பட்ட இந்த வீட்டுத்திட்டம் தற்போது இடைநிறுத்தப்பட்டு எவரும் கவனிக் காத நிலையில் உள்ளது.

இது விடயத்தில் தற்போதைய அரசு 'கண்டும் காணாத' போக்கைக் கடைப் பிடிக்கின்றதா? ஏன் மௌனம் சாதிக்கி றது? என புரியாமல், பயனாளிகள் அதிருப்தி அடைந்துள்ளனர். இந்தத் திட்டம் குறித்து யாரிடம் போவது,யாரி டம் கேட்பது எனத் தெரியாத அவர்கள் விழிபிதுங்கி நிற்கின்றனர்.

இதற்கான மிகுதிக் கொடுப்பனவுகள் இடைக்காத நிலையில்,கடன் சுமையில் சிக்கித் திணறித் தவிக்கும் இந்தப் பய னாளிகள்,இவ்விடயத்தில் அரசியல்வா திகள், வடக்கின் ஆளுநர், மாவட்டச் செய லாளர் மற்றும் சம்பந்தப்பட்ட அதி காரிகள், இம் மக்களின் அவலத்தை கவனத்தில் எடுத்து ஆவன செய்வார் கள் என்ற பெரு நம்பிக்கையுடன் - எதிர் பார்ப்புடன் காத்திருக்கின்றனர்.

இதுவிடயத்தில் பாதிக்கப்பட்ட பயனாளி கள் புறக்கணிக்கப்பட்டால் கவனிக்கப் படாது விட்டால் - தாங்கள் ஆளுநரின் அலுவலகம், மாவட்டச் செயலகங்கள் முன்னால் தொடர் போராட்டங்களை முன்னெடுக்க நேரிடும் என்று தெரிவிக் கின்றனர்.

## 20ஐ மக்கள் எதிர்க்கார்

### அமைச்சர் கம்மன்பில நம்பிக்கை



கொழும்பு, செப்.9

அரசமைப்பின் 20ஆவது திருத் தத்தை நாட்டு மக் கள் எதிர்க்கமாட் டார்கள். மக்களின் ஜனநாயக உரிமை களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் எவ் வித ஏற்பாடுகளும் திருத்தத்தில் உள் ளடக்கப்படவில்லை என சக்தி வலு அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாடாளுமன்றத்துக்கு ஒருவார காலத் தில் அரசமைப்பின் 20ஆவது திருத் தத்துக்கான மூல வரைவைக் கொண்டு வருவதாக முன்னாள் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன நாடாளுமன்ற அக் கிராசன உரையில் வாக்குறுதி வழங் கியமையால் பெரும்பான்மை ஆதரவு டன் 19ஆவது திருத்தம் நிறைவேறு வதற்கு ஆதரவு வழங்கினோம்.

புதிய அரசமைப்பு உருவாக்கம், 20ஆவது திருத்தம் ஆகியவை தொடர் பில் மக்களுக்கு வாக்குறுதி வழங்கி னோம். புதிய அரசமைப்பு உருவாக்கத் திற்கு முன்னர் தற்காலிக ஏற்பாடாகவே 20ஆவது திருத்தம் கொண்டு வரப்பட் டுள்ளது. இத்திருத்தம் ஊடாக தற் போது எதிர்த் தரப்பினர் அரசியல் இலாபம் தேடிக் கொள்கிறார்கள் என் றார். (ப- இ)

மானிப்பாய் பிரதேச சபையின்

## செயலாளர் இடமாற்றம்: புதியவர் நியமிக்கப்பட்டார்

மானிப்பாய்,செப்.9

வலி.தென் மேற்குப் பிர தேச சபையின் செயலா ளருக்கும், உறுப்பினர் களுக்கும் இடையில் நிர்வாக ரீதியில் இடம் பெற்று வந்த முரண் பாட்டை அடுத்து, செய லாளர் யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலு வலகத்துக்கு இடமாற் றப்பட்டுள்ளார்.

அவரது இடத்துக்கு வல் வெட்டித்துறை நகர சபைச் செயலாளர் நிய மிக்கப்பட்டுள்ளார்.

வலி.தென் மேற்குப் பிர தேச சபையில் அண் மைக்காலமாக இடம் பெற்று வந்த, சபைக் குப் பாதிப்பை ஏற்படுத் தும் சம்பவங்கள் தொடர் பில், மாதாந்தக் கூட்டங் களில் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

எனினும் செயலாளர் உடனுக்குடன் நடவ டிக்கை எடுக்காமல் காலம் கடத்தி வந்தார்.

இது தொடர்பில் கடந்த வாரம் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில், செயலாளருக்கெதிராக பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.

பிரதேசத்தின் வளர்ச்சி கருதி செயலாளரை உட னடியாக மாற்ற வேண் டும் என்று உறுப்பினர் கள் கோரியிருந்தனர்.

இதையடுத்து யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்துக்குச் சென்ற 18 உறுப்பினர் கள், பிரதேசத்தினதும், மக்களினதும் வளர்ச்சி கருதி தற்போதைய செயலாளருக்குப் பதிலா கப் பொருத்தமான செய லாளரை நியமிக்குமாறு எழுத்து மூலம் கோரியி ருந்தனர்.

இவர்களின் கோரிக்கை களைப் பரிசீலனை செய்த அதிகாரிகள், செயலாளர் எஸ். குண ராசாவை நேற்று முன்தி னம் திங்கட்கிழமை யாழ். மாவட்ட உள்ளூ ராட்சி உதவி ஆணை யாளர் அலுவலகத்துக்கு இடமாற்றம் செய்துள் ளனர்.

அவருடைய இடத்துக்கு வல்வெட்டித்துறை நகர சபை செயலாளர் எஸ். பிரசாத் நியமிக்கப்பட் டுள்ளார். அவர் தனது கடமைகளைப் பொறுப் பேற்றுள்ளார். (சு-115)

## தென்னை தின விழாவும் சங்கங்களின் ஒன்றுகூடலும்

சாவகச்சேரி,செப்.9



தென்னை தின விழா வும், கற்பகதரு சங்கங் களின் ஒன்றுகூடல் நிகழ்வும் நேற்றுச் செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி டச்சு வீதி யில் அமைந்துள்ள ஐங்கரன் மணி மண்ட பத்தில் இடம்பெற்றன.

அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி க.கவிதா தலைமை யில் இடம்பெற்ற நிகழ்வில், தென்னை பயிர்ச்செய்கை சபையின் பிராந்திய முகாமை யாளர் தே.வைகுந்தன், உத வி பிராந்திய முகாமையாளர் ஜெ.சத்தியேந்திரன், பண் ணைத் திட்டமிடல் உத்தியோகத் தர் ஈ.சற்குணன், தேசிய தமிழர் சக்தி நிறுவனத்தைச் சேர்ந்த ம.மயூரன் மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் உள்ள 60 கிராம அலுவலர் பிரிவி லுள்ள சங்கத்தினர் கலந்து கொண்டனர். நிகழ்வில் மூன்று வருட தென்னம் நாற்றுக்கள் சங்க அங்கத்தவர்களுக்கும் வழங்கப்பட்டன. (சு-159)

## 30 கிராமங்களுக்கு கைகழுவும் இயந்திரங்கள்

சாவகச்சேரி, செப். 9

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள 30 கிராம அலுவலர் பிரிவுகளுக்கு கை கழுவும் இயந்திரங்கள் வழங்கப் பட்டுள்ளன. வேள்ட் விஷன் லங்கா நிறுவனத்தினர் இந்த இயந்திரங்களை வழங்கியுள்ளனர்.

தமது கிராமியச் சுகாதாரம் மற்றும் பாடசாலைகளில் தமது செயற்பாடு களை மேற்கொள்ளும் நோக்கோடு கைகழுவும் இயந்திரங்கள் வழங்கப் பட்டுள்ளன. (ப-9)

## நால்வருக்கு தண்டம்

சாவகச்சேரி,செப்.9

சாவகச்சேரி நகரப் பகுதியில் மக்கள் நட மாடும் இடத்தில் போதையில் அநாகரிக மாக நடந்துகொண்ட நால்வருக்கு நீதிமன் றால் தண்டம் விதிக்கப்பட்டது.

மக்கள் கூடும் இடத்தில் அநாகரிகமாக நடந்து கொண்ட நால்வர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இவர்களுக்கு எதி ராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு,நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

விசாரணையில் நால்வரும் குற்றத்தை ஒப்புக் கொண்டனர். அதையடுத்து, தலா 2 ஆயிரத்து 500 ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது. (சு-9)




காற்றாலை அமைக்கும் பணியில் ஈடுபட்ட கனரக வாகனங் களின் பாவனையால் சேதமடைந்த வீதியைச் சீரமைக்கும் முயற்சியில் காற்றாலை நிறுவனம் ஈடுபட்டுள்ளது. மறவன் புலவு மணற்காட்டு வீதியின் 700 மீற்றர் தூரம், 40 இலட்சம் ரூபா செலவில் சீரமைக்கப்படவுள்ளது. (ப-159)

# ஐ.தே.கவின் தலைமை திங்களன்று தீர்மானம்

கொழும்பு,செப்.9

**ஐக்கிய தேசியக் கட்சித் தலைமைத்துவம் உள்ளடங்கலாக கட்சி தொடர்பான தீர்மானங்கள், எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெற வுள்ள கட்சியின் மத்திய செயற்குழுக்கூட்டத்திலேயே எடுக்கப்படும் என்று கட்சியின் பொதுச்செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.**

ஐக்கிய தேசியக் கட்சிக்கான புதிய தலைவர் எதிர்வரும் 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியே நியமிக்கப்படுவார் என்று கட்சியின் சட்டச்செயலாளர் நிஷாந்த நாண யக்கார அறிவித்துள்ளார் என்று செய்திகள் வெளியாகியிருந்தன.

தற்போது கட்சியில் வெற்றிடமாக உள்ள பிரதித்தலைவர் பதவிக்கு ஒருவரை நியமிப்பதற்குத் தீர்மானித்திருப்பதாகவும், அவ்வாறு நியமிக்கப்படுபவர் எதிர்வரும் 2021 ஜனவரியில் கட்சியின் தலைவராகப் பொறுப் பேற்றுக் கொள்வார் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எனினும் இது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி யின் பொதுச்செயலாளர் அகிலவிராஜ் காரிய வசத்திடம் வினவியபோது, அவ்வாறான தீர் மானங்கள் எவையும் எடுக்கப்பட்டிருப்பது தொடர்பில் தான் அறியவில்லை என்று தெரிவித்தார். (க-இ)

## ஆணைக்குழுவின் காலம் மேலும் நீடிப்பு

கொழும்பு,செப்.9

உயிர்த்த ஞாயிறு (ஈஸ்டர்) தாக்குதல்கள் தொடர்பில் விசாரணையை மேற்கொள் ளும், ஜனாதிபதி ஆணைக்குழுவின் காலம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆணைக்குழுவின் செயற்பாடு காலம் எதிர்வரும் 20 ஆம் திகதியுடன் முடிவடைகிறது. இதனையடுத்து அதன் ஆயுள்காலம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆணைக்குழு 2019 செப்ரெம்பர் 20 ஆம் திகதி நிறுவப்பட்டது. ஆணைக் குழுவின் பதவிக்காலம் இதற்கு முன்னர் பல சந்தர்ப்பங்களில் நீட்டிக்கப்பட்டு ள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-இ)



## புதைக்கப்பட்டிருந்த 12 கிலோ கஞ்சா மீட்பு

புத்தளம்,செப்.9

வீட்டுக்குப் பின்புறத்தில் புதைக்கப்பட்டி ருந்த ஒரு தொகை கேரளக் கஞ்சா கண் டுபிடிக்கப்பட்டது.

புத்தளம் மதுரங்குளி கடையாமோட்டை யில் நேற்று அதிகாலை வீடொன்றைச் சோதனை செய்தபோது, குழிதோண்டிப் புதைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 12 கிலோ கிராம் கேரளா கஞ்சா கண்டுபிடிக் கப்பட்டது.

சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய் யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரி வித்தனர். (க-இ)

## ஐ.தே.கவின் தலைவர் நியமனம்ஜனவரியில்!

கொழும்பு, செப் 9

ஐக்கிய தேசியக் கட்சி யின் புதிய தலைவரை எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி நியமிக்கவுள்ளதாக அந் தக் கட்சியின் சட்டத்து றைச் செயலாளர் நிஸ் ஸங்க நாணயக்கார தெரிவித்துள்ளார்.

"எதிர்வரும் திங்கட்கி ழமை இடம்பெறவுள்ள செயற்குழுக் கூட்டத்தில் இது தொடர்பாக ஆராய ப்படவுள்ளது. அதேநே ரம் கட்சியின் பிரதித் தலைவர் பதவியில் இருந்த சஜித் பிரேமதாஸ கட்சியிலிருந்து விலகிய தன் காரணமாக அந்த பதவிக்கு வேறு ஒருவரை நியமிப்பதற்கு நடவ டிக்கை எடுக்கப்பட்டுள் ளது. புதிய பிரதித் தலை வர் எவர் என்பதை செயற் குழு உறுப்பினர்களின் வாக்கெடுப்பின் அடிப்ப டையில் தெரிவுசெய்வ தற்குதீர்மானிக்கப்பட்டுள் ளது" என்று நிஸ்ஸங்க நாணயக்கார மேலும் தெரிவித்துள்ளார். (ப)

## தவறான முடிவெடுத்த முதியவர் சாவு

மட்டக்களப்பு,செப்.9

மட்டக்களப்புசித்தாண்டிப்பிரதேசத்தில் வயது 81 முதியவர் தவறான முடிவெ டுத்து உயிரை மாய்த்தார்.

சித்தாண்டி பிரதான வீதியைச் சேர்ந்த 81 வயதுடைய பிள்ளையான் விஸ்வ நாதன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தனிமையில் இருந்த முதியவர் வீட்டின் அறையின் கூரையில் கயிற்றில் தூக் கில் தொங்கி தற்கொலை செய்துள் ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-இ)



## வீட்டுத்தோட்டம் செய்வோருக்கு பரிசு

சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவி ருத்தி சங்க அங்கத்தவர்களால் மேற் கொள்ளப்படும் வீட்டுத் தோட்டச் செய் கையில், தெரிவு செய்யப்பட்டவர்களுக் குப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

அவர்களது வீட்டுத்தோட்டச் செய் கையை நேரடியாகப் பார்வையிட்டுப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

தென்மராட்சி பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ப. சதீஸ் வரன், மாதர் சங்கத் தலைவர் எஸ். புஸ்பராணி மற்றும் பொருளாளர் கீ.மகேஸ்வரியம்மா ஆகியோர் நேரடி யாகச் சென்று பரிசில்களை வழங்கி னார். (க-159)

## பாடசாலைகள் வழமைக்கு

கொழும்பு,செப்.9

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரண மாக மூடப்பட்ட நாட் டின் அனைத்து பாடசா லைகளினதும் கல்வி நடவடிக்கைகள் நேற்று முதல் வழமைக் குத் திரும்பியுள்ளன.

ஆரம்பப்பிரிவு உள் ளிட்ட சகல தரங்களை யும் கொண்ட பாடசா லைகளினதும் கல்வி நடவடிக்கைகள் வழ மைக்குத் திரும்பியுள்ள ன. அதேவேளை பாட சாலைகளில் மாணவர் கள் சுகாதார நடைமு றைகளை தொடர்ச்சி யாகப் பின்பற்ற வேண் டும் என்று கல்வி அமைச்சு வலியுறுத்தி யுள்ளது. அதற்கமை வாக காலை 7.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை வழ மையான நேரத்தில் கல்வி நடவடிக்கைகள் இடம்பெறும் என்று கல்வி அமைச்சு தெரி வித்துள்ளது. (க-இ)

## தொழில்நுட்ப நிறுவனத்துக்கு விண்ணப்பம்

கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் யாழ்.உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் 2020 ஆம் கல்வியாண்டுக்கு ரிய புதிய அனுமதிக ளுக்கான விண்ணப்ப ங்கள் கோரப்பட்டுள் ளன. எதிர்வரும் ஒக்ரோ பர் மாதம் 6 ஆம் திக திக்கு முன்னர் விண் ணப்பங்கள் அனைத் தும் இணைய வழி மூலமாகவே மேற் கொள்ள முடியும். மேல திக விவரங்களுக்கு www.sliate.lk இணை யத்தளத்தை பார்வையி டலாம். அல்லது 021 222 9803 மற்றும் 0212222595 ஆகிய தொலைபேசி இலக்கங் கள் மூலம் தொடர்பு கொண்டு தகவல்க ளைப் பெற்றுக்கொ ள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

# சுற்றுலாத்துறையை மேம்படுத்த ஐரோப்பிய ஒன்றியம் நிதியுதவி

கொழும்பு,செப்.9

கொவிட்19 தொற்று நோயால் வீழ்ச்சியடைந்த இலங்கையின் சுற்றுலாத் துறையை மேம்படுத் துவதற்கு, ஐரோப்பிய ஒன்றியம் 4.9 மில்லியன் யூரோ நிதியுதவியை வழங்க முடிவு செய்துள் ளது. ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் டெனிஸ் சைபிக்கும், சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுக்கு இடையில் இடம்பெற்ற சந்திப்பில் இந்த விடயம் தெரிவிக் கப்பட்டுள்ளது. விரைவில் இந்த நிதியுதவி கிடைக்கும் என்று சைபி உறுதியளித்துள்ளார். சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்காக ஏழு முக் கிய பகுதிகளுக்கு இந்த நிதியுதவி வழங்கப்படும். பயண வழிகாட்டுதல்கள், உடற்பயிற்சி சுற்றுப் பயணங்கள், சுற்றுலாத்துறையில் சிறு மற்றும்



நடுத்தர தொழில்முனைவோருக்கு உதவுதல், தொழிலில் ஈடுபடுவோரின் சுகாதாரம் மற்றும் பயிற்சி, சமூக பாதுகாப்புத் திட்டங்கள் மற்றும் சமூக அடிப்படையிலான சுற்றுலாத்துறையின் முன்னேற்றம் ஆகியவை இதில் அடங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## போட்டியில் பின்வாங்கேன்

வஜிர விடாப்பிடி

கொழும்பு,செப்.9

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவிக்கு போட்டியிடுவேன் என்று பகிரங்க மாகக் கூறியுள்ளேன். அதில் இருந்து எந்த வகையிலும் பின்வாங்கப் போவ தில்லை என்று முன்னாள் அமைச்சர் வஜிர அபேவர்தன அறிவித்துள்ளார். கட்சியின் தலைமைத்துவத்திடம் மட்டுமல்லாது, கட்சியின் செயற்குழுவுக்கும் அவர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

கட்சியின் தலைமைத்துவத்துக்குப் பிரச்சினை ஏற்படாத வகையில் அதனைத் தீர்க்கக்கொள்வது கட்சியின் கடமை என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (க-இ)



மன்னார் எழுத்தூர் பங்கின் பாதுகாவலியாம் புனித அடைக்கல அன்னையின் ஆலய வருடாந்தப் பெருவிழா நேற்றுச் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (க-60)

# பொன்னாலையம்பதி
# ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய
# தேர்த்திருவிழா சிறப்பிதழ்
## 09.09.2020





### ஆலய வரலாறு

திரு அருட்பெருமையும் வரலாற்றுப் பழமையும் மிக்கதிருமால் ஆலயங்களில் பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் கோவிலும் ஒன்றாகும். இலங்கையின் பிரசித்திபெற்ற ஆலயங்களின் தோற்றம் பெருமை என்பன கூறப்பட்ட தட்சணகைலாய புராணத்தில் இவ்வாலயத்தின் தோற்றம் மகிமை, என்பன கூறப்பட்டுள்ளது.

முன் ஒரு காலத்தில் மீன்பிடிக்கும் தொழிலையுடைய ஒருவன் பொன்னாலயம் என்னும் ஆலயத்திற்கு மேற்கிலிருக்கும் சமுத்திரத்தில் மீன் பிடிப்பதற்காக வலையை வீசினான். அப்போது அவன் வலையில் அந்த அதிசய ஆமை பிடிபட்டது.

பொன் போல் மின்னிப் பிரகாசிக்கின்ற ஆமையைத் தந்தமைக்கு ஆண்டவனுக்கு நன்றி செலுத்தி அதனை பிடிக்க முனைந்த போது அது ஓடத்தொடங்கியது. பின் ஒருவாறு அவ்வாமையை தனது கைகளால் பிடித்துக்கொண்டான். என்ன அதிசயம் ஓடிய ஆமை கல்லாமை ஆகியது. ஆமையை தொட்ட இளைஞனோ தேவ வடிவம் பெற்று விட்டான். அங்கே பொன் விமானம் ஒன்று தோன்றி அவனை ஏற்றிச்சென்றது. கூர்வ அவதாரம் செய்து ஆடல் செய்தது நாராயணனே என்று எல்லோரும் வியந்து வணங்கினர். கல்லாமை உருவம் கொண்ட கண்ணனுக்கு முறைப்படி ஆலயம் அமைத்தனர். அந்த கல்லாமை தற்போதும் ஆலயத்தின் கற்பக்கிரகத்தில் உள்ளது. மூலவிக்கிரகத்திற்கான தீப ஆராதனையின் பின் இக்கல்லாமைக்கும் தீபம் காட்டப்பட்டு வருவதும் இன்றுவரை தினமும் நடைபெறும் ஒரு நடைமுறையாக உள்ளது. மேலும் அப்புராணம் பின்வருமாறு கூறுகின்றது. "முன்னொரு காலத்தில் துருவாச முனிவர் இட்ட சாபத்தால் சபிக்கப்பட்ட இந்திரன் சாப விமோசனத்தின் பொருட்டு அம் முனிவரின் திருவடிகள் பணிந்து தனது பிழையை பொறுத்தருள்க என வேண்ட இரக்கமடைந்த முனிவர் துக்கமடைய வேண்டாம் சேது மத்தியில் இருக்கும் இலங்கை தேசத்தில் பொன்னால்ல எனும் இடத்தில் வலைஞர் குலத்திலே நீ பிறப்பாய் நாராயணன் ஒரு காலத்தில் கூர்மாவதாரம் செய்வார். உன்னால் வலையினாலே அக் கூர்மம் கட்டப்பட்டு நீ ஆமையைத் தொட்டதும் சாபம் நீங்கப் பெறுவாய் என்று கூறித் துருவாச முனிவர்தன் இருப்பிடத்துக்கு சென்றார். துருவாச முனிவர் இட்ட சாபத்தால் இந்திரனே வலைஞனாகப் பிறந்தான். கூர்மவேடம் கொண்ட மகா விஷ்ணுவே வலையினால் கட்டப்பட்டார். வலைஞனின் சாபம் விஷ்ணுவாகிய ஆமையின் அங்கம் தீண்டப்பட்ட உடனே நீங்கிவிட்டது. இவ்வேளையில் கூர்ம அவதாரம் கொண்ட விஷ்ணு வலைஞனுக்கு தன் சொரூபத்தை காட்டி ஆசீர்வதித்து மறைந்தருளினார். அவ்விஷ்ணுவின் திருவடிச்சுவடு அவ்விடத்திலே இருக்கின்றது. இது மிகவும் பரிசுத்தமானது இதற்கு திருவடிநிலை என்று பெயர்."

ஏழு வீதிகளைக் கொண்ட ஆலயமாக இது இருந்துள்ளமையும் அது டச்சுக்காரர்களால் உடைக்கப்பட்டு அதன் கற்கள் ஊர்காவற்றுறை கடல் கோட்டை, சங்கானைக் கோட்டை போன்றவறறைக் கட்ட உபயோகிக்கப்பட்டது என்பதும் இன்று வரையுள்ள கர்ண பரம்பரை கதைகளாகும்.

தொடர்ச்சி ➡












## பொன்னாலையம்பதி
## ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 09.09.2020

தொடர்ச்சி

இவ்வாலயத்திற்கு வருகை தந்து மனமுருகி நாரயணனைவழிபட்டால் சகல துன்பங்களும் நீங்கி சிறப்பான வாழ்வு பெறலாம் என்ற அற்புத அனுபவத்தைப் பெற்ற அடியார்கள் நாட்டின் எல்லாப் பாகங்களிலிந்தும் திரளாக வந்து தங்கி நின்று வழிபாட்டில்பங்குபற்றுவது பலகாலமாக வழமையாக இருந்து வருகின்றது.

ஆவணி மாதம் கிருஷ்ணபட்சம் அட்டமியாகிய விசேட தினத்தில் அவதரித்தவரும் பொன்னாலையத்திலே வாசம் செய்பவரும் லோகரட்சரும் ஆகிய அச்சுதப் பெருமாளையாவன் ஒருவன் அன்புடையவனாய்த் தன் சென்மகாலத்தில் தரிசனம் செய்வானாயின் அவனுடைய பாவங்கள் அழிந்து அவன் புத்திரபௌத்திரர்களோடு கூடியவனாய்த் தீர்க்காயுளை அடைந்து இம்மையிலே சகல போகங்களையும் அனுபவித்து மறுமையிலே வைகுண்ட லோகத்தை அடைந்து விஷ்ணுவிடம் களிப்புற்று வாழ்வான்.

ஆவணி கிருஷ்ண ஜெயந்தியை தேர் உற்சவமாகக் கொண்டு பத்தொன்பது தினங்கள் மகோற்சவம் நடைபெறுகின்றது. அத்துடன் வைகுண்ட ஏகாதசியைத் தேர் உற்சவமாக கொண்டு மார்கழி உற்சவம் நடைபெறுகின்றது. இத்தகைய வரலாற்றுப் புகழைக் கொண்ட ஸ்ரீதேவிரூபவ் பூமிதேவி உடனுறையும் கூர்மவதாரஷேத்திரமான பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் தேவஸ் தானத்தின் வருடாந்த தேர்திருவிழா இன்று (09.09.2020) புதன்கிழமை நடை பெறுகின்றது.

**ஆக்கம் : இ. உமணகேனன்**
**(யாழ். பல்கலைக்கழகம்)**






















# தங்கத்தின் விலை தற்போது குறையாது

## நகை வியாபாரிகள் சங்கம் அறிவிப்பு

கொழும்பு,செப்.9




நாட்டில் தங்கத்தின் விலை குறைப்பு அமுலுக்கு வருவதற்கு அண்ணளவாக ஒரு மாதம் எடுக்கும் என்று அகில இலங்கை நகை வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணக் கைத்தொழிலாளர்கள் ஈட்டும் இலாபத்தின் மீது விதிக்கப்பட்டிருந்த 14 சதவீத வருமான வரி மற்றும் 15 சதவீத தங்க இறக்குமதி வரிகளை நீக்குவதற்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தீர்மானித்திருந்தார்.

இந்த நிலையில், தங்கத்தின் விலைக் குறைப்புத் தொடர்பில் அகில இலங்கை நகை வியாபாரிகள் சங்கத்தின் பொருளாளர் இரா.பாலசுப்ரமணியத்திடம் கேட்டபோது, அவர் இதனைத் தெரிவித்தார். இந்த விலைக் குறைப்பு அமுலுக்கு வருமாயின், ஒரு பவுண் 5 ஆயிரம் ரூபா அளவில் குறைவடைவதற்கான வாய்ப்பு உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (கு-இ)

# எகிறியுள்ள முட்டை விலை: இறக்குமதிக்குக் கோரிக்கை

கொழும்பு,செப்.9



நாட்டில் ஒருபோதும் இல்லாதவாறு கோழி முட்டையின் விலை அதிகரித்துள்ள நிலையில், இறக்குமதி செய்யும் அனுமதியைப் பெற்றுத்தருமாறு பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தனவுக்கும், பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்துக்கும் இடையிலான கலந்துரையாடலில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முட்டையின் மொத்த விலை 22 ரூபாவாக உயர்வடைந்துள்ளது. இதனால் பேக்கரி உற்பத்தியாளர்கள் சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இதற்கான குறுகியகாலத் தீர்வாக பேக்கரி உரிமையாளர்களுக்கு வெளிநாடுகளிலிருந்து முட்டைகளை இறக்குமதி செய்யும் அனுமதியைப் பெற்றுத் தர வேண்டும் என்று பேக்கரி உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.

அதற்குப் பதிலளித்த வர்த்தக அமைச்சர், அது தொடர்பில் அமைச்சரவையின் கவனத்துக்குக் கொண்டு வந்து அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். என்றார்.

இதேவேளை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விடுத்த பணிப்புரைக்கு அமைவாக, முட்டையின் விலையை இரண்டு ரூபாவால் குறைக்க அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர் தீர்மானித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது (கு-இ)

# நியூ டயமன்ட் கப்பலில் மீள பரவுகிறது தீ

## கடற்படை அறிவிப்பு

கொழும்பு,செப்.9



நியூ டயமன்ட் கப்பலில் மீண்டும் பரவிய தீ இதுவரையில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படவில்லை என்று கடற்படை தெரிவித்துள்ளது.

தீயைக் கட்டுப்படுத்துவதற்குத் தொடர்ந்தும் ஒன்றிணைந்து செயற்பட்டு வருகின்றோம் என்று கடற்படைப் பேச்சாளர் கப்டன் இந்திக டி சில்வா தெரிவித்துள்ளார். கப்பல் தற்போது காணப்படும் சங்கமன்கண்டியில் இருந்து 30 கடல் மைல் தொலைவில் உள்ளது. அந்தப் பகுதியில் வீசும் பலத்த காற்று காரணமாகவும், கப்பலின் உட்பகுதியில் காணப்படும் அதிக உஷ்ணம் காரணமாகவும் மீண்டும் தீ பரவ ஆரம்பித்துள்ளது.

இந்த நிலையில், இரசாயனப் பொருள்களையும், நீரையும் பயன்படுத்தி வெப்பத்தைத் தணிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதேவேளை, தீ விபத்து காரணமாக சமுத்திரத்துக்கு ஏதும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என்பது தொடர்பான பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்காக 7 பேர் கொண்ட குழு அந்தப் பகுதிக்குச் சென்றுள்ளது.

இலங்கைக்கு கிழக்கே சங்கமன்கண்டி இறங்குதுறையில் 38 கடல் மைல்கள் தொலைவில் எம்.டி.நியூ டயமன் என்ற எண்ணெய் தாங்கிக் கப்பல் கடந்த வியாழக்கிழமை தீ விபத்துக்கு உள்ளாகியது. கப்பலின் பிரதான இயந்திர அறையில் கொதிகலன் வெடித்ததைத் தொடர்ந்து, தீப்பரவல் ஏற்பட்ட நிலையில் தீயைக் கட்டுப்படுத்த தீவிர முயற்சி எடுக்கப்பட்டது. (கு-இ)

# விபத்தில் இருவர் உயிரிழப்பு

கொழும்பு கண்டி பிரதான வீதி, நிட்டம்புவவில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர். கட்டுநாயக்கவிலிருந்து கண்டி நோக்கிச் சென்ற தனியார் பஸ்ஸொன்று, எதிர்த் திசையில் பயணித்த முச்சக்கர வண்டியுடன் நேருக்கு நேர் மோதியதில் விபத்து நடந்துள்ளது. விபத்தில் கலேன்பிந்துனுவெவ பகுதியைச் சேர்ந்த இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். விபத்து தொடர்பில் தனியார் பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (கு-இ)

# குறுகிய காலத்தில் பெரும் சூழல் அழிவு

## ஹர்ஷன எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு,செப்.9

தற்போதைய அரசு ஆட்சியில் இருந்த குறுகிய காலத்தில் பெரும் சுற்றுச்சூழல் அழிவு ஏற்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது; நானும் பல நாடாளுமன்ற உறுப்பினர்களும் சமீபத்தில் ஆனைவிழுந்தான் சரணாலயத்துக்குச் சென்றிருந்தோம்.

அரசியல் காரணமாக ஈரவலயப் பகுதிக்கு ஏற்பட்ட அழிவுகளை நேரில் கண்டறிந்தோம்.

வனாத்தவில்லு மற்றும் ஹம்பாந்தோட்டையில் உள்ள பல ஈரவலயப் பகுதிகளும் சமீபத்தில் அழிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக அரசியல் தலைவர்களின் ஆதரவுடன் ஈரவலயப் பகுதிகளுக்குச் சொந்தமான பல ஏக்கர் பகுதிகள் அழிக்கப்பட்டுள்ளன.-என்றார். (கு-இ)

# மீன் உற்பத்திகளை அதிகரிக்கத் திட்டம்

கொழும்பு, செப்.9

நாட்டுக்குத் தேவையான மீன் உணவு அனைத்தையும் இலங்கையிலேயே உற்பத்தி செய்வதே அரசாங்கத்தின் நோக்கமென தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எதிர்வரும் 14 ஆம் திகதி எக்ரிஸ்டார் பிஷ் மீல்ஸ் தனியார் தொழிற்சாலைக்கு நேரடியாகச் சென்று அது தொடர்பில் ஆராயப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இலங்கையில் முதலாவது மீன்களுக்கான உணவு உற்பத்தித் தொழிற்சாலையாக நிர்மாணிக்கப்பட்ட எக்ரிஸ்டார் பிஷ் மீல்ஸ் தனியார் நிறுவனத்தின் உற்பத்திகளை அதிகரிப்பது தொடர்பான கலந்துரையாடலின்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். பொருத்தமான நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய இயந்திரங்களைப் பெற்றுத் தருமாறு இந்தக் கலந்துரையாடலின்போது தொழிற்சாலையின் உரிமையாளர்களால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ப)

# தெல்லிப்பழையில் வெடிபொருள் அகற்றல்

யாழ்ப்பாணம்,செப்.9

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருத்துவமனை வீதி அபாய வலயமாக அறிவிக்கப்பட்டு, அங்கு வெடிபொருள் அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வடக்கில் போருக்குப் பின்னரான காலப்பகுதியில் மக்கள் குடியிருப்புக்களில் கண்ணிவெடிகள் மீட்கப்பட்டு, பாதுகாப்பான வலயமாக மாற்றுவதற்கு ஹலோ டிரஸ்ட் நிறுவனம் பெரும் பங்காற்றி வருகிறது.

நிறுவனத்தின் செயற்பாட்டு முகாமையாளர் அனலி ஹிருட்சினா தலைமையில், தெல்லிப்பழைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மருத்துவமனை வீதியில் சந்தேகத்துக்கிடமாகக் காணப்பட்ட வெடிபொருள்கள் கடந்த வாரம் மீட்கப்பட்டன.

அந்தப் பகுதி முழுவதும் அபாய வலயமாகக் கருதப்பட்டு தற்போது சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (கு-இ)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் நுண்கடனுக்கு இனித் தடை

மட்டக்களப்பு,செப்.9

மட்டக்களப்பு மாவட்டத்தில் தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் நுண் கடன் திட்டங்களை உடனடியாக நிறுத்துமாறு, மாவட்டச் செயலர் கலாமதி பத்மராஜா உத்தரவிட்டுள்ளார்.

தற்போது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள நுண் கடன் களை மீளப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மாத்திரம் மாவட்டத்தில் முன்னெடுக்க முடியும். இது தவிர புதிய கடன்கள் வழங்கப்படக்கூடாது என்றும், இதனை பிரதேச செயலாளர்கள் கண்காணித்து அறிக்கையிட வேண்டும் என்றும் மாவட்டச் செயலர் தெரிவித்துள்ளார். (கு-150)

# கொவிட் -19 சரிவிலிருந்து மீள ஒருமித்த செயற்பாடு அவசியம்

## வெளிவிவகார செயலாளர் சுட்டிக்காட்டு

கொழும்பு, செப்.9
பிம்ஸ்டெக் அங்கத்துவ நாடுகள் கொரோனா வைரஸ் பரவலின் பின்னரான 'புதிய இயல்பு நிலைக்கு' தம்மைப் பழக்கப்படுத்திக்கொள்வதுடன், கொவிட் 19 காரணமாக ஏற்பட்ட பின்னடைவிலிருந்து மீள்வதற்கு ஒன்றிணைந்து செயலாற்றுவது அவசியமாகும் என்று வெளிவிவகார செயலாளர் ரியர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே சுட்டிக்காட்டியிருக்கிறார்.



உலகளாவிய ரீதியில் கொவிட் 19 கொரோனா வைரஸ் பரவலினால் ஏற்பட்ட அச்சுறுத்தல் காரணமாக பல நாடுகளின் அன்றாட நடவடிக்கைகள் முடக்கப்பட்டன. எனினும் அந்த முடக்கம் பொருளாதாரத்தில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியிருப்பதனால், தற்போது உரிய சுகாதாரப் பாதுகாப்பு விதிமுறைகளைப் பின்பற்றியவாறு மக்கள் தமது அன்றாட செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்று உலகநாடுகள் அறிவுறுத்தியுள்ளன. எனவே தற்போது நடைமுறையில் இருக்கும் இந்த புதிய இயல்பு நிலையைப் பின்பற்றி செயற்படுமாறு இலங்கை பிம்ஸ்டெக் அங்கத்துவ நாடுகளை வலியுறுத்தியுள்ளது.

பிம்ஸ்டெக் அங்கத்துவ நாடுகளின் சிரேஷ்ட அதிகாரிகளுக்கான இணையம் மூலமான 21 ஆவது கூட்டத்தின்போதே 'சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளுடன் கூடிய புதிய இயல்புநிலையைத் தழுவி நடப்பதுடன், விரைவாக அதற்குப் பழக்கப்பட வேண்டும்' என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ரியர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் குறிப்பிட்டவாறு கொவிட் 19 வைரஸ் பரவல் ஆரம்பத்தில் ஒரு சுகாதார நெருக்கடியாகக் காணப்பட்டு, தற்போது அது பொருளாதார மற்றும் சமூக நெருக்கடியாக மாற்றமடைந்திருக்கிறது. இது உலகளாவிய ரீதி யில் பல்வேறு நாடுகளின்மீது பல மட்டங்களில் தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கிறது. எனவே கொரோனா வைரஸ் பரவலுக்கு முன்னரைப் போன்ற நிலையில் உலகம் தற்போது இல்லை' என்றும் ஜயநாத் கொலம்பகே இதன்போது மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ந-இ)

## கடன் கொடுத்தவர் மீது கடன் பெற்றவர் தாக்கு

மட்டக்களப்பு, செப்.9
கடனாகக் கொடுத்த பணத்தைத் திருப்பித் தருமாறு கேட்ட நபர் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவமொன்று நேற்றுமுன்தினம் வாழைச்சேனையில் இடம்பெற்றுள்ளது. வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நபர் ஒருவர் மற்றொருவருக்கு கடனாகக் கொடுத்த பணத்தைத் திருப்பித் தருமாறு பலமுறை கேட்டும் அதனை வழங்காது காலத்தை கடத்திச் சென்றுள்ள நிலையில் பணம் கொடுத்தவர் அதனை வழங்க மறுத்தவருக்கு எதிராக மத்தியஸ்த சபையில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார்.

இந்த நிலையில் முறைப்பாடு பதிவு செய்த ஆத்திரத்தில் பணத்தை கடனாகப் பெற்றுக் கொண்டவர், பணம் கொடுத்த நபர் மீது மறைந்திருந்து கடும் தாக்குதலை நடத்தியுள்ளார்.

இந்தத் தாக்குதலுக்குள்ளான நபர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

தாக்குதல் நடத்தியவரை வாழைச்சேனைப் பொலிஸார் கைதுசெய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-இ)

## குரங்கைக் கட்டுப்படுத்த புதிய இலக்கம்



கொழும்பு, செப்.9
குரங்குகளைக் கட்டுப்படுத்த புதிய தொலைபேசி இலக்கம் ஒன்றை அரசு அறிவித்துள்ளது. குரங்குகளினால் அழிவடையும் விவசாய நடவடிக்கைகளைத் தடுப்பதற்காகவே அரசு புதியதொரு தொலைபேசி இலக்கத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.

1992 என்ற இலக்கத்தின் ஊடாக தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி குரங்குகளின் தொல்லை சம்பந்தமான தகவல்களை வழங்கி, அதனூடாக விவசாயிகள் நிவாரணம் பெறமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-இ)

# மருத்துவபீடங்களுக்கு அதிகமான மாணவர்களை உள்வாங்கத் திட்டம்

கொழும்பு, செப்.9
அரச பல்கலைக்கழகங்களில் மருத்துவ பீடங்களுக்கு உள்வாங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை 350 இனால் அதிகரிப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி வழங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை கடந்த வருடத்திலும் பார்க்கக் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையால் அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் கேட்டுக்கொண்டதற்கு அமைவாக இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. இதற்குத் தேவையான பின்புல ஆற்றல் தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் மருத்துவபீடங்களுடன் அரசாங்கத்தின் அனைத்து பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் மற்றும் பீடாதிபதிகளுடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன. கூடுதலான மாணவர்கள் அரச பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு உள்வாங்கப்படும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. கூடுதலான மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதியை வழங்குவதன் ஊடாக நாட்டின் மனித வளத்துடன் ஒன்றிணையும் எதிர்கால மருத்துவ மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதே இதன் நோக்கமாகும் என்று கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ப-இ)




## மக்களுக்காக ஒன்றுபடுங்களேன்

எந்த ஒரு சிங்களக் கட்சிக்கோ, அல்லது அரசுக்கு முட்டுக் கொடுப்பவர்களுக்கோ வாக்களிக்க வேண்டாம். தப்பித் தவறியேனும் ஒருவர் இருவர் வந்துவிட்டாலும் தமிழ்த் தேசியம் மற்றும் பேரம் பேசும் சக்தி ஒழிக்கப்பட்டு விடும் என்று, இன்று சொல்லவில்லை. தேர்தல் நடைபெறுவதற்கு முன்பே சொன்னோம்.

ஆனால் தமிழ்த் தேசியம், தமிழ்த் தேசியம் என்று கூறிக்கொண்டு நம்மவர்கள் ஐந்து, ஆறாகப் பிரிந்து ஐக்கியத்துக்கு ஆப்பு வைத்துவிட்டனர். ஒரு கை தட்டி ஓசை ஏற்படாது என்பதற்கு சாட்சியாக நாடாளுமன்றத்தில் தனிமரங்களாக நிற்கின்ற அவல நிலையை நம்மவர்களே உருவாக்கி விட்டார்கள்.

தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் என்று இப்போது யாரும் இல்லை. அதனால் எவருடனும் பேச வேண்டிய அவசியமில்லை. வேண்டுமானால் அங்கஜனுடனும் டக்ளஸுடனும் பேசிக்கொண்டாலே போதும் என்கிறார்கள் ஆட்சியாளர்கள்.

அங்கஜனையும், டக்ளசையும் அருகில் அமர்த்திக் கொண்டு விக்கினேஸ்வரனை சிறையில் அடைக்க வேண்டும். அவரின் நாடாளுமன்ற உறுப்புரிமையைப் பறிக்கவேண்டும். அமிர்தலிங்கத்துக்கும் பிரபாகரனுக்கும் ஏற்பட்ட கதிதான் விக்கிக்கும் நடக்கும் என்று பகிரங்கமாக மரண அச்சுறுத்தலும் விடுக் கின்றனர்.

இவை எல்லாம் ஏன்? நமது பலவீனத்தையும், உட்பூசல்களையும் பயன்படுத்தி நமது விரல்களைக் கொண்டே நமது கண்களையும் குத்தி விட்டனர்.

இது தனிப்பட்ட விக்கினேஸ்வரனுக்கு மட்டும் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் அல்ல முழுத் தமிழ்ச் சமூகத்துக்கும் விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகவே கருதவேண்டியுள்ளது.

கடந்த காலங்களில் நாம் யாரை எல்லாம் ஆதரித்து நட்பு பாராட்டினோமோ , யாருக்கெல்லாம் வாக்களிக்கச் சொல்லி பிரசாரம் செய்தோமோ அந்தப் பேரினக் கட்சியைச் சேர்ந்தவர்கள் தான், ஆட்சியில் இருப்போரை விடவும் அதிகமாக இனவாதம் கக்குகின்றனர்.

தம்பி ஜனாதிபதி, அண்ணன் பிரதமர் சகோதரரும் பிள்ளைகளும் அமைச்சர்கள் என ராஜபக்சக்களின் குடும்பம் தான் இன்று நாட்டை ஆளுகின்றது.

இன்னொரு சகோதரரான பசில் ராஜபக்சவை அரச நிர்வாகத்தில் பங்காளியாக்குவதற்காக நாட்டில் அரசியலமைப்பையே மாற்றிவிட்டனர். ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் மாற்றுவதைத் தவிர எல்லாவற்றையும் என்னால் செய்ய முடியும் என்று 1978 இல் ஜே.ஆர் ஜெயவர்த்தன கூறியது போல், இன்று 2020 இல் கோத்தபாய ராஜ பக்சவிடம் அனைத்து அதிகாரங்களும் ஒப்படைக்கப்பட்டுவிட்டன.

நிலைமை இப்படி இருக்க வடக்கில் இருந்து தெரிவான அரச ஆதரவு உறுப்பினர்களாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதனும் அதிகாரச் சமர் நடத்துகின்றனர். இவர்களுக்கு நம் நிலைமையைப் பற்றி சிந்திப்பதற்கு நேரம் இல்லை. அக்கறையும் இல்லை.

இன்று நமது சமுதாயம் எதிர்நோக்கும் அபாயத்தையும் ,ஏற்பட்டுள்ள இழப்புக்களையும் சிந்தித்தாவது வடபகுதி தமிழ் அரசியல்வாதிகள் ஒன்றுபட்டுச் செயற்பட முன்வர வேண்டும்.

-சிகா

# கொரோனாத் தொற்று அறிகுறிகள் குழந்தைகளின் இதயம் பாதிக்கும்!

உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

**கொழும்பு, செப். 9**
**கொரோனா பெருந்தொற்று அறிகுறிகள் குழந்தைகளின் இதயத்தைக் கடுமையாகப் பாதிப்படையச் செய்யும் என்று ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கொரோனா பெருந்தொற்று குழந்தைகளையும் பாதித்து வருகிறது. ஐக்கிய நாடுகள் சபையின் உலக சுகாதார அமைப்பு இது தொடர்பில் தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளது.**

பெரும்பாலான குழந்தைகள் அறிகுறி இல்லாமலேயே கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தொடக்கத்தில் குழந்தைகளுக்கு எளிதில் கொரோனா தொற்று பரவாது என்று தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், அதன் பின்னர் நடந்த ஆய்வில் குழந்தைகளுக்கு கொரோனா வைரஸ் அறிகுறிகளை காட்டாமலேயே பரவியது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனால் கொரோனா வைரஸ் பரவலில் இருந்து குழந்தைகளை பாதுகாக்க தீவிரமாக கண்காணிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது. இந்த நிலையில் கொரோனா வைரஸ் நோய் அறிகுறிகள் குழந்தைகளின் இதயத்தை கடுமையாக பாதிப்படையச்செய்யும் என்று ஆய்வில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கிளினிக்கல் மெடிசன் இதழில் வெளியிடப்பட்ட அந்த ஆய்வு தொடர்பான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

குழந்தைகளின் அழற்சி நோய் அறிகுறிகள் கொரோனா வைரஸ் டன் இணைக்கப்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது. இதனால் அவர்களது இதயம் கடுமையாக பாதிக்கப்படலாம். இதன்மூலம் சில குழந்தைகளுக்கு வாழ்நாள் முழுவதும் கண்காணிப்பு தேவைப்படக்கூடிய அளவுக்கு அவர்களின் இதயத்தை சேதப்படுத்தும் நிலை உள்ளது.

600க்கும் மேற்பட்ட குழந்தைகளிடம் அழற்சி நோய் அறிகுறிகள் குறித்து ஆய்வு செய்தபோது ஆரோக்கியமாக உள்ள குழந்தைகள் அறிகுறி இல்லாமல் 3 அல்லது 4 வாரங்களுக்கு பிறகு அவர்களை வைரஸ் தொற்று தாக்குகிறது என்பது தெரியவந்தது. இதுகுறித்து நிபுணர்கள் கூறும்போது, 'குழந்தைகளுக்கு வைரசின் அறிகுறிகள் எதுவும் இல்லாமல் இருக்கலாம். அவர்கள் நோய் தொற்றால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று யாரும் அறிந்திருக்க மாட்டார்கள். சில வாரங்கள் கழித்து குழந்தைகள் உடலில் அழற்சி, வீக்கம் ஆகியவை ஏற்படுத்தலாம். அதன்பின் தான் அவர்கள் நோய் தொற்றால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது தெரியவரும்' என்றனர்- என்றுள்ளது.(ம-இ)





## கியூடெக் நிறுவனத்தின் விழிப்புணர்வு கருத்தமர்வு

யாழ்ப்பாணம் , செப்.9
கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஆற்றுப்படுத்தல் மற்றும் நல்லிணக்கம் ஊடாக நிலையான சமாதானத்தை நோக்கிய பயண நிகழ்வும், மதத் தலைவர்கள் மற்றும் சமூகத் தலைவர்கள் கலந்துரையாடலும், விழிப்புணர்வு கருத்தமர்வு கியூடெக் கரித்தாஸ் மண்ட பத்தில் நடைபெற்றது. இயக்குநர் அருட்பணி இயூஜின் பிரான்சிஸ் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பங்கேற்ற மதகுருமார், சமயங்களிடையே இருக்கின்ற சமாதான கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

இன்றைய காலச் சூழலில் மத ரீதியாக நம் நாடு சொல்லொணாத் துன்பங்களைச் சந்தித்து வருகின்றது.

இந்த நிலையில் வட பகுதியில் மனித மாண்பையும் நல்லிணக்கத்தையும் நல்லுறவையும் மேம்படுத்துவதற்காக மதத் தலைவர்கள் ஒன்றுபட்டு செயற்பட வேண்டுமென்று சமயத் தலைவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ந)


## வெருகல் - சித்திரவேலாயுத சுவாமி கோவிலை அடைந்தது யாத்திரை

திருகோணமலை மாவட்டத்தின் வெருகல் சித்திரவேலாயுத சுவாமி ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் ஏற்பாட்டில் ஆரம்பமான ஆன்மீக பாதயாத்திரை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை நிறைவடைந்தது.

மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சீ.யோகேஸ்வரன் தலைமையில் மண்டூர் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து இந்த ஆன்மீக பாதயாத்திரை கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது.

ஏழு நாள்கள் கடந்த நிலையில் பிரதான வீதியில் உள்ள ஆலயங்களை தரிசனம் செய்து இறுதி நாளான நேற்றுமுன்தினம் வெருகல் சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தை பாதயாத்திரை சென்றடைந்தது.

இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் நந்திக் கொடியை ஏந்தி அரோகரா கோசத்துடன் தங்களது ஆன்மீக பாதயாத்திரையில் கலந்து கொண்டனர். (ந-150)







## மன்னாரில் நீரியல் பூங்கா: களநிலைவர ஆய்வு ஆரம்பம்

மன்னார், செப்.9
மன்னார், வித்தல்தீவு நாயற்றுவெளி பிரதேசத்திற்கு மீன்பிடி நீரியல் இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜயசேகர மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் முன்னாள் பிரதி அமைச்சருமான காதர் மஸ்தான் ஆகியோர் உள்ளிட்ட குழுவினர் விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

நீர் வாழ் இனங்களை உற்பத்தி செய்யும் நீரியல் பூங்கா நிர்மாணிப்பதற்கான கள நிலவரங்களை ஆராய்வதற்காகவே மேற்படி விஜயம் அமைந்திருந்தது. இப் பகுதியில் பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்துவதோடு தொழில் வாய்ப்பை ஊக்குவிக்கும் நோக்கையும் அடிப்படையாகக் கொண்டே இச் செயற்றிட்டம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. (ந)

## கர்ப்பிணித் தாய்மாருக்கு சத்துணவுப் பொதிகள்

கரணவாய், செப்.9
கரவெட்டி பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியிலுள்ள கர்ப்பிணித் தாய்மாருக்கு ஒரு தொகுதி சத்துணவுப் பொதிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டன.

பிரதேச சபையின் வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் இந்தச் சத்துணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

கரவெட்டி பிரதேச சபைக்குட்பட்ட 200 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சுமார் ஆயிரத்து இருநூறு ரூபா பெறுமதியான இப் பொதிகள் கரவெட்டி பிரதேச சுகாதார பணிமனையூடாக வழங்கப்பட்டன என பிரதேசசபைத் தவிசாளர் த.ஐங்கரன் தெரிவித்தார். (ந-108)





கடந்த 3ஆம் திகதி வியாழக்கிழமை யாழ். ஒஸ்மானியா கல்லூரியில் மக்கள் பணிமனையினால் நடத்தப்பட்ட இஸ்லாமிய புது வருட எழுத்துப் பரீட்சைப் போட்டியில், தரம் 8 முதல் 11ம் ஆண்டு வரை கல்வி கற்கும் யாழ் ஒஸ்மானியா கல்லூரி மாணவர்களும், யாழ் கதீஜா முஸ்லிம் வித்தியாலய மாணவிகளும் பங்குபற்றினர். அவர்களில் வெற்றி பெற்றவர்களுக்கு மக்கள் பணிமனைத் தலைவர் மௌலவி. பி.ஏ.எஸ்.சுப்யான் பணப் பரிசில்களை வழங்கினார். (ந)

# பொருளாதார மீட்சியின் பின்னர் வங்கிக்கடனுக்கு 7 வீதமே வட்டி

## அமைச்சர் பந்துல அறிவிப்பு

கொழும்பு, செப். 9

**கொரோனா பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை யின் பொருளாதாரம் ஓரளவு வழமைக்குத் திரும்பிய பின்னர், வங்கிக்கடனுக்கான வட்டியை நூற்றுக்கு 7 வீதம் வரை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது என்று அமைச்சர் பந்துல குண வர்த்தன தெரிவித்தார்.**



கொழும்பில் வர்த்தகர்களுடன் இடம் பெற்ற உரையாடல் ஒன்றில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா பெருந்தொற்றால் இலங் கையின் பொருளாதாரம் மிகையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பொருளாதாரம் வழமைக்கு திரும்பியவுடன் உடன டியாக வங்கிக் கடனை நூற்றுக்கு 7 வீதம் வரை குறைக்க அரசு தீர்மானித்துள்ளது. தற் போது வங்கி வட்டியும் குறைக்க ப்பட்டுள் ளது. கடந்த காலங்களில் வர்த்தகம் செய்து வருடம் நிறைவடைந்த பின்னரே நட்டம் என்பது தெரியும். நல்லாட்சி அர சின் ஆட்சிக் காலப்பகுதியில் 28 வீத வட்டி அறவிடப்பட்டது. நூற்றுக்கு 20 25 வீத வட்டி அறவிட்டு அபிவிருத்திய டைந்த நாடு ஒன்று உலகில் இல்லை. இரட்டை இலக்க வட்டி தற்போது நீக்கப் பட்டு ஓரிலக்க வட்டியே தற்போது உள் ளது. இன்னும் ஓரளவு பொரு ளாதாரம் வளர்ச்சியடைந்தவுடன் வங்கி வட்டியை 7 வீதமாக்குவ தற்கு எதிர்பார்க்கப் படுகின்றது - என்றார். (ம-இ)

---

யாழ். மாநகர சபைக்குட்பட்ட மரக்கறி, இறைச்சிக் கடைகளில்

# பொலித்தீனுக்கு தடை

யாழ்ப்பாணம், செப். 9

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட மரக்கறிச் சந்தைகள் மற்றும் இறைச்சிக் கடைகளில் பொலித்தீன் பாவனை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது என்று சுகாதார வைத்திய அதிகாரி த.பாலமுரளி தெரிவித்துள்ளார்.

பொலித்தீன் பைகளைப் பாவிப்பதைக் கைவிடுவதற்கு மேற்படி கடைக ளின் உரிமையாளர்களுக்கு எதிர்வரும் 15ஆம் திகதிவரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

அதன் பிற்பாடு பொலித்தீன் பயன்படுத்தப்படின் வியாபார நிலைய உரி மையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (ம-இ)

---

# ருவான் ஐ.தே.க தலைவரானால் கட்சியில் இருந்து விலகுவேன்!!

## மேர்வின் அதிரடி அறிவிப்பு



கொழும்பு, செப். 9

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய தலைவராக கருஜயசூரிய நியமிக்கப்பட வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், ருவான் விஜேவர்தனவுக்கு தலைமைப்பதவி வழங்கப்பட்டால் ஐ.தே. கவில் அரசியல் பயணத்தை தொடரமாட்டார் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேர்வின் சில்வா மேலும் தெரிவித்ததாவது:

'ரணில் விக்கிரமசிங்க சிறந்த தலைவர், அவர் தலைமைப்பதவியில் நீடிப்பதற்கு எனக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை. எனினும், புதிய தலைவர் தொடர்பில் பேசப்படுவதால் அப்பதவிக்கு தற்போதைய சூழ்நிலையில் கருஜயசூரியவே பொருத்தமானவர்.

அவரை தலைவராக நியமித்து கட்சியை மீட்டெடுத்து அடுத்த தலைவர் பற்றி சிந்திக் கலாம். கருஜயசூரிய அரசியலில் அடிமட்டத்தில் இருந்து வந்தவர். எனவே, கட்சியை நிச்சயம் மீட்டெடுப்பார். ருவானுக்கு தலைமை பதவி வழங்கப்பட்டால் அதனை நான் கொள்கை ரீதியில் ஏற்றுக்கொள்ளமாட்டேன். ருவானால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில்கூட நான் பங்கேற்கவில்லை. எனது எதிர்ப்பையும்மீறி நியம னம் பெற்றால் ஐ.தே.கவை விட்டு விடை பெறுவேன்' என்றார். (ம-44)

---


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 11.08.2020 அன்று சிவபதமடைந்த
எமது குலவிளக்கு

**அமரர் வாமதாசன் நாகலெட்சுமி**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (10.09.2020) வியாழக் கிழமை காலை 07.00 மணியளவில் நயினாதீவு புனித கங்காதரணி தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் மு.ப. 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.)**

ஸ்ரீ அம்பிகை,
3ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

குடும்பத்தினர்.

Tel:077 669 1409


---

# தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டனர் 157 பேர்



வவுனியா வேலங்குளம் விமானப்படை தனிமைப்படுத்தல் மையத்தில் தனிமைப் படுத்தப்பட்டிருந்த 157 பேர் தனிமைப்ப டுத்தலை நிறைவுசெய்து நேற்று வீடுக ளுக் குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

கொரோனா பெருந்தொற்றுக் காரண மாக பல்வேறு நாடுகளிலும் சிரமத்தை எதிர்கொண்ட இலங்கையர்கள் நாட்டுக் குத் திருப்பி அழைக்கப்பட்டு வருகின்ற னர். அவர்கள் இலங்கையில் உள்ள பல்வேறு தனிமைப்படுத்தல் முகாம்க ளில் தனிமைப்படுத்தப்பட்டு வீடுகளுக்கு த் திருப்பி அனுப்பப்படுகின்றனர். இந்த நிலையில் வவுனியா வேலங்குளம் விமா னப்படை தனிமைப்படுத்தல் மையத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 157 பேர் தனிமைப்படுத்தலை நிறைவுசெய்து நேற்று வீடுகளுக்குத் திருப்பி அனுப்பப் பட்டனர்.

பக்ரைனிலிருந்து அழைத்துவரப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டவர்களே இவ்வாறு தனிமைப்படுத்தலை நிறைவுசெய்து இன்று வீடுகளுக்குத் திரும்பினர். (ம1

# இன்றைய நாள்

**மேடம்:** நன்மையடையும் நாள். புதிய விஷயங்களை ஏற்பதில் தயக்கம் காட்டுவீர்கள் வீட்டை விரிவுபடுத்துவீர்கள். பணி சம்பந்தமான முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டியிருக்கும் பொது வாழ்வில் ஈடுபாடு தோன்றும்.

**இடபம்:** வருமானம் திருப்தி தரும் நாள். அத்தியாவசியப் பொருள்களை வாங்குவீர்கள். பணியிடத்தில் புதிய பொறுப்புகளை ஏற்பீர்கள். மகிழ்ச்சியான செய்தி உண்டு.

**மிதுனம்:** பிரச்சினையிலிருந்து விடுபடும் நாள். பணியாளர்களின் வேலைப்பளு குறையும். குடும்ப எதிர்கால நலனுக்காகப் புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். பேச்சில் கவனம் தேவை.

**கடகம்:** பயங்கள் நீங்கும் நாள். பழைய நினைவுகள் சூழும். பொது வாழ்வில் ஈடுபடுவீர்கள். கலைஞர்களுக்குப் பிரபலமானவர்கள் ஆதரவுக் கரம் நீட்டுவர். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**சிம்மம்:** வீண் அலைச்சல்கள் முடிவுக்கு வரும் நாள். கலைஞர்களின் வெற்றிக்கு முயற்சி தேவை. கணவன், மனைவி இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு நீங்கும்.

**கன்னி:** மகிழ்ச்சியான நாள். சுறு சுறுப்பாகச் செயல்களைச் செய்து நாளைக் கழிப்பீர்கள். பணியா ளர்களுக்குச் சிறிய சிக்கல் வந்து நீங்கும். சேமிப்புக்குத் திட்டமிடுவீர்கள்.

**துலாம்:** சிக்கலான நாள். பணியாளர்களுக்குத் தங்கள் எண்ணம்போல எதுவும் நடக்காததால் வருத்தம் ஏற்படும் வதந்திகளைப் பரப்பிச் சிக்கலில் மாட்ட வாய்ப்புள்ளது.

**விருச்சிகம்:** தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள். பணியாளர்களுக்கு ஏற்பட்ட தடைகள் அகலும். பிள்ளை கள் விரும்பிக் கேட்ட பொருளை வாங்கித் தருவீர்கள்.

**தனுசு:** பெருமிதமான நாள். மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருப்பீர்கள். செயல்களை வழக்கமான நடைமுறைகளிலிருந்து மாற்றி செய்து வெற்றி காண்பீர்கள் .

**மகரம்:** ஏற்ற இறக்கமான நாள். குடும்ப உறுப்பினர்களால் மன வருத்தம் சிறிதளவு அதிகரிக்கும் . பணி இடங்களில் சிக்கல்களை தீர்க்க முயல்வீர்கள்.

**கும்பம்:** நெகிழ்ச்சியான நாள். அக்கம் பக்கத்தினருக்குச் செய்யும் உதவியால் பாராட்டப்படுவீர்கள். கணவருக்கு நல்ல தகவல் வரும்.

**மீனம்:** மனஅழுத்தம் குறையும் நாள். பிரியமானவர்களுடன் கருத்து வேறுபாடு நீங்கும். புதிய விவகாரங்களில் ஈடுபடும்போது கவனம் அவசியம்.

# தீப்பற்றிய கப்பலுக்கு விரைந்தது நிபுணர்குழு

**அம்பாந்தோட்டை, செப்.9**
**தீ விபத்துக்குள்ளான நியூ டயமன் கப்பலை ஆராய்வதற்காக மற்றுமொரு வெளிநாட்டு நிபுணர்கள் குழு கப்பலை நோக்கிப் புறப்பட்டுச் சென்றுள்ளது.**





11 வெளிநாட்டு நிபுணர்களைக் கொண்ட இக் குழு நேற்றுக் காலை அம்பாந்தோட்டை துறைமுகத்தில் இருந்து நியூ டயமன்ட் கப்பலை நோக்கி புறப்பட்டுச் சென்றுள்ளது. ஏற்கனவே ஒரு நிபுணர்கள் குழு விபத்துக்குள்ளான கப்பலை ஆராய்வதற்காகச் சென்றுள்ள நிலையில், அவர்களுடன் இவர்களும் இணைந்து செயற்படவுள்ளனர் எனத் தெரியவருகின்றது. நியூ டயமன் கப்பலில் தீ முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருந்தது. எனினும் கப்பலில் இருந்து அதிக உஷ்ணம் வெளியேறுவதால் இரசாயன பொருள்களையும் நீரையும் பயன்படுத்தி வெப்பத்தை தணிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என இலங்கை கடற்படை தெரிவித்திருந்தது. இந்நிலையில் கப்பல் தற்போது காணப்படும் சங்கமன்கண்டியில் இருந்து 30 கடல் மைல் தொலைவில் வீசும் பலத்த காற்று காரணமாகவும் கப்பலின் உள்பகுதியில் காணப்படும் அதிக உஷ்ணம் காரணமாகவும் கப்பலில் மீண்டும் தீ பரவ ஆரம்பித்துள்ளது. எனவே தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன கடற்படை உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வ-இ)

# சப்ரிகம திட்டத்தால் வாழ்வாதாரம் அழிப்பு

## மக்கள் முறைப்பாடு

முல்லைத்தீவு, செப்.9

சபரிகம திட்டத்தில் வீதி அமைப்பதாகக் கூறி மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டு, அதில் நின்ற வாழ்வாதரப் பயிர்கள் அழிக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்து பாதிக்கப்பட்ட மக்களால் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட மூங்கிலாறு கிராமத்தைச் சேர்ந்த மக்களே இவ்வாறு முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

மக்களின் காணிகளைப் பிடித்து 32 அடி அகலம் கொண்ட வீதியாக அமைப்பதற்கு புதுக்குடியிருப்பு பிரதேச செயலம் ஊடாக சபரிகம திட்டத்தின் ஊடாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 220 மீற்றர் தூரம் கொண்ட வீதியை அமைப்பதற்கு அந்த பிரதேசத்தைச் சேர்ந்த மாதர் அபிவிருத்திச் சங்கம் ஒன்று ஒப்பந்தம் செய்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனால் மக்களின் காணிகளில் உள்ள வாழை, கத் தரி, மரவள்ளி, தென்னை, முதிரை போன்ற மரங்கள் டோசர் மூலம் அழிக்கப்படுகின்றன என்று முறையிடப்பட்டுள்ளது. (ப-19)

# கண்ணதாசன் வழக்கு மீண்டும் விசாரணைக்கு

யாழ்ப்பாணம்,செப்.9

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இசைத்துறை விரிவுரையாளராகக் கடமையாற்றிய கண்ணதாசன் மீதான வழக்கு எதிர்வரும் 28, 29 மற்றும் 30ஆம் திகதிகளில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று வவுனியா மேல் நீதிமன்றம் அறிவித்துள்ளது. தமிழீழ இசைக் கல்லூரியின் பொறுப்பாளராக இருந்த கண்ணதாசன், போரின் முடிவில் படையினரிடம் சரணடைந்து மறுவாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டிருந்தார்.

அதன் பின்னர் யாழ்ப்பாணத்தின் புகழ்பெற்ற மிருதங்க கலைஞர்களில் ஒருவரான கண்ணதாசன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இசைத்துறை விரிவுரையாளராகப் பணியாற்றி வந்தார்.

கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியில் 2007 ஜனவரி மாதமளவில், சிறுமி ஒருவரை கட்டாயமாக விடுதலைப் புலிகள் அமைப்பில் சேர்த்தார் என சிறுமியின் தாயார், கண்ணதாசன் மீது 2014 மார்ச்சில் வழக்குத் தொடுத்தார். அடுத்த ஆண்டே பயங்கரவாத விசாரணைப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட கண்ணதாசன், பல மாதங்கள் சிறைவாசம் அனுபவித்தார்.

அதனடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்காக, பலவந்தமாக ஆள்களைக் கடத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் விரிவுரையாளர் கண்ணதாசனுக்கு எதிராக வவுனியா மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்கில் அவர் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டு, 2017ஆம் ஆண்டு அவருக்கு வவுனியா மேல் நீதிமன்றால் ஆயுள்தண்டனை வழங்கப்பட்டிருந்தது.

இந்தத் தண்டனையை எதிர்த்து க.கண்ணதாசன் சார்பில் மேன்முறையீட்டு நீதிமன்றில் மேன்முறையீடு செய்யப்பட்டது.

அந்த மேன்முறையீட்டு மனு மீது இரண்டு ஆண்டுகளாக விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில், கடந்த ஜூலை 22ஆம் திகதி அவரது ஆயுள் தண்டனையை இரத்துச் செய்த மேன்முறையீட்டு நீதிமன்றம், குற்றப்பத்திரிகையை மீள விளக்கத்துக்கு எடுக்க அனுமதியளித்திருந்தது.

இந்த நிலையில் அவருக்கு எதிராக குற்றப்பத்திரிகையை மீள விளக்கத்துக்கு எடுப்பதற்கு வவுனியா மேல் நீதிமன்றில் மீளவும் ஒப்படைக்கப்பட்டது. இந்த வழக்கு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன் முன்னிலையில் நேற்று முன்தினம் அழைக்கப்பட்டது.

கண்ணதாசன் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் பிணை விண்ணப்பத்தை முன்வைத்து சமர்ப்பணம் செய்தார்.

இரு தரப்பு வாதங்களையும் ஆராய்ந்து கட்டளை வழங்கப்படும் என அறிவித்த மன்று, வழக்கை எதிர்வரும் 28, 29 மற்றும் 30ஆம் திகதிக்கு தொடர் விளக்கத்துக்கு நியமித்தது. அதனால் செப்ரெம்பர் 28ஆம் திகதிவரை எதிரியின் விளக்கமறியலை மன்று நீடித்தமை குறிப்பிடத்தக்கது. (சு-இ)



> போதைப்பொருள் முகவர்களால் சமூக பொருளாதார மட்டத்தில் நலிவுற்றவர்களே குறிவைக்கப்படுகிறார்கள். இந்தக்கட்டமைப்பு கடுமை யாகச் சிதைவடைந்துள்ள பிரதேசங்களில் கிளிநொச்சி முதன்மை யாகவுள்ளமை முகவர்களுக்கு மிகவாய்ப்பாக அமைந்துள்ளது.

# போதையின் பாதையைத் தகர்க்க....!

மருத்துவர் க.ராகுலன்
பணிப்பாளர்,
மாவட்ட பொது மருத்துவமனை, கிளிநொச்சி.

தற்கால நவீன சமுதாயத்தில், சமூக கட்ட மைப்பிலேற்படும் மாற்றம் அதன் உறு தித்தன்மையைக் கேள்விக்குறியாக்குவ துடன் சமூகமட்ட பிரச்சினைகள் கிரமமாக அதிக ரித்துச்செல்ல வழிகோலுகின்றது. போதைக்கு அடிமையாதல் மிகப்பெரும் சமூகப்பிறழ்வாக உலகள வில் அடையாளம் காணப்பட்டுள்ளது. போதைப் பாவ னையானது நாடளாவிய ரீதியில் அதிகரித்து வரும் அதேவேளை, 2009 க்குப் பிற்பட்ட காலத்தில் வடமா காணத்தில் அதிவேகமாகப் பரவியுள்ளது. போதைப் பொருள் பாவனை மற்றும் அடிமையாதல், சமூக ஒற் றுமை மற்றும் முன்னேற்றத்தின் மிகப்பெரும் எதிரியா காவுள்ளது.

மேலும் பெரும் சமூகச்சீரழிவுகளான குற்றச்செயல்கள் அதிகரித்தல், பொது சுகாதார சீர்கேடு, தனிமனித ஒழுக் கவீனம், பட்டினி, நோய்களின் பெருக்கம் மற்றும் குடும் பங்களின் சிதைவு போன்றவற்றுக்கு மூலகாரணமா கின்றது. ஒரு நபரின் தனிப்பட்ட சுகாதாரம், உடற் தகுதி, உளநலன், பொருளாதாரம் மற்றும் குடும்பம் சமூகத் துடனான உறவு நிலை அனைத்தையும் பாதிக்கின்றது. பொலிஸாரின் தகவல்களின்படி வடமாகாணம் கேரளக் கஞ்சாவின் முதன்மை நிலையமாக மாறிவருவதுடன் கிளிநொச்சி, மன்னார், வவுனியா போன்ற மாவட்டங்க ளில் மறைத்து வைக்கப்பட்டு நாட்டின் பல பாகங்களுக் கும் கொண்டு செல்லப்படுகின்றது. அதேவேளை ஹெரோய்ன் தென் பகுதியில் இருந்தும் வட பகுதியை நோக்கி கொண்டுவரப்படுகின்றது.

### கிளிநொச்சி வரை பரவிய போதை

கிளிநொச்சியை பொறுத்த வரையில் போரினால் நலி வடைந்து மந்தகதியில் கட்டியெழுப்பப்பட்டுக்கொண்டி ருக்கும் மக்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் சமூகவி ருத்தி என்பவற்றை கேள்விக்குறியாக்கும் இன்னோர் கொடிய முகமாக இளையோரிடையேயான போதைப் பாவனை அதிகரிப்பு காணப்படுகின்றது.

ஒரு நாட்டின் அணையா ஒளிவிளக்குகளான மாணவர் கள் போதைப்பொருள்களுடன் கைதுசெய்யப்பட்டமை யானது மிகுந்த மனவருத்தத்தைத் தருவதுடன், இளை யோர் கண்மூடி திசைதெரியா வழியில் சென்றுகொண் டிருப்பதையும் கட்டியம் போட்டுக் காட்டுகிறது. கலாசா ரம், கல்வி இரண்டும் இரு கண்களெனக் கொண்ட வடமாகாண சமூகக்கட்டமைப்பு படிப்படியாகப் பார்வை இழந்து செல்வதன் இன்னோர் நிகழ்வே மேற்கூறிய மாணவர்களின் கைதாகும்.

### பொதுவான போதைப்பொருள்கள்...

மதுபானம் புகைப்பாவனைக்கு அப்பால் பல வகை யான போதைப்பொருட்கள் உலக சந்தையிலும், இலங் கையிலும் காணப்படுகின்ற போதும் கஞ்சா, ஹெரோய்ன் வடமாகாணத்தில் முதன்மையானதாக வுள்ளன.

போதைப்பொருள் முகவர்கள் மற்றும் விநியோகம்...

1. பாதாள உலகக் குழுவினர்.
2. போதைக்கு அடிமையானவர்கள்.


மேற்கூறப்பட்ட இருபிரிவினருக்கும் இடையிலான முகம் புலப்படாது வடிவமைக்கப்பட்ட சீரான கட்டமைப்பு மற்றும் வலையமைப்பினூடாக போதைப்பொருள் விநி யோகிக்கப்படுகிறது. பிரதான நபர்களின் நேரடிப் பிரசன் னம் அற்றவகையில் போதைப்பொருள் விநியோகம் இடம்பெறுகின்றமை அவர்களை அடையாளம் காண்பதில் பொலிஸாருக்கு பெரும் தலையிடியாக உள்ளது.

### பாடசாலை மாணவர்கள் குறிவைக்கப்படக் காரணம்

போதைப்பொருள் முகவர்களால் சமூகப் பொருளாதார மட்டத்தில் நலிவுற்றவர்களே குறிவைக்கப்படுகி றார்கள். இந்தக்கட்டமைப்பு கடுமையாகச் சிதைவ டைந்துள்ள பிரதேசங்களில் கிளிநொச்சி முதன்மையாக வுள்ளமை முகவர்களுக்கு மிகவாய்ப்பாக அமைந்துள்ளது.

மேலும், சமூகத்தில் இளையோர் மற்றும் பாடசாலை மாணவர்கள் போதைப்பொருள் முகவர்களால் பிரதா னமாக குறிவைக்கப்படுவதற்கான காரணமாக கீழ்வரு வனவற்றைக் குறிப்பிடலாம்.

- பெற்றோரில் முழுமையாக தங்கியிருக்கும் நிலை யிலி ருந்து சுயமாக முடிவெடுக்கும் நிலை நோக் கிய மாற்றத்திற்குரிய காலம். (Transition Period of Dependent to Independent).



கட்டிளமைப் பருவத்தை அடையும் இளையோர் (Adolescent) முற்று முழுதாக பெற்றோரில் தங்கி யிருக்கும் (Childhood ) நிலையிலிருந்து சுயமாக முடிவெடுக்க வல்ல (Adulthood) நிலைக்குமான காலத்தில் பயணிப்பதால் அவர்களின் முடிவெ டுக் கும் திறன் மிக நலிவாகக்காணப்படுவதுடன் மிக அதிகளவில் நண்பர்களின் கூட்டு முடிவுகளால் செல்வாக்குச்செலுத்தப்படுகின்றார்கள். இக்காலப் பகுதியில் நண்பர்களின் பிழையான, சமூகத்துக்கு ஒவ்வாத நடவடிக்கைகளை எதிர்க்கும் மற்றும் தடுக்கும் திறன் அரிதாகக் காணப்படுவதுடன் அவர்களும் அந்தச்செயற்பாடுகளின்பால் இழுத்துச் செல்லப்படும் வாய்ப்பு மிக அதிகமாகக்காணப்படுகி றது.

- **ஆபத்தான பரீட்சார்த்த முயற்சிகளை மேற் கொள்ளும் மனநிலை மற்றும் முயற்சி. (High Risk taking Behavior)**

பரீட்சார்த்த நடவடிக்கைகள் மற்றும் புதுமைகளைத் தேடும் ஆர்வம் மேம்பட்டுக்காணப்படுவதாலும் போதைப்பொருள் பாவனை மற்றும் நெறிதவறிய உற வுமுறைகளுக்கு அடிகோலுவதாலும் இக்காலப்பகுதி யானது இளம் சமுதாயத்தின் எதிர்காலத்தின் புதைகுழி யாக மாறும் சந்தர்ப்பம் பலமாகக் காணப்படுகின்றது.

- **உயிரியல் மற்றும் உடல் வளர்ச்சிக்கு நிக ரான உளசமூக வளர்ச்சி மற்றும் முதிர்ச்சி (Biological VS PsychoSocial Development).**

கட்டிளமைப்பருவத்தில் உடல் ரீதியான பலமடங்கு மாற் றங்களை இளையோர் அடைகின்ற போதிலும் அம்மாற் றங்களுக்கு நிகரான உள ரீதியான மற்றும் சமூக ரீதி யான வளர்ச்சி முதிர்ச்சி என்பன அடையக்கிடைப்ப தில்லை.

இது உருவத்தை மாத்திரம் கொண்டு உளவலிமையை கணிப்பிடுவதற்கு ஒப்பானது. தாய் தந்தை மற்றும் ஆசிரியர்களின் ஆழமான கவனிப்பும் ஆலோசனை யும் அபரிமிதமாக தேவைப்படும் காலமிது.

- **மூளை வளர்ச்சி. (Brain Development).**

விஞ்ஞான ரீதியாக ஓர் நபரின் மூளைவளர்ச்சியானது பிறப்பிலிருந்து 24 வயதுவரை நடைபெறவல்லது. இக்காலப்பகுதியில் மேற்கொள்ளப்படும் நெறிதவறிய செயற்பாடுகள் மற்றும் பழக்கவழக்கங்கள் அதன்பா லான பிரள்வு மற்றும் ஈர்ப்பை மூளையில் ஆழமாக ஏற்படுத்தவல்லது. எனவே இளையோர் இக்காலப்பகு தியில் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களினால் "உயர் பாதுகாப்பு வலையத்தினுள்" கண்காணிக்கப்பட வேண்டியமை அவர்களின் வளமான எதிர்காலத் திற்கு அத்தியாவசியமானது.

- **வாழ்க்கைத்திறன் பற்றாக்குறை. (Lack of Life Skills).**

"ஆம்" என்று சொல்லப் பழகுவதற்கு முன் எவ்வாறு "இல்லை" எனச்சொல்லப் பழக வேண்டும் என்பது முதி யோர் வாக்கு. இதன் நோக்கம் சமூகத்துக்கு நன்மை பயப்பன செய்யமுன் நாம் எந்தத்தீமையும் செய்ய வில்லை என்பது அதிமுக்கியமானது. கட்டிளமைப்பரு வத்திலுள்ள இளையோர் வாழ்க்கைத்திறன் விருத்தியில் பலவீனமாக காணப்படுகின்றனர். இதற்கு எமது கல்வி முறையும் ஓர் காரணமாகும். நண்பர்கள் செல்வாக்கு செலுத்துவதை எதிர்கொள்ளல் (Resisting Peer Pressure), சிந்தித்து முடிவெடுத்தல், சமூகத்துக்கு ஒவ் வாத செயற்பாடுகளை இனங்கண்டு தவிர்த்தல் என் பன இளையோரிடையே வளர்த்தெடுக்கப்பட வேண் டும்.

(நாளை தொடரும்)

கட்டிளமைப் பருவத்தை அடையும் இளையோர் (Adolescent) முற்றுமுழுதாக பெற்றோரில் தங்கியிருக்கும் (Childhood ) நிலையிலிருந்து சுயமாக முடி வெடுக்க வல்ல (Adul thood) நிலைக்குமான காலத்தில் பயணிப்பதால் அவர் களின் முடிவெடுக்கும் திறன் மிக நலிவாகக் காணப்படுவதுடன் மிக அதிகளவில் நண்பர்களின் கூட்டு முடிவுகளால் செல்வாக்குச் செலுத்தப்படுகின்றார்கள்.

## தகரப்பந்தல் தேவை

நல்ல நிலையில் உள்ள 50 அடி நீளமான தகரப்பந்தல் தேவை.

**தொடர்புகளுக்கு: 077 340 0950**

## வீடு வாடகைக்கு உண்டு

பிறவுண் வீதி, முதலாம் ஒழுங்கையில் 3 அறைகளுடன் கூடிய கீழ்த் தளம் வீடு வாடகைக்கு கொடுக்கப்படும்

**தரகர் தேவையில்லை**

**தொடர்பு: 077 521 7772**

## பண்ணை வேலைக்கு ஆட்கள் தேவை

யாழில் உள்ள கோழிப் பண்ணைக்கு வேலையாட்கள் தேவை.

**தொடர்பு: 0041-779 243 687**
**077-892 4659**

## வெள்ளவத்தையில் அறைகள்

ஒருவருக்கு - 500, இருவருக்கு - 1950
மூவருக்கு 3900 AC

Hotel Villa Co -6
ராமகிஸ்ண செட் அருகில் 077 255 2224

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

**2001 Honda Benly CD90**
மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.
(GE-Number)

077 8989 691 (யாழ்ப்பாணம்)

## பணியாளர்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் பிடைவை நிலையத்திற்கு விற்பனையாளர்கள் பெண்கள் தேவை.

**அனுபவம் உள்ளவர்களும்**
**பழக விரும்புபவர்களும்**

**தொடர்புக்கு:-077 173 0677**

# 20 ஆவது திருத்தத்துக்கு எதிராக சஜித் அணி பெரும் போராட்டம்




கொழும்பு, செப்.9

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட மூலத்துக்கு எதிராகவும், 19 ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் சென்று 19 பிளஸ் என்ற செயற்றிட்டத்தை நிறைவேற்றுமாறு வலியுறுத்தியும் நேற்று மாலை மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியினர் மாலை 4 மணியளவில் நாடாளுமன்ற வளாகத்துக்கு அருகிலுள்ள மாதுலுவாவே சோபித தேரருடைய நினைவுத் தூபிக்கு முன்னால் உறுதிமொழி எடுத்ததோடு இந்தப் போராட்டத்தையும் முன்னெடுத்தனர்.

ரஞ்சித் மத்தும பண்டார, லக்ஸ்மன் கிரியெல்ல, சம்பிக்க ரணவக்க, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, ராஜித சேனாரத்ன, கபீர் ஹாசீம், வடிவேல் சுரேஷ், அ.அரவிந்குமார், முஜிபுர் ரஹ்மான், ஹெக்டர் அப்புஹாமி, கயந்த கருணாதிலக, நளின் பண்டார, எஸ்.எம்.மரிக்கார், ஜே.சி.அலவத்துவல, இந்துநில் துஷார அமரசேன, எரான் விக்கிரமரத்ன உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளும் இதில் பங்கேற்றனர்.

(எ-22)

## கரைச்சி வடக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் - பரந்தன் கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்
## கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள்
## நடைபெறும் திகதியும் காலமும்
## 12.09.2020

வடக்கு-கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்ட 1998.05.16ஆம் திகதிய 1028 / 6 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வரத்தக மானியில் வெளியிடப்பட்டதுமான வடக்கு-கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கி வரும் வரையறுக்கப்பட்ட பல நோக்கு கூட்டுறவு சாங்கங்களின் கிளைக்குழுக்களை தெரிவு செய்வதற்காக ஆக்கப்பட்ட விதிகளுக்கமைய கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய சம்சுதீன் முகம்மது சுபைர் ஆகிய நான் 2020.02.20ம் திகதிய 2163 / 27 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தக மானி மூலம் என் மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின் படி மேற்படி சங்கத்தின் துணை விதி 23க்கு அமைய சங்கத்தின் சகல கிளைகளினதும் கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களை பின்வரும் கால அட்டவணைப்படி நடத்துவதற்காக, அந்தக் கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராக கடமையாற்றுவதற்கு கீழ்வரும் அலுவலர்களை பெயர் குறித்து நியமித்துள்ளேன்

**கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் நடைபெறும் திகதியும் இடமும்,**

| கி.இ.ல | கிளையின் பெயர் | தவிசாளர் பெயர் | கூட்டம் நடைபெறும் திகதி நேரம் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 01 | பரந்தன் | திருமதி.மு.புஸ்பலக்ஸ்மி | 12.09.2020 சனி மு.ப. 10.00 | பரந்தன் பொது நோக்கு மண்டபம் |
| 02. | இரணைமடு மேற்கு | திரு.க.பாலகிருஸ்ணன் | 12.09 2020 சனி மு.ப. 10.00 | பன்னாங்கண்டி பொ. நோ. மண்டபம் (இர மேற்கு ) |
| 03 | முரசுமோட்டை | திரு.நா. ஜெயவதனன் | 12.09.2020 சனி மு.ப. 10.00 | முரசுமோட்டை பொது நோக்கு மண்டபம் , |
| 04 | ஊரியான் | திருமதி.ஸ்ரீ. எமல்டா | 12.09.2020 சனி மு.ப. 10.00 | ஊரியான் பொது நோக்கு மண்டபம் |
| 05 | கண்டாவளை | திரு.பா.வாகீசன் | 12.09.2020 சனி மு.ப. 10.00 | கண்டாவளை பொது நோக்கு மண்டபம் |
| 07 | புளியம்பொக்கணை | திரு.க.செல்வகுமார் | 12.09.2020 சனி மு.ப. 10.00 | புளியம்பொக்கணை பொது நோக்கு மண்டபம் |
| 08 | கலவெட்டித்திடல் | திரு.அ.ஜேம்சன் | 12.09.2020 சனி மு.ப. 10.00 | கலவெட்டித்திடல் பொது நோக்கு மண்டபம் |
| 09 | புன்னைநீராவி | திரு.சி.சிறிதரன் | 12.09.2020 சனி மு.ப. 10.00 | புன்னைநீராவி பொது நோக்கு மண்டபம் |
| 10 | உமையாள்புரம் | திருமதி.அ.ரஞ்சினி | 12.09.2020 சனி மு.ப. 10.00 | உமையாள்புரம் பொது நோக்கு மண்டபம் |
| 11 | தட்டுவன்கொட்டி | திருமதி.த.சிவகுமாரி | 12.09.2020 சனி மு.ப. 10.00 | தட்டுவன்கொட்டி பொது நோக்கு மண்டபம் |
| 12 | ஆனையிறவு | திரு.அ.துஸ்யந்தன் | 12.09.2020 சனி மு.ப. 10.00 | ஆனையிறவு பொது நோக்கு மண்டபம் |
| 13 | குமரபுரம் | திருமதி.த.செல்வகேந்தினி | 12.09.2020 சனி மு.ப. 10.00 | குமரபுரம் பொது நோக்கு மண்டபம் |
| 14 | பொறிக்கடவை | திரு.ம.லெட்டினன் | 12.09.2020 சனி மு.ப. 10.00 | பொறிக்கடவை பொது நோக்கு மண்டபம் |
| 15 | தருமபுரம் | திருமதி கே.கலைாணி | 12.09.2020 சனி மு.ப. 10.00 | தருமபுரம் பொது நோக்கு மண்டபம் |
| 16 | பிரபந்தனாறு | திரு.தே.வேணுகோபாலன் | 12.09.2020 சனி மு.ப. 10.00 | பிரபந்தனாறு பொது நோக்கு மண்டபம் |
| 17 | கல்மடுநகர் | திரு. பெ.பவளராஜ் | 12.09.2020 சனி மு.ப. 10.00 | கல்மடுநகர் பொது நோக்கு மண்டபம் |

- இதற்கமைய இந்தக் கூட்டங்களில் சமூகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல் சம்மந்தப்பட்ட அலுவலரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன
- கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற் சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர் களின் நான்கிலொரு 1/4 பங்கினர் அல்லது 25 பேர் அதில் எது குறைவோ அத்தொகையாகும்.
- தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையிலிருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது (09) உறுப்பினர்களை தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச்சபையை கோருவார் இவர்களுள் ஆகக் குறைந்தது இருவராவது (02) 18 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- சபையிலிருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் அவ்விரு தொகையினருக்கும் மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவை மேற்கொள்வார்.
- இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட வேட்பாளர்களிடையே சம வாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் திருவுளச் சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
- தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச்சபையில் பிரகடனப்படுத்துவதுடன் சங்கச் செயலாளருக்கும் எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.
- கிளைப்பொதுச்சபைக் கூட்டத்திற்கு வாக்களிக்க தகமையுடைய உறுப்பினர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் 16.08.1998ம் திகதிய 1028/06 இலக்கம் கொண்ட அதி விசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய கூட்ட அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. அறிவித்தல் கிடைக்காத வாக்களிக்கத் தகுதியுடைய அங்கத்தவர்களும் அன்றைய கூட்டத்திற்கு சமூகமளித்து தங்கள் ஜனநாயக உரிமையைப் பயன்படுத்தி கூட்டுறவு அமைப்பை ஜனநாயக ஆளுமை கொண்டதாகச் செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

ஒப்பம்

**தகவல்: செயலாளர்**
**கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்கம்**

**எஸ்.எம் .சுபைர்**
**கூட்டுறவு அபிவிருத்தி உதவி**

## காணியும் வீடும் விற்பனைக்கு

வைத்தியசாலை வீதியிலுள்ள காணியும் வீடும் விற்பனைக்குண்டு (ஏ9 வீதிக்கும் தேவாலயத்திற்குமிடையே) ஐந்து அறையில் நான்கு அறைகள் இணைந்த குளியலறையும், குளிரூட்டியுடன் கூடியது. வரவேற்பறையுடன் இணைந்த குளியலறை, சமையலறை, வெளிப்புறம் திறந்த சமையலறை, வாகனத்தரிப்பிடமும் இணைந்த குளியலறையும், குழாய் கிணறு, கிணறு என்பவற்றுடன் கூடியது.

**077 226 7191**

## மணிவிழா நாயகனை வாழ்த்துகிறோம்




எமது பாடசாலையில்
**விவசாய பாட ஆசிரியராகக்**
கடமையாற்றி 09.09.2020
இன்று ஓய்வு பெறும்

**வ.முத்துக்குமார்**

அவர்களை வாழ்த்துவதோடு
அவரது ஓய்வு காலம் சிறப்பாக
அமைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
**யா/மந்துவில்**
**றோ.க.த.க. பாடசாலை**

## பொது வைத்தியசாலை வவுனியா
## பெறுகை அறிவித்தல்
## அழுக்குத் துணிகளை
## சலவை செய்தல்சேவை-2020/2021

01. வவுனியா பொது வைத்தியசாலையில் 2020 / 2021 ஆம் ஆண்டிற்கான அழுக்குத் துணிகளை சலவை செய்தல் சேவைக்காக முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல | விபரம் | எண்ணிக்கை | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை | கேள்வி பிணை |
|---|---|---|---|---|
| அ) | அழுக்குத் துணிகளை சலவை செய்தல் சேவை | ... | ரூ.2,000.00 | ரூ.20,000.00 |

02 மீளளிக்கப்படாத வைப்புக்கள் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் நிதிப்பிரிவில் காசாக செலுத்திப் பற்றுச்சீட்டுக்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றிலிருந்து 23.12.2020 வரை செல்லுபடியாகக்கூடிய பிணைப்பொறுப்பொன்று கேள்வி ஆவணத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

03 பெறுகைப்பத்திரம் கோரும் நிறுவனங்கள் குறித்த சேவையினை வழங்குவதற்கான வியாபார பெயர்ப்பதிவினை கொண்டிருப்பதுடன் அது தொடர்பான அனுபவத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

04 பெறுகை ஆவணங்கள் 09.09.2020 தொடக்கம் 22.09.2020 வரை வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் நிதிப்பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

05 பிரதியுடன் கூடிய சகல பெறுகை ஆவணங்களும் **“தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, மாவட்ட பொது வைத்தியசாலை, வவுனியா”** என்ற முகவரிக்கு அனுப்பப்படுவதுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **“2020 / 2021 ஆம் ஆண்டிற்கான அழுக்குத் துணிகளை சலவை செய்தல் சேவை வழங்கல்”** என குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

07 சகல முத்திரையிடப்பட்ட பெறுகைகளும், 23.09.2020 முற்பகல் 10.30 மணி வரை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

08 பெறுகை நேரம் முடிவடைந்தவுடன் 23.09.2020 முற்பகல் 10.30 மணிக்கு திறக்கப்படும். பெறுகை திறக்கும் போது விண்ணப்பதாரரோ அல்லது எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.

09 மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் நேரடியாகவோ அல்லது 024-2222715, 024-2228094 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொண்டு அறிந்துகொள்ளலாம்.

10 பெறுகை தொடர்பாக பெறுகைக்குழுவின் தீர்மானமே இறுதித்தீர்மானமாகும்.

தலைவர்
பிராந்திய பெறுகைக் குழு,
மாவட்ட பொது வைத்தியசாலை,
வவுனியா.

# தவறான முடிவெடுத்து இளைஞர் உயிர்மாய்ப்பு

யாழ்ப்பாணம், செப்.9
கோப்பாய் மத்தியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளார். குகதாஸ் தினேஸ் (வயது18) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

இவர் கடந்த 12ஆம் திகதி மாவா போதைப் பொருளுடன் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். பின்னர் அவர் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். அதன்பின்னர் அவர் வேலைக்குச் செல்லவில்லை. அதையடுத்து தாய் கண்டித்துள்ளார். 13ஆம் திகதி அவர் வீட்டிலிருந்து வெளியேறிச் சென்றுள்ளார்.

வீட்டின் அருகே உள்ள வாழைத் தோட்டத்தில் இருந்து அவர் விசமருந்திய நிலையில் மீட்கப்பட்டு கோப்பாய் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த அவர், நேற்று சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டார். (எ26,20,25)

## வீடு...

படவில்லையாயின், உடனடியாக யாழ்ப்பாண மாவட்டச் செயலக தேர்தல்கள் திணைக்களத்தின் 021 222 2655 என்ற இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு முறைப்பாடுகளைத் தெரிவிக்க முடியும் என்று, யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் கி.அமல்ராஜ் தெரிவித்தார்.

2020 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் கடந்த 2ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. கிராம அலுவலர்கள் ஒவ்வொரு வீடு வீடாகவும் சென்று பிசி படிவத்தை விநியோகிக்க வேண்டும். அவ்வாறு படிவத்தை வீட்டுக்குக் கொண்டு வந்து வழங்காது, அலுவலகத்திலிருந்தவாறு ஏனையவர்களிடம் பி.சி படிவத்தை கொடுத்து விட முடியாது. வீட்டுக்கு கொண்டு வந்து வழங்கத் தவறும் கிராம அலுவலர்கள் தொடர்பில் பொதுமக்கள் முறைப்பாடுகளைத் தெரிவிக்க முடியும். முறைப்பாடுகள் தெரிவிப்பது தொடர்பில் பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லை. முறைப்பாடு தெரிவிப்பவர்களது விவரங்கள் இரகசியம் காக்கப்படும், என்றார். (ஒ.5)

## பொன்னாலை...

சவம் இன்று காலை நடைபெறவுள்ளது. அதிகாலை 4 மணிக்கு அபிசேக ஆராதனைகளுடன் பூசைகள் ஆரம்பமாகித் தொடர்ந்து காலை 6.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெறும். அதைத் தொடர்ந்து பெருமாள் இரதத்தில் ஆரோகணிப்பார். நாளை திருவடி நிலையில் தீர்த்தோற்சவம் நடைபெறும். (எ)

## மூன்று...

மியே உயிரிழந்தார். நேற்று மதியம் நொச்சிமோட்டை பகுதியில் அமைந்துள்ள காணியைத் துப்புரவாக்கிக் கொண்டிருந்த ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் மீது அந்தப் பகுதியில் மரம் ஒன்றில் இருந்த குளவிகள் தாக்கியுள்ளன.

அதில் பாதிப்புற்ற அவர்கள் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். எனினும் சிகிச்சை பலனின்றி மூன்று வயது குழந்தை உயிரிழந்தது. மற்றொரு குழந்தை, குழந்தையின் தாய் மற்றும் உறவினர் ஒருவர் என மூவர் பாதிப்புற்ற நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். (எ10,18)

---

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### ஏகாம்பரம் தசரதர்

2 ஆம் ஆண்டு நினைவு அந்தியேட்டி கிரியை 09.09.2020
யாழ். வீதி, மதவடி ஒழுங்கை, உடுப்பிட்டியில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.
உங்கள் ஆத்மா இறைவனடியில் இங்கிதமாய் இருக்க இறைவனை வேண்டுகின்றோம்.

தோற்றம் 20.03.1946 மறைவு 02.09.2018
மனைவி - நகேந்திராதேவி
பெறாமகள் - வேலாயுதம்பிள்ளை - ரதி

---

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு : 10.04.1942
இறப்பு : 08.09.2020

எமது பாடசாலை ஆசிரியர் திருமதி.இ.நித்தியானந்தராசா அவர்களின் அன்புத் தாயார்

### தி.யோகமணி

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து கொள்வதுடன். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
**யா/நாவற்குழி மகாவித்தியாலயம், நாவற்குழி.**

---

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் பொருளாளர் சிரேஸ்ட பேராசிரியர் **தி.வேல்நம்பி** அவர்களின் அன்புத் தாயார்

### யோகமணி திருநாவுக்கரசு

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் உறவுகள் அனைவருக்கும் எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.
அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம்**

---

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியை **திருமதி சுகந்தி சிவகுமாரின்** அன்பு மாமியார்

### சின்னையா இரத்தினபூபதி

அவர்கள் 07.09.2020 திங்கட்கிழமை காலமானார். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**
**ஆசிரியர் வட்டம்**

---

## கண்ணீர் அஞ்சலி



பருத்தித்துறை சுகாதார வைத்தியதிகாரி பணிமனையில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் சபாரத்தினசர்மா உமாபதிசர்மா அவர்களின் அன்புத் தந்தையார்

### பிரம்மஸ்ரீ ஞா.சபாரத்தினசர்மா

07.09.2020ஆம் திகதி காலமாகிவிட்டார். அவரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக்கொள்வதோடு, ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்**
**ஊழியர் நலன்புரிச் சங்கம்**
**சுகாதார வைத்தியதிகாரி பணிமனை, பருத்தித்துறை.**

---

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கனகலிங்கம் குகானந்தவல்லி

(குகம் அக்கா)

தோற்றம் 18 . 04 . 1946
மறைவு 07 . 09 . 2012

திதி: ஸப்தமி தேய்பிறை
(09.09.2020)

அன்பின் திருவுருவமே! பண்பின் உறைவிடமே!
எங்களுக்கெல்லாம் அன்பு காட்டி அரவணைத்த
- எம் அன்புத் தெய்வமே!
நீங்கள் எங்களை விட்டு பிரிந்து எட்டு ஆண்டுகளல்ல எத்தனை ஆண்டுகள் தான் சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சங்களை விட்டு அகலாது அம்மா!

"குகம் வாசம்"
விளையாட்டரங்க வீதி, கல்வியங்காடு.
**குடும்பத்தினர்.**

---

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் அங்கத்தவரும் முன்னாள் பொருளாளரும் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் முன்னாள் பீடாதிபதியும் கணக்கியல் துறையின் சிரேஸ்ட பேராசிரியருமான பேராசிரியர் **தி.வேல்நம்பி** அவர்களது அன்புத் தாயாரான

### திருமதி யோகமணி திருநாவுக்கரசு

அவர்கள் நேற்று (08.09.2020) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார் என்பதை மிகுந்த மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.09.2020) புதன்கிழமை முற்பகல் 10.0 மணியளவில் காமாட்சி அம்மன் கோவிலடி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி என்ற முகவரியின் (இராசபாத வீதியில் உள்ள ராசன் கடை மற்றும் திருமண மண்டபம் என்பவற்றிற்கு மிக அண்மையில்) அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற உள்ளது.

அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா எல்லாம்வல்ல இறைவனின் திருப்பாதங்களில் அமைதிபெறப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்**

---

## மரண அறிவித்தல்



தோற்றம் 22 . 07 . 1945
மறைவு 08 . 09 . 2020

### திருமதி தில்லைநாதன் மணிமேகலை

திருநெல்வேலியை பிறப்பிடமாகவும், இந்துமகளிர் ஒழுங்கை, கந்தர் மடத்தை வசிப்பபிடமாகவும், கனடாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தில்லைநாதன் மணிமேகலை நேற்று (08.09.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லைநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மஞ்சல் நடராசா நல்லம்மா தம்பதியின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற சின்னையா சின்னதங்கம் ஆகியோரின் மருமகளும், கணேசன் (கனடா), தில்லைநாயகி (சுமதி-கனடா), ஆகியோரின் அருமை தாயாரும், தயாளினி (கனடா), உதயகுமார் (கனடா), ஆகி யோரின் அருமை மாமியாரும், கஜன், அட்சயன், லருஷன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், இரகுநாதன், காலஞ்சென்றவர்களான மங்கையர்கரசி, சரோஜினிதேவி, மற்றும் மனோண்மணி, பாக்கியநாதன், தனராணி ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்ற ஜயாதுரை, கனகம்மா, கிஷ்னசாமி, சண்முகநாதன் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.09.2020) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**66/25, இந்துமகளிர் வீதி,**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## பட்டப் பகலில்...

வீட்டின் கதவை உடைத்து பணம் மற்றும் நகைகள் திருடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் நேற்றுக் காலை நடந்துள்ளது.
வீட்டிலிருந்தவர்கள் வெளியே சென்றுவிட்டு முற்பகல் 10 மணியளவில் வீடு திரும்பியுள்ளனர். அப்போது வீட்டின் கதவு உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்பட்டிருந்தது. வீட்டிலிருந்த 20 ஆயிரம் ரூபா பணம் மற்றும் 23 பவுண் நகைகள் திருடப்பட்டிருந்தன என்று வீட்டு உரிமையாளர் தெரிவித்தார்.
இந்தச் சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அச்சுவேலி பொலிஸாரும், தடயவியல் பொலிஸாரும் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். (எ-26)

## குற்றவாளிக்கு...

நாடாளுமன்ற உறுப்பினராக நேற்றுப் பதவியேற்றதை அடுத்து சஜித் தரப்பினர் நாடாளுமன்றத்தில் இருந்து வெளிநடப்புச் செய்தனர்.
பிரேமலால் ஜயசேகர பதவியேற்க வந்தபோது கறுப்புச் சால்வைகளை அணிந்து எதிர்ப்பை வெளிப்படுத்திய எதிர்க்கட்சியினர், அவர் பதவியேற்றதைத் தொடர்ந்து சபையில் இருந்து வெளிநடப்புச் செய்தனர். (ம-இ)

## இளைஞர்களின்...

வரவேற்பதாகவும், இது கட்சிகளுக்கு இடையிலான ஒற்றுமையை கட்டியெழுப்ப உதவியாக இருக்கும் என்றும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுள் ஒன்றான புளொட்டின் தலைவர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.
இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட வாலிபர் முன்னணி தலைவர் க.பிருந்தாபன், செயலர் சேனாதிராசா கலையமுதன், தமிழ் மக்கள் கூட்டணியின் இளைஞர் அணித்தலைவர் கி.கிருஸ்னமேனன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முன்னாள் தேசிய அமைப்பாளர் மணிவண்ணன் அணியைச் சேர்ந்தவர்கள் கூட்டாக யாழ்ப்பாணத்தில் செய்தியாளர் சந்திப்பில் நடத்தினர். தியாக தீபம் திலீபனின் நினைவு நாளை முன்னிட்டு நடைபவனி ஒன்றை ஒற்றுமையாக முன்னெடுக்கவுள்ளோம் என குறிப்பிட்டிருந்தனர்.
இளைஞரணியின் ஒற்றுமை தொடர்பில் கேட்டபோது சித்தார்த்தன் மேலும் தெரிவித்தாவது, இந்த முயற்சியை நான் வரவேற்கின்றேன். கட்சிகளுக்கு இடையில் ஒற்றுமையில்லை. அந்தக் கட்சிகளின் இளைஞர் அணிகளுக்கு இடையில் ஒற்றுமை உருவாகுவது நல்ல விடயம். இந்த ஒற்றுமை எதிர்காலத்தில் கட்சிகளுக்கு இடையில் ஏற்படவேண்டும், என்றார். (ஒ-5)

## பேய்...

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோர் கூட்டாகத் தெரிவித்தனர்.
இம்முறை பொதுத்தேர்தலில் இரத்தினபுரி மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் சார்பில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியிருந்த தூக்குத் தண்டனைக் கைதியான பிரேமலால் ஜயசேகர நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் நாடாளுமன்ற உறுப்பினராகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.
பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கழுத்தில் கறுப்புப் பட்டிகளை அணிந்துகொண்டு அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அரசமைப்புக்கமைய தூக்குத் தண்டனைக் கைதியொருவர் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்க முடியாது என்று அவர்கள் கோஷம் இட்டு சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.
தூக்குத் தண்டனைக் கைதி ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்றுள்ளமை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே சந்திரிகாவும், மங்களவும் நேற்றிரவு மேற்கண்டவாறு தெரிவித்தனர்.
அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:
ஆட்சியாளர்களும் நீதித்துறையும் நாட்டின் அரசமைப்புக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும். தூக்குக் தண்டனைக் கைதி ஒருவர் அரசமைப்புக்கமைய நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவும் முடியாது; நாடாளுமன்ற உறுப்பினராகவும் பதவியேற்கவும் முடியாது. ஆனால், இலங்கையில் தற்போதைய ஆட்சியில் எல்லாம் தலைகீழாக நடக்கின்றது. ஜனநாயகம் சாகடிக்கப்படுகின்றது. நீதித்துறையும் நாடாளுமன்றமும் ஆட்சியாளர்களின் காலடிகளுக்குச் செல்கின்றன.
கொலைக்குற்றத்துடன் தொடர்புபட்டமைக்காகவே பிரேமலால் ஜயசேகரவுக்கு நீதிமன்றம் தூக்குத் தண்டனை வழங்கியிருந்தது. தூக்குத் தண்டனைக் கைதியான அவர், நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு தற்போது நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்றுள்ளார். இது எந்தவகையில் நியாயமானது? ஆனால், ஒரு விதத்தில் இந்த விடயம் இந்த ஆட்சியில் சகஜமே. ஏனெனில் குற்றவாளிகளும், கொலையாளிகளும் ஆட்சிப்பீடத்தில் இருக்கும்போது தூக்குத் தண்டனைக் கைதி ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்பதும் சகஜம் தான். இந்தக் கொலைகார ஆட்சிக்கு ஆணை வழங்கிய நாட்டு மக்கள் தலைகுனிந்து வெட்கப்பட வேண்டும்.
ஆளுந்தரப்பில் பிரேமலால் ஜயசேகரவுக்கு மட்டும்தான் நீதிமன்றம் மரண தண்டனை வழங்கியுள்ளது. ஆனால், அந்தத் தரப்பிலுள்ள பலர் தூக்குத் தண்டனைக் கைதிகளே. அவர்கள் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படாததால் இன்று வெளியில் சுதந்திரமாக நடமாடுகின்றார்கள்.
நாட்டின் அதியுயர் சபையை இன்று நாடாளுமன்றம் என்று கூறுவதைவிட தூக்குத் தண்டனைக் கைதிகளின் சிறைக்கூடம் என்று கூறினாலும் தப்பில்லைஎன்றனர். (எ-22)

## சிகிச்சைக்கு...

குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பயனின்றி நேற்று மதியம் உயிரிழந்தார். மகாறம்பைக்குளம், புளியடியைச் சேர்ந்த சிவபாலன் (வயது49) என்பவரே உயிரிழந்துள்ளார்.
இந்தக் குடும்பஸ்தர் இரு நாள்களுக்கு முன்பாக நாய்க்டிக்கு இலக்காகியுள்ளார். அவர் தடுப்பூசி போடுவதற்காக வவுனியா மருத்துவமனைக்கு நேற்றுச் சென்றுள்ளார். அவருக்கு நாய் கடித்தமைக்கான தடுப்பூசி நேற்றுக்காலை ஏற்றப்பட்டது. அதன்பின்னர் அவர் வீடு திரும்பியுள்ளார்.
அங்கு அவருக்கு சுகவீனம் ஏற்பட்டுள்ளது. அதையடுத்து அவர் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.
சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டவருக்கு தவறுதலாகத் தடுப்பூசி ஏற்றப்பட்டதாலேயே அவர் உயிரிழந்தார் என்று உறவினர்கள் குற்றஞ்சாட்டியதால் மருத்துவமனையில் குழப்பமான நிலைமை ஏற்பட்டது.
இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட வவுனியா திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சிவநாதன் கிசோர் உயிரிழந்தவரின் மனைவியிடம் வாக்குமூலம் பதிவு செய்தார்.
தவறான தடுப்பூசியைச் செலுத்தியமையாலேயே தனது கணவர் உயிரிழந்தார் என்றும், அவரது உயிரிழப்பில் சந்தேகம் உள்ளது என்றும் மனைவி தனது வாக்குமூலத்தில் தெரிவித்திருந்தார்.
அதையடுத்து சடலத்தை உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்துமாறு இறப்பு விசாரணை அதிகாரி சிவநாதன் கிசோர் உத்தரவிட்டிருந்தார்.
சடலம் உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அதன் அறிக்கையின்படி குடும்பஸ்தர் மாரடைப்பால் உயிரிழந்தார் என்பது உறுதிப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (எ-110)

## ஒரு வருடத்தில்...

அவகாசமே வழங்கப்படும் இவ்வாறு நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.
புதிய அரசமைப்பை இயற்றுவதற்கான கால எல்லை தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட பின்னர் நிச்சயம் புதிய அரசமைப்பு உருவாக்கப்படும். அதற்கான பூர்வாங்க பணிகள் ஆரம்பமாகியுள்ளன. நிபுணர் குழுவின் பணி, வரைவு நகலை முன்வைப்பதற்கான கால எல்லை, அவர்களுக்கான அலுவலகம், வரவு செலவுத் திட்டம் உள்ளிட்ட விடயங்கள் பட்டியலிடப்பட்டு உரிய வகையிலேயே பொறுப்பு கையளிக்கப்படும்.
இதன்படி வரைவு நகலை முன்வைப்பதற்கு அமைச்சரவையின் அனுமதியுடன் நிபுணர் குழுவுக்கு ஆறு மாதங்களை வழங்குவதற்கு எதிர்பார்க்கின்றோம். புதிய அரசமைப்பை இயற்றி முடிக்கும் பணியை ஓராண்டுக்குள் பூர்த்தி செய்வதே எதிர்ப்பார்ப்பாக இருக்கின்றது.
1970ஆம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கு நாட்டில் பெரும்பான்மைப் பலம் கிடைத்தது. 1977ஆம் ஆண்டு அவர் தோல்வியடைந்தார். அதன்பின்னர் 1994ஆம் ஆண்டிலேயே வரக்கூடியதாக இருந்தது.
1977ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜயவர்தனவுக்கு ஆறில் ஐந்து பெரும்பான்மை பலம் கிடைத்தது. இனி எப்போதும் தனது கட்சி தோற்காது என நம்பினார். 82ஆம் ஆண்டு தேர்தலைக் கூட நடத்தவில்லை. 94ஆம் ஆண்டு ஐ.தே.க.தோல்வியடைந்த பின்னர் அக்கட்சியால் இன்று வரை ஜனாதிபதியொருவரை தெரிவு செய்ய முடியாமல் உள்ளது. இன்று படுதோல்வியடைந்துள்ளது.
2010ஆம் ஆண்டு எமது அரசுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் கிடைத்தது. எனினும், 2015ஆம் ஆண்டில் தோல்வி ஏற்பட்டது. எனவே, வரலாற்றிலிருந்து நாம் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். அதுவே ஜனநாயக அம்சமும்கூட. எப்படியான பெரும்பான்மை கிடைத்தாலும் அதனை உரிய வகையில் முகாமை செய்து, மக்களுக்குத் தேவையானவற்றைச் செய்யாவிட்டால் அன்று ஏற்பட்ட நிலையே மீண்டும் ஏற்படும் என்றார். (ம-44)

## அரச...

யர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று மாலை நடந்துள்ளது. வீதியால் பயணித்த அரச ஊழியர் மீது மோட்டார் சைக்கிளில் முகத்தை மூடித் தலைக்கவசம் அணிந்து வந்த இருவர் வாளால் வெட்டித் தாக்கியுள்ளனர். அதில் அரச ஊழியரின் வலது கையில் காயம் ஏற்பட்டது. தாக்குதல் நடத்தியவர்கள் தப்பிச் சென்றுள்ளனர். காயமடைந்த அரச ஊழியர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ-26)

## மீள்குடியமர...

வர்கள் தெல்லிப்பழை பிரதேச செயலகத்துடன் (0212241726) தொடர்பு கொள்ளுமாறும், யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வெளியில் வசிப்பவர்கள் யாழ்ப்பாண மாவட்ட தேர்தல்கள் திணைக்களத்துடன் (0212222655) தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.
2020ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வலி.வடக்கில் மீளக்குடியமர அனுமதிக்கப்படாத பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் பல்வேறு இடங்களிலும் வசித்து வருகின்றனர். அவர்கள் தற்போது வசித்து வரும் பிரதேசங்களில் தம்மை வாக்காளர்களாகப் பதிவு செய்யாமலிருந்தால், 2020ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியலில் தமது பெயரைப் பதிவு செய்து கொள்வதற்கே தொடர்பு கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-5)

## எம்.பியானார்...

மன்ற அமர்வில் கலந்துகொண்டார்.
2015ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தல் பரப்புரையொன்றில் துப்பாக்கிச்சூடு நடத்தி ஒருவரைக் கொலைசெய்தமைக்காக பிரேமலாலுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அவர் அண்மையில் முடிவடைந்த பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று நாடாளுமன்ற உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டிருந்தார். எனினும் அவர் நாடாளுமன்ற அமர்வுகளில் பங்கேற்கத் தடை விதிக்கப்பட்டது. இதை எதிர்த்து மேன்முறையீடு செய்து வெற்றிபெற்றார் பிரேமலால். அதையடுத்து அவர் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்று நாடாளுமன்றின் நேற்றைய அமர்வில் கலந்துகொண்டார். (மஇ)

## மாட்டிறைச்சிக்கு...

தெரிவித்துள்ளதால், அது நாடாளுமன்றில் சட்டமாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
நேற்று நாடாளுமன்ற அமர்வு நடைபெற்றது. அதற்கு இடையே நடைபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான கலந்துரையாடலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச இந்தயோசனையை முன்வைத்துள்ளார்.
பசு, மாடு மதங்களுடன் தொடர்புபட்டுள்ளதால் கால்நடைகளைக் கொலை செய்வதற்குத் தடை விதிப்பது சிறந்தது. உள்ளூர் கால்நடைகளை இறைச்சியாக்காது தேவைப்பட்டால் மாட்டிறைச்சியை இறக்குமதி செய்ய ஒரு திட்டத்தைத் கொண்டு வர முடியும் என்று மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் இந்த யோசனைக்கு பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர். அதனால் இந்த யோசனை நாடாளுமன்றுக்குக் கொண்டு செல்லப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-இ)



## பெலாரஸ் போராட்டக்காரர்கள் 633 பேர் கைது!


மின்ஸ்க், செப்.9
பெலாரஸ் ஜனாதிபதி அலெக்சாண்டர் லுக சென்கோவுக்கு எதிராக ஆறு வாரங்களாக தொடர்ச்சியாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களில் குறைந்தது 633 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என உள்துறை அமைச்சு கடந்த ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளது.


தலைநகர் மின்ஸ்கில் இராணுவம் மற்றும் நீர் பீச்சியடிக்கும் வாகனங்கள் நிறுத்தப்பட்ட நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆயிரக்கணக்கானோர் கடும் பாதுகாப்பை மீறி பேரணி நடத்தினர்.

கடந்த மாதம் இடம்பெற்ற தேர்தலில் லுக சென்கோ மீண்டும் வெற்றியீட்டியதில் தேர்தல் மோசடி இடம்பெற்றுள்ளது என்ற குற்றச்சாட்டு இருந்து வரும் நிலையில் அவரை பதவி விலகும்படி ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரி வருகின்றனர். இந்த எதிர்ப்புப் போராட்டங்களில் இதுவரை நால்வர் உயிரிழந்துள்ளனர். எதிர்க்கட்சியின் பெரும்புள்ளிகள் பலரும் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். கைதாகும் அச்சுறுத்தல் காரணமாக மற்றொரு செயற்பாட்டாளரான ஓல்கா கெவல்கோவா, போலந்தில் தஞ்சமடைந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)

### 8 வருட தனிமைக்கு முடிவு

# புதிய இருப்பிடம் செல்லும் உலகின் தனிமையான யானை





இஸ்லாமபாத், செப்.9
8 வருடங்களாக தனிமையில் வசித்துவந்த உலகின் மிகவும் தனிமையான யானை என்றழைக்கப்பட்ட, 'காவன்'எனும் யானை தனிமையிலிருந்து விடுவிக்கப்பட்டு புதிய இருப்பிடத்துக்கு மாற்றப்படவுள்ளது.

1985 ஆம் ஆண்டில் இலங்கையில் பிறந்த காவன், அவ்வருடம் இலங்கை அரசினால் பாகிஸ்தானுக்கு அன்பளிப்பு செய்யப்பட்டது. இந்த யானைக்குத் துணையாக பங்களாதேஷிலிருந்து 1990 ஆம் ஆண்டு சஹெலி என்ற யானை கொண்டுவரப்பட்டது. 2012 ஆம் ஆண்டு சஹெலி உயிரிழந்தது. 2002 ஆம் ஆண்டுக்கு பின்னர் மோசமான நடவடிக்கை காரணமாக சங்கிலியால் கட்டப்பட்டிருந்தது. தனது துணையை இழந்த பின்னர் காவன் தனிமையில் வசித்துவந்தது. 2015இல் இஸ்லாமபாத் சென்ற கலிபோர்னியாவைச் சேர்ந்த மிருக வைத்தியர் சமர்கான் என்பவர், காவனின் நிலையைக் கண்டு அது தொடர்பில் இணையம் மூலமான மனுவொன்றில் கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கையை ஆரம்பித்தார். காவனை விடுவிக்கக் கோரி கையெழுத்திடப்பட்ட மனுவொன்று மிருகக்காட்சி சாலையின் அதிகாரிகளுக்கும் அப்போதைய பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பிற்கும் அனுப்பப்பட்டது. காவன் தனியாக சங்கிலிகளால் பிணைப்பட்டிருந்த படங்கள் இணையத்தில் வைரலாகி பலரின் கவனத்தை ஈர்த்தன. கடந்த மே 21ஆம்திகதி பாகிஸ்தானில் இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றம் இந்த காவனை விடுவிக்க வேண்டும் என்ற தீர்ப்பை வழங்கியது, அத்துடன், காவனுக்கு பொருத்தமான சரணாலயத்தைக் கண்டுபிடிக்கவும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டது.

கம்போடியாவில் காவனுக்கு பொருத்தமான சரணாலயம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில் அதை அங்கு இடமாற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கம்போடியாவிலுள்ள 25,000 ஏக்கர் பரப்பளவுள்ள வனவிலங்கு சரணாலயமொன்றுக்கு இந்த யானை கொண்டு செல்லப்படவுள்ளது. இதற்காக மிகப்பெரிய சரக்கு விமானமொன்று பயன்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. பாகிஸ்தானிலுள்ள எஞ்சியுள்ள ஒரேயொரு ஆசிய யானை இதுவாகும். (வ)



## கறுப்பினத்தவர்களுக்கான நீதியில் பாரபட்சம்

### குற்றஞ்சாட்டுகிறார் கமலா ஹாரிஸ்

நியூயோர்க், செப்.9
அமெரிக்காவில் கறுப்பினத்தவர்களுக்கு நீதித்துறையில் பாரபட்சம் காட்டப்படுகின்றது என அந் நாட்டின் ஜனநாயகக் கட்சியின் துணை ஜனாதிபதி வேட்பாளரான கமலா ஹாரிஸ் குற்றஞ்சாட்டியுள்ளார். தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், அமெரிக்காவில் நீண்ட காலமாகவே பாரபட்சம் காட்டப்பட்டு வருகின்றது.

ஆனால் அப்படியொரு நிலை இல்லையென்று இப்போதைய ஆட்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். சட்டத்தின் கீழ் கறுப்பினத்தவருக்கும், வெள்ளையினத்தவருக்கும் ஒரே விதமான, சமமான நீதி கிடைக்கச் செய்வதே எங்கள் நோக்கமாகும் என அவர் தெரிவித்தார். (வ-இ)

## சீனாவின் கொரோனாத் தடுப்பு மருந்துகள் மக்கள் பார்வைக்கு



கொரோனாத் தொற்றுக்கான தடுப்பு மருந்துகளை பீஜிங்கில் நடைபெற்று வரும் வர்த்தக கண்காட்சியில் கடந்த 6 ஆம் திகதி முதன் முறையாக சீனா காட்சிப்படுத்தியுள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது. சினோவக் பயோடெக், சினோபார்ம் ஆகிய இரு சீன நிறுவனங்கள் இணைந்து தயாரித்துள்ள மருந்துகளே இவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (வ-இ)



## கட்டுக்கடங்காத காட்டுத்தீ: 2 மில்லியன் ஏக்கர் நாசம்

நியூயோர்க், செப்.9
அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் ஏற்பட்ட காட்டுத் தீயால் 2 மில்லியனுக்கும் அதிகமான ஏக்கர் எரிந்து நிர்மூலமாகியுள்ளது என கலிபோர்னிய வனவள மற்றும் தீ பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

கலிபோர்னியா மாநிலம் முழுவதிலும் சுவாலையுடன் பற்றியெரியும் காட்டுத் தீயைக் கட்டுப்படுத்துவதற்காக, தீயணைப்பு வீரர்கள் பாரிய போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். கலிபோர்னியாவில் பெரும் வெப்ப அலை தற்போது ஏற்பட்டுள்ளது. லொஸ் ஏஞ்சலெஸ் நகரில், வரலாற்றில் மிகவும் அதிகமான வெப்பநிலையான 49.4 பாகை செல்சியஸ் நேற்றுமுன்தினம் பதிவாகியுள்ளது. இருப்பினும் இந்த வெப்பநிலை இன்றிலிருந்து குறைவடையும் எனவும் காற்று அதிகரித்த வேகத்தில் வீசக்கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றதுஎனஅமெரிக்கதேசிய காலநிலை சேவைகள் நிலையம் எதிர்வுகூறியுள்ளது. கலிபோர்னிய மாநிலத்தில் ஏற்பட்டுள்ள 24 வெவ்வேறு காட்டுத் தீகளை அணைப்பதற்காக 14,000 இற்கும் அதிகமான தீயணைப்பு வீரர்கள் போராடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)





# ஐக்கிய வி.கழகம் சம்பியன்

கரணவாய், செப்.9

கரணவாய் விளையாட்டுக்கழகம், யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக 21 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியை நடத்தியது. கரணவாய் விளையாட்டுக் கழகத்தின் வெற்றிக்கிண்ணத்தை, அச்சுவேலி ஐக்கிய விளையாட்டுக் கழகம் தமதாக்கியது.

இதன் இறுதியாட்டமும், பரிசளிப்பு நிகழ்வும் கடந்த ஞாயிறு கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் அல்வாய் மைக்கல் விளையாட்டுக் கழகமும், அச்சுவேலி ஐக்கிய விளையாட்டுக்கழகமும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய அச்சுவேலி ஐக்கிய விளையாட்டுக்கழகம் நிர்ணயிக்கப்பட்ட பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 69 ஓட்டங்களைப் பெற்றது.

இந்த அணி சார்பாக பிரதீப் 20 ஓட்டங்களையும், சைலு 18 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் கிருஷன் 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

70 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்குக் களமிறங்கிய மைக்கல் அணி அச்சுவேலி அணியினரின் அபார பந்துவீச்சுக்கு முகம்கொடுக்க முடியாமல் 20 ஓட்டங்களுடன் சுருண்டது. இந்த அணி சார்பாக பால்ராஜ் அதிக பட்சமாக 10 ஓ.ட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் கபீசன் 4 இலக்குகளையும், செந்துஜன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக அச்சுவேலி அணியைச் சேர்ந்த கயீசனும், தொடர் ஆட்டநாயகனாக மைக்கல் அணியைச் சேர்ந்த கிருசிகனும் தெரிவுசெய்யப்பபட்டனர். (ற-108)

# சேரீனா, டொமினிக் காலிறுதிக்குத் தகுதி

நியூயோர்க்கில் நடைபெற்று வரும் அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் போட்டியில் செரீனா, டொமினிக் இருவரும் கால்இறுதிக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

கிராண்ட்சிலாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் போட்டி நியூயோர்க்கில் நடைபெற்று வருகின்றது.

23 கிராண்ட்லாம் பட்டம் பெற்றவரும், 3 ஆம் நிலை வீராங்கனையுமான செரீனா வில்லி யம்ஸ் (அமெரிக்கா) 4 ஆவது சுற்றில் கிரீஸ் நாட்டைச் சேர்ந்த மரியா ஷகாரியை எதிர்கொண்டார்.

இதில் செரீனா முதல் செட்டை 6:3 என்ற கணக்கில் எளிதாகக் கைப்பற்றினார். 2 ஆவது செட்டில் இருவரும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்றனர். இதில் ஷகாரி 8:6 என்ற கணக்கில் வெற்றிபெற்றார். வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் 3 ஆவது மற்றும் கடைசி செட்டில் செரீனா ஆக்ரோசமாக ஆடினார். இதனால் அவர் 6:3 என்ற கணக்கில் வென்று காலிறுதிக்கு தகுதி பெற்றார்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த 4 ஆவது சுற்றில் 2 ஆம் நிலை வீரரான டொமி னிக் தீம் (ஆஸ்திரியா) 7:6 (74), 6:1, 6:1என்ற கணக்கில் டெலிக்சை (கனடா) வீழ்த்தி காலிறுதிக்கு தகுதி பெற்றார். (ற)

## விளையாட்டு விழாவுக்கான ஆவணங்களை ஒப்படைக்குக!

கரணவாய், செப்.9

கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் பதிவுசெய்யப்பட்ட கழகங்கள், நடைபெறவுள்ள விளையாட்டு விழா தொடர்பாக இதுவரை ஒப்படைக்காத ஆவணங்களை விரைவில் ஒப்படைக்குமாறு கரவெட்டிப் பிரதேச செயலர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

வருடாந்த விளையாட்டு விழா இந்த மாதம் இறுதியில் நடத்தப்படவுள்ள நிலையில், கழகங்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட ஆவணங்களை உரிய முறைப்படி ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சகல கழகங்களும் தமது நிதி நடவடிக்கைகளை எதிர்வரும் நவம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவு செய்து வருடாந்தப் பொதுக் கூட்டங்களை எதிர்வரும் டிசெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தி, அதன் அறிக்கையை எமக்கு அனுப்பி வைக்கவேண்டும் - என்றார். (ற-108)

## கரப்பந்து நடுவர் சங்கத்துக்கு சுதேஷ்குமார் தெரிவு

கொழும்பு, செப்.9

இலங்கை கரப்பந்து நடுவர்கள் சங்கத்தின் செயற்குழு உறுப்பினராக என். சுதேஷ்குமார் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.



இலங்கை கரப்பந்து நடுவர்கள் சங்கத்தின், அலுவலர்களின் தேர்தல் மகாரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உட்புற மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதில் செயற்குழு உறுப்பினர்களாக 13 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

13 பேரில் ஒருவராக வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழரான என்.சுதேஷ்குமார் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் 2015 ஆம் ஆண்டு சர்வதேச கரப்பந்தாட்டப் பரீட்சையினை அல்ஜீரியா நாட்டில் முடித்துள்ளார். 2017 ஆண்டு ஈரான் நாட்டில் நடைபெற்ற 22 வயது பிரிவினருக்கான ஆசிய கரப்பந்தாட்டப் போட்டி மற்றும் 2018 ஆம் ஆண்டு ஈரான் நாட்டில் நடைபெற்ற 18 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 12 ஆவது ஆசிய நாடுகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டப் போட்டிகளுக்கு இவர் மத்தியஸ்தராகவும் கடமையற்றியுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் உப தலைவராகவும், வட மாகாண கரப்பந்தாட்ட நடுவர் சங்கத்தின் தலைவராகவும் கடமையற்றி வருகிறார். (ற)

## பார்சிலோனாவுடன் மீண்டும் மெஸ்சி

அர்ஜென்டினா கால்பந்து நட்சத்திர வீரர் மெஸ்சி, பார்சிலோனா கால்பந்து அணியின் பயிற்சி முகாமில் நேற்றுப் பங்கேற்றார்.

அர்ஜென்டினா கால்பந்து நட்சத்திரம் லயோனல் மெஸ்சி, பார்சிலோனா கழக அணியிலி ருந்து இலவச பரிமாற்றத்தின் அடிப்படையில் வெளியேற விருப்பம் தெரிவித்து இருந்தார். ஆனால் அதற்கு கழக நிர்வாகம் சம்மதிக்காததால் இழுபறி நீடித்த நிலையில் எதிர்வரும் சீசனில் பார்சிலோனா அணிக்காக தொடர்ந்து விளையாடுவேன் என்று தெரிவித்தார். இந்தப் பிரச்சினை காரணமாக சில நாள்களாக பார்சிலோனா அணியின் பயிற்சி முகாமுக்கு செல்லாமல் இருந்த மெஸ்சி நேற்றுமுன்தினம் பயிற்சியில் பங்கேற்றார். (ற)

விற்பனை
அலுவலக தளபாடங்கள் விற்பனைக்குண்டு.
(Desk table and chairs-(DAMRO)
076 691 1081

BARATHY
பிரதான வீதி - சித்தன்கேணி
(கண்ணா கிளினிக் அருகில்)
O/L Day Class
4 மாத துரித மீட்டலும்
விசேட பயிற்சி வகுப்புகளும்
புதிய வகுப்பு நாளை ஆரம்பம்
10.09.2020 வியாழன்
காலை 8.00 மணி
உங்கள் அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும்
மூன்றாம் தவணைக்கான
6-11 வரையான வகுப்புகள்
ஆரம்பமாகி நடைபெறுகின்றன
எமது தனித்துவம் பெற்ற ஆசிரியர் குழாமின் வழிகாட்டலில் அனைத்து வகுப்புகளும் நடைபெறுகின்றன.
தொடர்புகளுக்கு: 077 376 3511

Techno World
தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.
A/L 2020 தொழில்நுட்ப பிரிவு
மாபெரும் விசேட செயலமர்வு
பொறியியல் தொழில்நுட்பம்
அருண், சிவஜன், நிசாந்தன், கேதீஸ்
உயிர்முறைமைகள் தொழில்நுட்பம்
திருக்குமரன், நிறோசன், ஜெயந்தன், சிவகுமார்
தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
சக்தி, ராகவன், முருகநிரோஜன், லவன்
திகதி - 09-12,12-15,25-27
ஆரம்பம் 10.09.2020 (8am - 2.30pm)
தொடர்புகளுக்கு : 0770175346, 0771703549



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.09.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.